www.tamilarangam.net

சரிநிகர்
'SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**சந்திரிக்கா வேதம்!**

கள்ளுக்கு வேணும கடலைவடை: காட்டெருமை
துள்ளுக்கு வேணும் துர்ச்சேறு-பிள்ளாய்கேள்
போருக்கு வேதம் பொய்அன்றோ? சந்திரிக்கா
சீருக்குத் தணிக்கை சிரம்!

-ஈழமோகம்

இதழ் 148 ஜூன் 11 - ஜூன் 24, 1998 விலை ரூபா 10.00



## செய்தித் தணிக்கை: யுத்தமும் தணிக்கையும்!



## அக்கரைப்பற்று: இன ஐக்கியமும் இதயக் குமுறலும்!



## அணுக்குண்டுப் பரிசோதனை: இந்துக் குண்டும் இஸ்லாமியக் குண்டும்!



# திருமலை : திட்டமிட்ட பேரினவாத ஆக்கிரமிப்பு!

இலங்கை இனப்பிரச்சினையின் வரலாறு உக்கிரமடையத் தொடங்கியதே வடக்கு கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பூமியைப் பறித்தெடுக்கும் முகமாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் நடாத்தப்பட்டு வந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாலேயே என்பது பள்ளிப் பாடம். ஆயினும், இனப்பிரச்சினையை அரசியல் தீர்வொன்றின் மூலமாக தீர்த்து வைக்கப்போவதாக அறிவித்து ஆட்சிக்கு வந்த இன்றைய அரசாங்கத்திற்கு இந்தப் பள்ளிப்பாடம் கூட இன்னமும் தெரிந்ததாகத் தெரியவில்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காக என்ற பெயரில் வெளிப்படையாகவே இராணுவத்தினரால் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான நிலங்களில் இருந்து அம்மக்கள் வெளியேற்றப்பட்டு, சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். குடியேறும் மக்களிடம் ஆயுதம் வழங்கப்பட்டு அவர்கள் ஒரு துணைப்படை போல இயங்க அனுமதிக்கப்படுகின்றனர். ஒருபுறம் செய்தித் தணிக்கையை அமுல் செய்தபடி தீவிர யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதே வேளை, கொஞ்சம் கொஞ்சமாக, தமிழ் முஸ்லிம் மக்களின் நிலங்களைப் பறித்தெடுத்துக் கொண்டிருக்கின்றது இந்த பேரினவாத அரசாங்கம்.

திருமலை மாவட்டத்தில் மட்டும் இதுவரை 90 குடியேற்றங்கள் நடந்துள்ளன. இவற்றுள் லிங்கநகர் போன்ற அண்மைக்கால நிலப்பறிப்புக்கள் உள்ளடக்கப்படவில்லை. முப்பதுகளில் டி.எஸ்.சேனநாயக்க காலத்தில் முளைவிட்ட இந்த ஆக்கிரமிப்பு, அவர் வழிவந்தவர்களான ஐ.தே.க.வினரால் மட்டுமன்றி இன்றைய ஆட்சியாளர்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இனப்பிரச்சினைக்கான இன்றைய அரசாங்கத்தின் தீர்வு முயற்சியில் இதுவும் ஒரு அம்சமோ தெரியவில்லை. பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களே தான் கூற வேண்டும்.

(மேலதிக விபரங்கள் பக்கம் 03 இல்...)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'இடையில் சிக்கி இறந்த' பெண் புலி

கடந்த 30.5.98 அன்று மாலை 6.30 மணியளவில் குருநகர் பாஷையூர் சோதனைச் சாவடியில் வைத்து இரு பெண் புலிகளை இராணுவத்தினர் சோதனையிட முயன்றபோது அவர்கள் கிரனைட்டுக்களை வீசியும் பிஸ்டலால் சுட்டும் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து இராணுவத்தினர் வீதியால் போனோர் வந்தோரைக் கடுமையாகத் தாக்கியதுடன், வீடுகளுக்குள்ளும் புகுந்து பெண்களையும் இழுத்து வந்து வீதியில் வைத்து விறகு கட்டை போன்றவற்றால் தாக்கியுள்ளனர். இச்சம்பவத்தில் த. சுகந்தி (19), ஏ. அருளம்மா (34), எரித்திரியா (65), அந்தோனி (70), ஆனந்தராசா (29) ஆகியோர் கடும் காயங்களுக்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்கள். இவர்களை விடச் சுமார் இருபது பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

பாஷையூரைச் சேர்ந்த தேவதாஸ் ஜெதீனா (சுபா, சுபாஜினி) (19), இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளார். பாஷையூர் இரண்டாம் குறுக்குத்தெருவில் வசித்து வரும் இவர் குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியில் உள்ள அவரது சகோதரியின் வீட்டிற்குச் சென்று விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கையிலேயே கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது. சம்பவதினம் இவர் தனது சகோதரியின் வீட்டிலிருந்து இவரது மைத்துனருடன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் ராஜேந்திரா பேங்ஷல் வீதிச்சந்தியில் வைத்து இராணுவத்தினரால் மறித்து, இவரது மைத்துனர் மரியதாசின் கையை மணந்து பார்த்துவிட்டு உனது கையில் வெடிமருந்து மணக்கிறது. நீதான் தாக்கிவிட்டு ஓடியிருக்கிறாய் என மிரட்டவே அவர், நான் இப்போது தான் வேலை முடிந்து வந்து குளித்துவிட்டு வருகிறேன் என்றாராம். உடனே அவர்கள் நீ வெடி மருந்து மணக்காமல் இருப்பதற்காகத் தான் குளித்துவிட்டு வருகிறாய். நீ தான் தாக்கி விட்டு ஓடினாய் என்று கூறித் தாக்கத் தொடங்கினராம். ''இதோ புலி'' என்று கூச்சலிட்டதும் நின்ற இராணுவத்தினர் அனைவரும் ஓடிவந்து மைத்துனரையும், ஜெதீனாவையும் பதம் பார்க்கத் தொடங்கினர்.

பின்னர் இருவரையும் தனித்தனியே கொண்டு சென்று தாக்கத் தொடங்கினர். ஜெதீனாவைப் பெண் இராணுவத்தினர் வளைத்துத் தாக்கினராம். மேலே தூக்கியெறிந்து பந்தாடியதாகவும் சிலர் தெரிவித்தனர். மரியதாசின் இரு கைகளையும் பின்புறம் கட்டி அழைத்துச் சென்றபோது துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்கவே ''உனது மச்சாள் சரி'' என மரியதாசிடம் இராணுவத்தினர் கூறினராம். பின்னர் கண்களையும் கட்டி மரியதாசை அழைத்துச் சென்று கண்கட்டுக்களை அவிழ்த்துவிட்டு உழவு இயந்திரமொன்றில் ஏற்றியதாகவும், உழவு இயந்திரத்தினுள் தனது மைத்துனி ஜெதீனாவும் இருத்தப்பட்டிருந்ததாகவும், தான் தனது மைத்துனி மயக்கமுற்றிருப்பதாக ஆரம்பத்தில் நினைத்ததாக மரியதாஸ் சொன்னார். பின் மரியதாஸ் விடுவிக்கப் பட்டார்.

30.5.98 அன்று இரவு 9.00 மணியளவில் ஜெதீனாவின் சடலம் சூட்டுக் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டது. இவரைப் புலி என ஒப்பமிட்டுவிட்டுச் சடலத்தை எடுத்துச் செல்லுமாறு படையினர் கூற, இவரது தாயார் அதற்குச் சம்மதிக்கவில்லை. எனினும், படையினர் இவரைப் புலி என நிரூபிக்க அதீத முயற்சி எடுத்து வந்தனர். இவர் புலி என்றே பலாலி இராணுவத் தரப்பிலிருந்து அறிக்கையும் விடப்பட்டது. பின்னர் 4.6.98 அன்று மோதல் நடைபெற்ற போது இடையில சிக்கி (Cross Fire) மாண்டதாகப் படையினர் மஜிஸ்திரேட் முன்னிலையில் கூறிச் சடலத்தைக் கையளித்தனர். இவரது பிரேதப் பரிசோதனை சரியாக நடைபெறவில்லை. எனவே, சடலத்தைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல வேண்டும் என யாழ். மருத்துவமனைச் சட்ட வைத்திய அதிகாரி நீதிபதியிடம் கோரிக்கை விடுத்தார். எனினும், நீதிபதி சட்ட வைத்திய அதிகாரியின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. இச்சம்பவத்தைத் தொடர்ந்து யாழ். நகர இராணுவத் தளபதி சுசந்த மென்டிஸ் இப்படியான சம்பவங்கள் இனிமேல் நடைபெறமாட்டா எனப் பொது மக்கள் முன்னிலையில் உறுதியளித்துள்ளார். மென்டிஸ் இப்படிக் கூறுவது இது மூன்றாவது தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஜெதீனா இறந்த பின் சுடப்பட்டாரா? அல்லது சூடு பட்டு இறந்தாரா என்பது தெரியவில்லை.

**எழுவான்.**

# பிரபாகரனின் சயனைட்!

திருகோணமலை பாலையூற்று பகுதியைச் சார்ந்த அருள்தாஸ் எனும் 17வயது இளைஞன் ''அனுர ஐஸ் பெக்டரி'' லொறியில் குளிர்பானம் ஏற்றி இறக்கும் தொழிலாளியாக கடமையாற்றி வந்தார்.

இவர் கடந்த மே 8ம்திகதி குளிர்பானம் ஏற்றிக்கொண்டு வருவதற்காக லொறியில் கொழும்புக்கு சென்றிருந்தார். அளவை வெலிவேரி பகுதியில் இந்த லொறியை பொலிசார் இடைமறித்து பரிசோதனை செய்தனர். அவ்வேளையில் அருள்தாசிடம் தேசிய அடையாள அட்டை இருக்கவில்லை. அவரிடம் மாவட்ட அடையாள அட்டை மாத்திரமே இருந்தது.

''தேசிய அடையாள அட்டைபெற தமக்கு உரிய வயது இல்லை'' என்று அவர் காரணம் கூறியும் பொலிசார் ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் கம்பஹா ரிமான்டுக்கு அனுப்பப் பட்டார். அதன்பின் மஹர ரிமான்டுக்கு அனுப்பப்பட்டார். 10நாள் ரிமான்ட் வாழ்க்கையை பல கஷ்ரங்களுடன் கழித்த இவர் கம்பஹா நீதிவான் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். இவருக்காக ஆஜரான சட்டத்தரணியின் திறமையினால் இவர் குற்றமற்றவர் என நீதிவானால் விடுதலை செய்யப்பட்டார்.

அருள்தாஸ் கடந்த 21ம்திகதி வீடு வந்து சேர்ந்தார். இவரைக் காணவில்லை என்று அறிந்த பெற்றோர் தகவல் அறிந்து கம்பஹா சென்று தமது மகனை விடுவித்துக்கொண்டு வந்தனர்.

இவரை கைது செய்து கொண்டு சென்றவர்கள், அளவ்வ பெலிவேரி பொலிஸ் நிலையத்தைச் சார்ந்த காமினி, லால் ஆகிய பொலிஸ்காரர்களே. இவர்கள் இவரை தாக்கியதுமின்றி ரிமான்டில் இருந்த கைதிகளைக் கொண்டும் தாக்குவித்துள்ளனர்.

அது மாத்திரமல்ல, ரிமான்டில் இவருக்கு புதுப்பட்டமும் வழங்கப்பட்டதாம். ''பிரபாகரனின் சைனைட்'' என்று இவரை சக கைதிகள் பகிடி பண்ணுவார்களாம்.

லொறிசாரதி சிங்களவராக இருந்தும் இவருக்காக வாதாடினார். ஆனால் பலன் அளிக்கவில்லை.

பொலிஸ்காரர்கள், ஜெயில்காட்மார், கைதிகளால் ஒவ்வொருநாளும் அருள்தாஸ் நையப்புடைக்கப்பட்டார். 17வயது வாலிபன் இந்த அடி உதைகளை வேண்டி உயிருடன் வீடுவந்து சேர்ந்ததே பெரிய காரியம் என பாலையூற்று மக்கள் பேசிக்கொள்கின்றனர். இவர் தொழில் புரியும் ''அனுர ஐஸ் பெக்டரி'' உரிமையாளரும் சிங்கள இனத்தைச் சார்ந்தவர். அவர்கூட நிலைமையை நேரில் சென்று விபரித்தும் அருள்தாசை இந்த சித்திரவதையில் இருந்து காப்பாற்ற முடியவில்லை.

**துட்டகைமுனு, திருகோணமலை**

# மர்மம் என்ன ?

கடந்த 29.4.98 அன்று மாலை 7.15 மணியளவில் உடுப்பிட்டியைச் சேர்ந்த கணேசலிங்கம், சிவவாசன் ஆகியோர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது, ஆவரங்காலில் வைத்து இவர்களது மோட்டார் சைக்கிள், இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிளுடன் மோதியது. இதனை அடுத்து இவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அனுமதிக்கப் பட்ட ஓரிரு தினங்களில் சிவவாசன் காலமானார். கணேசலிங்கம் கோமா நிலையில் இருந்து காலமானார். இவரது மண்டையில் காயம் இருந்தது. இதனால் மருத்துவ மனையில் வைத்து

இவருக்குப் பிரேத பரிசோதனை தேவையில்லையெனக் கூறி இவரது சடலத்தை உறவினரிடம் கையளித்துள்ளனர். ஆனால், இவர்கள் இருவரும் விபத்து நடந்த பின் கடுமையாகத் தாக்கப்பட்டதாகப் பொது மக்கள் சிலர் கூறியுள்ளனர். இயற்கை மரணம் எய்துபவர்களையும், பொலிடோல் கேசுகளையும் வைத்துக் கட்டாயப்படுத்திக் கீறிக் கிழிக்கும் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம், இந்த விபத்து மரணத்துக்குப் பிரேத பரிசோதனை தேவையில்லையென்று கூறியதன் மர்மம் யாதோ? பின்னணியில் ஏதேனும் அழுத்தங்கள் பிரயோகிக்கப் பட்டனவா?

# அது வேறு கதை ...?

இந்த அரசின் மிகப்பெரிய சாதனையாக எதனைக்கொள்ளலாம்? ஐ.தே.கட்சிக்காலத்தில் ஓரளவிற்கேனும் பக்கச்சார்பின்றி உண்மையாகவே மனித உரிமைகள் மீது அக்கறைக் கொள்வதாக தம்மை இனங்காட்டிக் கொண்ட அமைப்புகளை, அந்த ஐ.தே.கட்சியினைப் போலவே தானும் நடந்து கொண்டாலும், தன் சார்பாக இழுத்து வைத்திருப்பதும், தனது அடாவடித் தனங்களை கூட எதிர்க்கும் மனப்பான்மை வளரவிடாதளவிற்கு அவற்றில் இருப்பவர்களை தனக்குள் உள்வாங்கிக் கொண்டதுமே ஆகும். இது அரசின் மகா சாதனை என்றே கூறவேண்டும். இந்த அமைப்புக்கள் அரசின் எந்தவொரு அடாவடித் தனத்தையும், இனப் படுகொலைகளையும் இன்று வரை எதிர்க்கவில்லை என்பதே இதற்கு நல்ல சாட்சி.

சரோஜினியின் படுகொலை உண்மையில் ஒரு நாகரீகமான சமூகத்தால் கண்டிக்கப்பட வேண்டியதே. ஆனால், இதை பெண்களுக்கு எதிரான ஒரு வன்முறையாகக் கொள்ளலாமா? சரோஜினி அவர்கள் ஒரு பெண் என்பதைத் தவிர இதை பெண்களிற்கு எதிரான ஒரு வன்முறையாக ஏற்றுக்கொள்ள வேறு காரணம் ஏதும் இருப்பதாக தெரியவில்லை. ஆயினும், இவ்வாறு ஏற்றுக்கொண்டு சில அமைப்புக்கள் ஜூன் 2ம்திகதி அன்று அதற்கு எதிராக பிக்கெட்டிங் செய்தன. சரி, அவர்கள் கருத்தியலின்படி அதை பெண்களிற்கு எதிரான ஒரு வன்முறையாக ஏற்றுக் கொண்டால் அவர்களிடம் நேரிடையாக கேட்க வேண்டிய சில கேள்விகள் உள்ளன. அண்மையில் அரச படையால் யாழ்ப்பாணத்தில் ஒரு ஊமைப்பெண் உட்பட பலர் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு, துன்புறுத்தப்பட்டனர். அவற்றை இவர்களால் பெண்களிற்கு எதிரான வன்முறையாக ஏற்றுக் கொள்ளமுடியவில்லையா? நூற்றுக்கணக்கான இளம் தமிழ் யுவதிகள் எவ்வித விசாரணையும் இன்றி சிறைகளில் அடைக்கப்பட்டு, பெண்களிற்கு கண்டிப்பாக தேவையான அடிப்படை வசதிகள் கூட இன்றி, அனைத்தும் மறுக்கப்பட்டு உள்ளார்களே அது இவர்களின் கண்ணிற்கு புலப்படவில்லையா? நூற்றுக்கணக்கான தமிழ் இளம் பெண்கள் விசாரணை எனும் பெயரில் இலங்கை முழுவதுமே இரவுவேளைகளில், எந்த ஒரு பெண் பொலிசின் உதவியும் இன்றி ஆண் பொலிஸ்காரர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர். இது பெண்களிற்கு எதிரான கடும் மனித உரிமை மீறலாக இவர்களின் மாறுபட்ட புதுமையான கருத்தியலிற்கு புலப்படவில்லையா?

அத்துடன், சரோஜினியின் படுகொலையை படுகொலை கலாசாரம் என்றும், நிராயுதபாணி மீதான கொடூர தாக்குதல் என்றும் கூறி அதை எதிர்ப்பதெல்லாம் சரி. ஆனால், நாகர்கோயிலில் இளம் அப்பாவிப் பள்ளிச் சிறார்களை குண்டு போட்டு அரசு அழித்தவேளை அதை யாரும் எதிர்க்கவில்லை? நவாலித் தேவாலயத்தில் குண்டு வீசப்பட்டு அங்கு தங்கியிருந்தோரை கொன்றொழித்த போது மாபெரும் இனப் படுகொலையாக அதை எதிர்த்து வீதியில் நின்று யாரும் சுலோகம் பிடிக்கவில்லை? இன்று வரைக்கும் இவ் இரு இனப்படுகொலை செயலிற்கும் அரசு ஆகக்குறைந்தது ஒரு வருத்தம் தானும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் கூட வன்னியில் அரசால் போடப்பட்ட குண்டினால் வீட்டிலும், வீட்டுத் தோட்டத்திலும் வேலை செய்து கொண்டிருந்த அப்பாவித் தமிழ் இளம்பெண்கள் பலியாகினர். அது நிராயுதபாணிகள் மீதான தாக்குதலாக இல்லாமல் வேறு என்ன?

நான் இப்படிக் கேட்டதும், சரோஜினியின் படுகொலையை எதிர்ப்பது தவறு என்று கூறுகிறேன் என அர்த்தப்படுத்தி, அதற்காகவே கூச்சல் போடும் ஆசாமிகளும் உள்ளனர். சரோஜினியின் படுகொலை எதிர்க்கப்பட வேண்டிய ஒரு விடயமே.

ஆனால் எனது கேள்வியெல்லாம் புலிகளின் அல்லது அரசிற்கு எதிரானவர்களின் கொடூரங்களை மட்டுமே எதிர்த்துக் கொண்டு அரசின் சகல பேரினவாத, இராணுவ, கலாசார ஆக்கிரமிப்புக்களையும், தமிழ் மக்கள் மீதான அழிவுகளையும் கண்டும் காணாது ஏன் இருக்கின்றனர் என்பதே!

# வரலாற்றுச் சொந்தம் ...?

எங்களில் சிலரிற்கு இப்போது புதுவித காய்ச்சல் வந்துள்ளது. டெங்கோ, புளூவோ, அல்லது வைரஸ் காய்ச்சலோ அல்ல. இது வேறு. அதுவும் இந்தியா அணுகுண்டு வெடிச்சதும் இக்காய்ச்சல் முத்திப்போச்சுது. பி.ஜே.பி. இந்தியாவில் இந்துத்துவம் எனும் கொள்கையில் பிடிப்பாக இருக்கும் ஒரு கட்சி. இந்திய தேசிய உணர்வை மீளக் கட்டியெழுப்ப போகிறேன் பேர்வழி என்று கூறிக்கொண்டு மதவாதத்தை கையிலெடுத்து இருக்கும் ஒரு கட்சி அது. அது வந்தபின் இங்குள்ள சிலரிற்கும் அந்த எண்ணம் வந்துவிட்டது. எனது நண்பர் ஒருவரும் அதில் அடக்கம். அவர் என்னிடம் சொன்னார். ''இந்துக்களிற்கு தான் இந்தியா சொந்தம்'' என்று. நான் ''ஏன் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் வேறு மதத்தவர்களும் அங்கிருக்கிறார்களே'' என்றேன். மனுசன் விட்டேனா பார் என்று, ''அவர்கள் எல்லாம் மத மாற்றத்திற்குட்பட்டவர்கள். முந்தி அவர்கள் இந்துக்களாகத் தான் இருந்தவர்கள்'' என்றார்.

நான், ''முந்தி என்றால்...''

நண்பர், ''ஐநூறு, அறுநூறு வருடங்களிற்கு முன்பு''.

நான், ''அப்ப அவர்களிற்கும் தானே நாடு சொந்தம்''.

நண்பர், ''அது எப்படி? ஆரம்பத்தில் இருந்து வாழ்பவர்கள் இந்துக்கள் தான். மொகாலயர்கள், போர்த்துகீசர், ஆங்கிலேயர் இவர்களெல்லாம் பிறகு வந்தவர்கள் தானே''.

நான் , ''அப்படி என்றால்''

நண்பர் ''இந்தியா முன்பிருந்தே இருந்த இந்துக்களிற்குத் தான் சொந்தம். தவிரவும் இந்துக்களிற்கு ஒரு நாடும் இல்லை. முஸ்லிம்களிற்கு என்றால் எத்தனை நாடுகள் இருக்கு. எனவே இந்துக்களிற்கு அவசியம் ஒரு பெரிய பலமான நாடு தேவை''. நான் சிறிது நேரம் அவரை உற்றுப்பார்த்தேன். அவர் புலிகளில் நல்ல அபிப்பிராயம் உள்ளவர். விடுதலை கிடைக்க வேண்டும் என கூறிக் கொண்டிருப்பவர். அவரிடம் இறுதியாக சொன்னேன், ''இதைத்தானே பௌத்த பேரினவாத சிங்கள அரசுகளும் சொல்கின்றன. தமிழ் மக்கள் பிறகு வந்தவர். மலையக மக்கள் வந்து நூறு, நூற்றைம்பது வருசம் தான் ஆகி இருக்கு. எனவே அவர்களிற்கு எதற்கு உரிமைகளும், மண்ணாங்கட்டியும் என்றும், சிங்களவர்களிற்கு வேறு நாடே இல்லை. இதைவிட்டால் வேறு என்ன நாடு இருக்குது என்றும் தானே கேட்கினம். நீர் சொல்ற நியாயம் அப்ப இவர்களிற்கும் பொருந்துதே'' என்றேன்.

மனுசன் பேயறைந்தவர் மாதிரி ஆகிவிட்டார். நான் சொன்னது உறைந்து இருக்கவேண்டும் போல. அவர் எழுந்து போய் விட்டார். என்ன செய்யலாம் ஒரு பெருமூச்சு விடுவதைத் தவிர?

கா.சூ.தர்ஷி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலை: திட்டமிட்ட குடியேற்றம் - எல்லாமே பாதுகாப்புக்காகத்தான்!

“திருகோணமலையில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்களின் சொந்தப் பூமியில் இருந்து வெளியேற்றுவதும், சிங்கள மக்களை பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளி மாவட்டங்களிலிருந்து திருமலைக்குக் கொண்டு வந்து குடியேற்றுவதும் தொடருமானால், இன்னும் ஒரு பத்து வருடத்தில் திருகோணமலை தமிழ் மண், தமிழர் தலைநகர், தாயகம் என்ற கதைக்கே இடமில்லாமல் போய்விடும்.”

ஈழத்தமிழர் வரலாற்றில் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்த திருமலை, தமிழர் உரிமைப் போராட்டத்திலும் தனித்துவமான இடத்தைப்பிடித்துக் கொண்டிருக்கிறது. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தின் தலைநகராக விளங்கும் திருகோணமலையைச் சிங்கள மயமாக்குவதில் ஜனாதிபதி மட்டத்தில் இருந்தே திட்டமிட்ட செயற்பாடு நடைபெற்று வருகிறது.

நாட்டின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் இருந்தே திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பித்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் இன்று வரை தொடர்கின்றன.

எங்கு அரச காணிகள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் சிங்கள மக்களைக் குடியமர்த்துவதில் அரச படைகளும், அரச அதிகாரிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும், சிங்கள அரசியல்வாதிகளும், பிக்குமார்களும் என்றுமில்லாதவாறு முனைப்புடன் நீண்ட காலத்திட்டமிடலுடன் செயல்பட்டு வருகின்றனர்.

1953இல் கந்தளாயில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையானது இன்று கந்தளாயில் இருந்து சேருவில வரையும், கண்டிவீதி இருமருங்கும் சீனன்குடா, ஆண்டாள் குளம் வரையும், அனுராதபுரத்திலிருந்து பதவி சிறிபுர, கோமரன்கடவல, மொறவேவா, கன்னியா வரையும் உள்ள தமிழர் நிலம் முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது.

திருகோணமலையில் எஞ்சியுள்ள தமிழர் நிலங்களில் கோயில் காணிகள், தனியார் காணிகள், சங்கங்களின் காணிகள் உதாரணமாக இரா. சம்பந்தன் எம்.பி.யின் லிங்கநகர் காணி, திருகோணேஸ்வரம், சனீஸ்வரன், கிருஷ்ணன், வீரகத்தி, சின்னத்தொடுவாய் கோயில் காணிகள் முழுவதும் பெருந்தொகையான சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். சின்னத்தொடுவாய் பிள்ளையார் கோயிலுக்குள் (திருக்கடலூர்) சிங்கள மீனவர்கள் மீன்வலை உலர்த்துகின்றனர். மடத்தடி வீரகத்திப்பிள்ளையார் கோயிலுக்குள்ளும், கிருஷ்ணன் கோயிலுக்குள்ளும் வெளியிலும் வைத்து ஓலை, தடிகள், கற்கள் மண் விற்பனை செய்யப்படுகிறது. கோயில் காணிகளில் நிரந்தரக் கட்டிடங்கள் அமைத்து கடைகளாக வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அவ்வாறே கோணேசர் தீர்த்தக் கரையும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது.

இவ்வாறு அரச காணிகளிலும், தமிழர் நிலங்களிலும் குடியமர்த்தப்படும் சிங்கள மக்களுக்குப் படையினரால் உடனடியாக பாதுகாப்புக்காக ஆயுதங்கள் வழங்கப்பட்டு, ஊர்க்காவல் படை சம்பளமும் வழங்கப்படுகிறது. அத்துடன் நீர்விநியோகம், போக்குவரத்து என்பனவும் படையினரால் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்க அதிபரால் மீளக் குடியமர்வு நிவாரணம், வீடு கட்ட கட்டிடப்பொருட்கள், கூரைத்தகடுகள் வழங்கப்படுகின்றன. பிக்குமாரும், அரச சார்பற்ற நிறுவனங்களும் ஏனைய பொதுத்தேவைகளைக் கவனித்துக்கொள்கின்றனர். இவ்வாறு திருகோணமலை நகரின் பெரும் பகுதியும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது.

இன்று திருகோணமலையில் பிரதான வீதிகள் இருமருங்கிலும் கரையோரப் பகுதிகளில் பெரும்பகுதியும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது. இதற்குப் படையினர் கூறும் காரணம் தங்களின் பாதுகாப்புக்காகவே சிங்கள மக்கள் குடியேற்றப்படுகிறார்கள் என்பதேயாகும், அவசரகாலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே குடியேற்றுவதால் இக்குடியேற்றம் சம்பந்தமாக யாரும் எதுவும் செய்ய முடியாது என்று ஜனாதிபதியே கூறியுள்ளாராம் எனத் தமிழ் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் திருகோணமலையில் அண்மைக் காலத்தில் பன்குளம், கன்னியா பகுதியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழர்கள் இன்னும் மீளக்குடியமர்த்தப்படாமல் இருக்க சிங்கள குடும்பங்களால் அப்பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறே கடந்த வருடம் 17.10.1997 இல் லிங்க நகரில் இராணுவ முகாம் ஒன்றை அமைத்து அங்கிருந்த 250 தமிழ்க் குடும்பங்களையும் வெளியேறுமாறு படையினர் உத்தரவிட்டனர். அதனை எதிர்த்துத் தமிழ் மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர். எனினும் பயனளிக்கவில்லை. உடன் 40 குடும்பங்கள் பலாத்காரமாக அப்புறப்படுத்தப்பட்டன. இராணுவவேலி அமைத்துவிட்டு மிகுதி மக்கள் மீது வீதித் தடையரண் அமைத்து வீடுகளுக்குரிய ஓலைகள், தடிகள், சீமெந்து, கல், தகரங்கள், மின்சாரம், குடிநீர் பெற முடியாதவாறு தடைவிதித்து வாகனங்கள் - மோட்டார் சைக்கிள் கூட - கொண்டு செல்ல முடியாதவாறு தடை செய்யப்பட்டுள்ளது யாவரும் அறிந்த விடயம்.

அது மட்டுமல்லாமல் வெளியேற்றப்பட்ட 40 குடும்பங்களுக்கும் இதுவரை எந்த நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை. அத்துடன் அரச காணியில் அத்துமீறி குடியேறியோர் என்று இம்மக்கள் மீது அரசாங்க அதிபரினால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக வழக்குத்தொடரப்பட்டுள்ளது. இவை இவ்வாறிருக்க கடந்த இரண்டு வருட காலமாக இம்மக்களின் வீடுகளுக்கு ஓலை கொண்டு போவது தடை செய்யப்பட்டதால், வீடுகளை வேயமுடியவில்லை. இதனால் இம்மக்கள் வீடுகளில் இருக்க முடியாது வெளியேறுவதைத் தவிர வேறுவழியின்றி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதற்கு படையினர் கூறும் காரணம், தங்களின் பாதுகாப்புக்காகவே இவர்களை வெளியேற்றுகின்றோம் என்பதேயாகும். இவ்வாறே பாதுகாப்புக்காகவே உப்பாறு மக்களும் கடந்த 18.03.97இல் வெளியேற்றப் பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களின் வீடுகளிலும் உறுதிக் காணிகளிலும் கோயில் நிலங்களிலும் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு எந்த பாதுகாப்புக் காரணமும் சமாதானமும் தடையாக இருந்தனவோ, அதே காரணங்கள் தான் தமிழ் மக்களின் மீது அவர்களின் அடிப்படை உரிமைகள் மீதே தடைவிதிப்பதற்கும்காரணமாக உள்ளன!

**அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றங்களால் பறிக்கப்பட்டு வரும் தமிழர்களுக்குச் சொந்தமான பகுதிகளில் திருமலை மாவட்டத்தில் மட்டும் எத்தனை குடிற்றேங்கள் என்று பாருங்கள். 1998வரையான குடியேற்றங்கள் இவை. இன்னும் புதிதாக பல குடியேற்றங்கள் முளைத்து வருகின்றன.** தகவல் : தினக்கதிர் ஏப். 5 - 11. 1998

| | | |
|---|---|---|
| சிறிமாபுர | 31. கல்லாறு | 61. நிலவுக்கடவேவ |
| 2. அபயபுர | 32. அலிஒலுவ | 62. ஒட்டிசாக்குளம் |
| 3. மிகிந்தபுர | 33. சரசுரா | 63. மன்மதவாச்சி |
| 4. 4ம் கட்டை | 34. 1ம், 2ம் கொலனி | 64. சிங்கபுர |
| 5. ஆண்டான்குளம் | 35. சிறிபுர | 65. பொக்கியாட் |
| 6. வெல்கம்காரை | 36. மட்கோ | 66. உள்பத்து |
| 7. 10ம் கட்டை | 37. சேருவில | 67. நாச்சிக்குடா |
| 8. மொறகிவன | 38. கந்தளாய் | 68. 5ம் கட்டை |
| 9. மயில்வேவ | 39. 13ம் கட்டை | 69. 3ம் கட்டை |
| 10. நாமல்வத்த | 40. பன்குளம் | 70. மொறவேவா |
| 11. வானலை | 41. செவல பேக் | 71. சுமித்ராவகம |
| 12. கிளப்பன்பேக் | 42. மண்டலபுர | 72. மகாவல்கம |
| 13. நாலந்த | 43. சுமதிபுரஷ | 73. அல்லை |
| 14. கமதல்சுபுர | 44. சோமாபுர | 74. கொட்டுவே |
| 15. குறிஞ்சாக்குளம் | 45. எல்1.பி1.2. | 75. கல்கட்டுவெல |
| 16. கொறவப்பொத்தான | 46. கல்மேபுயால | 76. கோம்புக்கட்டுவ |
| 17. 6ம் கட்டை | 47. சாலியபுர | 77. கல்கனிவெவ |
| 18. 20ம் கட்டை | 48. அக்கோபுர | 78. மோறாமை |
| 19. கமதல்புர | 49. கித்துளுத்து | 79. பொத்தலவெவ |
| 20. புலஸ்திபுர | 50. அளுத்ஓயா | 80. குழுக்காவெல |
| 21. கோவில்வத்த | 51. பொலிகண்டி | 81. மீசஸ்வெல |
| 22. பாரியூற்று | 52. அடம்பன் | 82. றொட்டுவேவ |
| 23. கோவில்கடவல | 53. கல்லறவு | 83. ஆனைக்கட்டி |
| 24. 97, 98ம் கட்டை | 54. கிம்புள்பிட்டியாவ | 84. கருந்தகம |
| 25. சீனிஆலை | 55. மகாதீவுல்வேல | 85. பெக்கிலிகடவேவ |
| 26. ஜெயந்தி புர | 56. வேப்பங்குளம் | 86. தெள்ளியா |
| 27. ஜயபுர | 57. மல்கிபிறிப் | 87. சமந்தபுர |
| 28. தெகிவத்தை | 58. 98ம் கட்டை | 88. பராக்கிரமபுர |
| 29. நிலாப்பனை | 59. லங்கிரிகடவைப்பு | 89. கிரிச்சண்டுகாயலிகள |
| 30. அரிப்பு | 60. கோமரல்கலெவ | 90. 97-92-93ம் கட்டை |

**திருகோணமலையில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்களின் சொந்த பூமியில் இருந்து வெளியேற்றுவதும், சிங்கள மக்களை பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளிமாவட்டங்களில் இருந்து திருமலைக்கு கொண்டு வந்து குடியேற்றுவதும் தொடருமானால், இன்னும் ஒரு பத்து வருடத்தில் திருகோணமலை தமிழ் மண், தமிழர் தலைநகர், தாயகம் என்ற கதைக்கே இடமில்லாமல் போய்விடும்.**

இவ்வாறே திருகோணமலை மின்சார நிலைய வீதியில் புதிய பொதுச்சந்தை ஒன்று நகரசபையால் கட்டப்பட்டது. அது முற்றிலும் தமிழர் வாழும் சூழலில் அமைந்துள்ளது. ஏற்கெனவே திருமலையில் மீன்பிடி வியாபாரம், சந்தை, போக்குவரத்து ஆகிய துறைகள் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் பூரண கட்டுப்பாட்டுக்குள் போய்விட்டது. தமிழர் மீன்வியாபாரம், மரக்கறி வியாபாரம் செய்ய முடியாது. தனியார் போக்குவரத்து சேவையில் இணைய முடியாது. ஆகவே தற்போது புதிய சந்தையைத் திறந்து தமிழர் வியாபாரம் செய்ய முடியாது. புதிய சந்தை திறந்தால் பாதுகாப்புக்கும், சமாதானத்துக்கும் பங்கம் விளையும் என்பதே படையினர் விதித்த தடைக்குரிய காரணமாகும். லிங்கநகர் மாதிரி பாதுகாப்புக்காரணமும், சமாதானமும் கருதிச் சந்தையும் படைமுகாமாக மாறினாலும் ஆச்சரியமில்லை.

இவ்வளவையும் பார்த்துக்கொண்டு திருகோணமலையில் ஐந்து தமிழ்க் கட்சிகள் அலுவலகங்களை அமைத்துத் தமிழர் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றன என்பது வேடிக்கையான விடயம். அது மட்டுமன்றி பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவளித்துக் கொண்டு அரசின் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கும் அந்த யுத்தத்துக்கு நிதிதிரட்டும் வெளிநாட்டுப் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் நேரடியாகவே ஆதரவளிக்கின்றனர். இவர்களை வரலாற்றில் எவ்வாறு தமிழ் மக்களால் மறக்கவும், மன்னிக்கவும் முடியும்?

தமிழ் மக்களின் அடிப்படை உரிமை விடயங்களில் கூட தமிழ்க் கட்சிகளிடம் ஒற்றுமை இல்லை. ஒருவருக்கு ஒருவர் அள்ளி வைப்பதும், நான் முந்தி நீ முந்தி என அரசை ஆதிரிப்பதும், பத்திரிகை அறிக்கை விடுவதும் இவர்களின் கைவந்த கலை. வயிற்றுப்பிழைப்புக்கு வழியில்லையெனில், அகதிமுகாமில் தங்கி இருந்தால் தமிழ் மக்களுக்குப் பேருதவியாக இருக்குமல்லவா?

தமிழ் மக்களிடம் தமிழ்க் கட்சிகள் பற்றி அபிப்பிராயம் கேட்டபோது 90% மான மக்கள் தமிழ்க் கட்சிகள் மீது ஆத்திரமடைந்துள்ளனர். திருமலையில் ஒரு தமிழன்பரிடம் கேட்டதற்கு தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று பட்டுத் திருமலையின் இன்றைய பிரதான மண்ணோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளான லிங்கநகர் ஆக்கிரமிப்பு, கோயில் காணிகள் ஆக்கிரமிப்பு, சந்தை திறப்புத்தடை, உப்பாறு வெளியேற்றம், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், மூதூர் பொருளாதாரத்தடை ஆகியவற்றில் எதிர்ப்புக் காட்டி அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்து ஜனநாயக ரீதியிலும் போராட முடியும். ஆனால் எந்தக் கட்சியும் தயாராக இல்லை. உண்ணாவிரதத்தையும் இவர்கள் கேலிக்கூத்தாக்கிவிட்டார்கள் எனத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளை எண்ணிக் கவலைப்பட்டார் அவர்.

“ஞானம்”, திருகோணமலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உரித்துக் கொண்டாடும் நகரசபை!

திருகோணமலை மசூதி வீதி, முஹைதீன் ஜும் ஆ பள்ளி வாசலுக்குச் சொந்தமான காணிக்கு திருமலை நகர சபை உரித்துக் கொண்டாடுவது வியப்புக்குரிய தாகவுள்ளது. (நகர சபையினரின் இல. ஏசீ/02/04,23/04/98ம் திகதிய கடிதம் ஊடாக) நீண்ட காலங்களாக 36 என்ற வரிமதிப்பீட்டு இலக்கம் கொடுக்கப்பட்டு அதன் கீழ் தொடராக பல இலக்கங்கள் கொண்ட ஏறத்தாள ஒரு ஏக்கர் பரப்புக்கொண்ட அக்கா ணியில் சுமாராக 30 குடும்பங்கள் வசிக்கின்றன. அதில் வேடிக்கை என்னவென்றால் அம் 30 குடும்பங் களில் சுமாராக 7 பேர்கள் வசிக் கக்கூடிய பகுதிகளுக்கு மாத்திரமே உரிமை கொண்டாடுவது.

திருகோணமலை நகர சபை அதிகாரி களுக்கும், அக்காணியில் உட்பிரவே சிக்க தருணம் பாாததுக்கொண டிருக்கும் ஒரு சிலருக்காகவும் அக் காணியின் வரலாற்றைத் தெரியப் படுத்த வேண்டியுள்ளது. சுமாராக 60 வருடங்களுக்கு முன்னர் அக்காணி காட்டுப்பகுதி பொது மையவாடியாக பயன்பட்டது. அக்காலத்தில் காத் தான்குடியைச் சேர்ந்த மர்ஹூம் பள்ளித்தம்பி - அவ்வா நாச்சி தம்பதியினர் அக்காணியில் காடு வெட்டி குடியேறினர். காலப்போக்கில் அவர்களின் 06 பிள்ளைகளுக்குமாக அக்காணி பகிர்ந்தளிக்கப்பட்ட (தற்போது அவர்களின் பிள்ளைகளே வாழ்கின்றனர்.) பள்ளித்தம்பி அவர் களின் மரணத்தின் பின்னர் அவ்வா நாச்சியின் பொறுப்பிலே அக்காணி பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டது. அவரால் முடியாதபோது மருமகன் களில் ஒருவருக்கு அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. உறவி னர்களுக்கிடையிலான கருத்து முரண்பாடுகள் தொடர்பாக பராமரிப் புப் பொறுப்பை அப்போதைய முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசல் மரிக்கார் (நிர்வாக தலைவர்) மர்ஹூம் அப்துல் ரஸ்ஸாக் அவர்களிடம் ஒப்படைத்தனர். (சுமாராக 35 வருடங்கள் இருக்கலாம்) அன்று முதல் பள்ளிவாசல் பராமரிப்பின் கீழ வந்த அக்காணிக்கு "அக்காணியில் குடியிருக்கும் உரிமைதாரர்கள் அனை வரும் அல்லாஹ்வுக்காகவென தொடர்ந்து நிலவாடகை கொடுத்து வருகின்றனர்.

நிலைமை இப்படியாக இருக்கும் போது அக்காணியின் சில பகுதிகளை மாத்திரம் திருமலை நகர சபை உரித்துக்கொண்டாட நினைப்பது யதார்த்த நிலைமைக்குப் பொறுத்தப் பாடானதாக மட்டுமல்லாது பள்ளிவா சலுக்கான வருமான வீழ்ச்சிக்கும் வழி வகுக்கின்றது. எனவே இவ்விடயத் தில் சம்பந்தப்பட்ட பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்களும், திருகோணமலை பள்ளிவாசல்களின் சம்மேளனமும் மற்றும் சமூகப்பற்றுள் ளவர்களும் அக்கறையுடன் செயற்பட வேண்டுமென இக்காணிக் குடியிருப் பாளர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

**இளையவன், திருகோணமலை**

# ஏன் கண்டனம் இல்லை!

முதலில் மேயர் சரோஜினி யோகேஸ்வரன் அவர்களது கொலை நடந்தது. இக்கொலையை செய்தவர்கள் புலிகளா, சங்கிலியன் படையா, ஆணா, பெண்ணா என்ற விசாரணைகள் நடந்து கொண்டிருக் கின்றன.

ஆனால், அதேவேளை மாநகர சபைக்கு தெரிவானவர்கள் ஒருவர் ஒருவராக தம் பதவியை இராஜினா மாச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

முதலில் உதவி மேயர் நாவேந்தன் (திருநாவுக்கரசு) அவர்கள் பதவி விலகினார். அதற்கு அவர் தெரிவித்த காரணம் கட்சி மேலிடத்தின் மீது ஏற்பட்ட அதிருப்தி என்பது. இதை த.வி.கூ. மேலிடத்தின் அறிக்கைக ளும் உறுதிபடுத்துகின்றன.

இப்போது இவரை விட இன்னும் மூவர் இராஜினாமாச் செய்து விட்டார்கள்.

இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காரணங்கள் சொல்லப்படுகின்றன.

அவற்றில் ஒன்று சங்கிலியன் படையின் மிரட்டல் என்பது.

எப்படியோ மாநகரசபை இயங்குமோ என்ற கேள்வி பலமாக எழுந்து விட்டது.

இவர்கள் பதவி விலகாமல் இருந்திருந்தால் மட்டும் மாகாண சபை இயங்கிருக்குமா என்பது வேறு விடயம். ஆனால் அதனைப் பரீட்சிக்கும் வாய்ப்பு வரப்போவதே இல்லைப்போல தெரிகிறது.

இதைத் தவிர யாழ் வர்த்தகர் சங்க தலைவர் சின்னத்தம்பி நமசிவாயம் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார். கொலை செய்தவர் யாராக இருக்க லாம் என்ற பி.பி.சியின் கேள்விக்கு த.வி.கூ. செயலாளர் ஆனந்த சங்கரி சொன்ன பதில் 'அதைச் சொல்ல எமக்கு அதிகாரம் இல்லை' என்பதுதான்.

இதுதான் யாழ் நிலைமை என்றால், நிலைமை சுமூகமாகிவிட்டதாக அரசாங்கம் சொல்வதன் அர்த்தம் தான் என்ன?

அதுசரி, அரசாங்கம் தேர்தலை வைப்பதுதான் என்று முடிவு செய்த ஒரே காரணத்திற்காகவே தேர்தலில் நின்றதாக கூறும் த.வி.கூ. அப்படி தேர்தலில் நிற்பவர்களை பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்தினது தான் என்ற கண்டனத்தை ஏன் இன்னும் எழுப்பவில்லை?

ஒருவேளை அரசாங்கத்திற்கு அந்தப் பொறுப்பு இல்லையென்று த.வி.கூ. நினைக்கிறதோ என்னவோ?

# உண்மையிலேயே பெரியவர் தான்!

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலர் சுந்தரம் டிவகலாலா அவர்கள் திடீரென்று மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு மாற்றம் பெற் றுள்ளார். அது போலவே மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலர் கே. பரமேஸ்வரன் அவர்கள் கல்வியமைச்சுக்கு மாற்றம் பெற்றார்.

ஜூன் 3ம்திகதி வழங்கப்பட்ட கடிதங்களின் பிரகாரம் 5,6திகதி முதல் பதவி மாற்றங்கள் அமுலுக்கு வரவிருந்தன. ஆனால் திடுதிப்பென்று வெள்ளியன்று அதாவது 5ம்திகதி பாக்ஸ் செய்திகள் மூலம் இந்த இடமாற்றங்கள் ரத்துச் செய்யப் பட்டன. இருந்த பதவியிலேயே, இருவரும் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்பட்டார்கள்.

இவை சாதாரண விடயங்கள் தாம். ஆனால் இந்த பதவிமாற்றத்தின் பின்னணியில் கல்வியமைச்சின் உத்தியோகத்தர்கள் புதியதொரு நடைமுறையை உலகுக்கு அறிமுகப்படுத்தி இருப்பதுதான் சிறப்பான நிகழ்வாகும்.

அரச அதிகாரியொருவர் பதவிமாற் றம் பெற்றுச் செல்வதை எதிர்த்து ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதன் மூலம் இந்த நடைமுறை அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணக் கல்விய மைச்சின் வரலாற்றில் இம்முறை கூடான ஆர்ப்பாட்டம் மூன்றாவது தடவையாக இப்பொழுது நடந்தேறி யுள்ளது.

முதலாவது ஆர்ப்பாட்டம் தி/மேற்கு தமிழ் மகாவித்தியாலய அதிபர் பதவிப் பிரச்சினையில் எழுந்தது. சில வருடங்களுக்கு முன்னர் அப்பாட சாலை அதிபர் மரணமடைந்ததை யிட்டு அந்த இடத்துக்கு யாரை நியமிப்பது என்று கல்வித் திணைக்களம் ஆராய்ந்து கொண்டி ருக்கையில் ''இன்னாரையே நியமிக்கவேண்டும்'' என்று ஆசிரியர் ஒருவரின் பெயரைக் கூறி மாண வர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தினதும், அந்த ஆசிரியரும் தனக்குக் கிடைத்த நற்சான்றிதழாக அதனை எண்ணிச் சந்தோஷத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

''அதிபரை நியமிப்பது திணைக்க ளத்தின் பணி. கல்விகற்க வேண்டிய மாணவர்கள் நிர்வாகத்தில் தலையி டுவது தவறு'' என்று யாரும் அவர்களுக்குத் தெளிவுப்படுத்த வில்லை. தங்களுக்குள் முணுமுணுத் துக் கொண்டதோடு சரி.

இரண்டாவது ஆர்ப்பாட்டம் கல்விவலயப் பிரிப்பையிட்டுக் கிண்ணியாப் பகுதி மாணவர்களால் நடத்தப்பட்டது. கல்வி வலயம் எங்கே இருப்பினும் மாணவர்களை அது பாதிப்பதில்லை. அது நிர்வாகம், அதிபர், ஆசிரியர்கள் சம்பந்தப் பட்டது என்று விளக்கமளிக்கவும் யாரும் முயலவில்லை. அரசியல் நோக்கங்களுக்காக மாணவர்கள் இவ்வார்ப்பாட்டத்தில், பாடசாலை பகிஷ்கரிப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். இலக்குத் தெரியாதவர்களால் சுந்தரம் டிவகலாலா என்ற தனிமனிதனுக்கு எதிராக கேவ்லமான தூஷிப்புக்கள் பரப்பப்பட்டன.

இந்த இரண்டு விடயங்களில் மாணவர்கள் சம்பந்தப்பட்டது எவ்வாறு தேவையற்ற ஒன்றோ, அதுபோலவே அதிகாரியான சுந்தரம் டிவகலாலாவின் இடமாற்றத்தை ரத்துச் செய்யக்கோரி படித்த கல்வியமைச்சின் உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததும் வேண்டாத, முறைகேடான ஒன்று.

அரசாங்க அதிகாரியொருவர் இலங் கையின் எந்தப் பகுதியிலும் சேவை செய்ய ஒப்புக் கொண்டவர். இடமாற்றம், பதவிமாற்றம் என்பவை நிர்வாகச் சக்கரத்தின் இயல்பான ஓட்டங்களே. பகிரங்கமான பழிவாங் கல்கள் ஒன்று நடைபெறாத வரை தொழிற்சங்கம் கூட தனது உறுப்பி னருக்காகக் கண்டனம் தெரிவிக்க முடியாது. இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

அடிப்படை விஷயங்களில் கூட அறிவைப் பெற்றிராத ஊழியர்களை வைத்துக் கொண்டு அமைச்சொன்றை நடத்தும் சுந்தரம் டிவகலாலா உண்மையிலேயே பெரிய மனிதர் தான்.

**விவேகி**

# 'கௌரவம் போச்சு!'

திருமலை மரக்கறிச் சந்தைக் கட்டிடத்தில் வைத்து அல்லநகர் தோப்பூர் என்ற இடத்தைச் சேர்ந்த சகாப்டீன் பரீடா என்ற 16 வயதான முஸ்லிம் இளம்பெண் ஒருவர் மூன்று பேர்களால் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வெசாக் தினத்தன்று நடைபெற்றுள்ளது.

மேற்படி வெசாக் தினத்தன்று வெசாக் தின நிகழ்ச்சிகளைப் பார்க்க வந் திருந்த இந்தப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியவர்கள் கே. பி. நிமால் றோகண, கே.பி.எச். பத்ம சிறி, எஸ்.டபிள்யூ. சரத் சந்திரசிறி ஆகிய மூவருமே என இனங் காணப்பட்டுள்ளனர். பாலியல் வல்லு றவுக்குள்ளாக்கப்பட்ட இப்பெண் வாய் பேசமுடியாத ஒரு ஊமைப் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மீது நடாத்தப்பட்ட இந்த அநியாயத்திற்கு எதிராக நியாயம் கோரி திருமலை நீதிவான் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இது தொடர்பாக திருமலை அரசாங்க அதிபர் எஸ்.டி. சந்திரதாச அவர்க ளுக்கு எழுதிய கடிதமொன்றில் நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி 'இச்சம்பவத்தால் நகரசபை தன் கௌரவத்தை இழந்துள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார். தவிரவும் இவ்வா றான சம்பவங்கள் நடைபெறுவதாக முன்பும் தமக்கு தகவல்கள் கிடைத் துள்ள போதும் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க போதிய ஆதாரங்கள் கிடைப்பதோ, நகர சபையை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடிவதோ இல்லை யென்பதால் தம்மால் எதுவும் செய்ய முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




யாழ் மேயர் சரோஜினி யோகேஸ்வரன் அவர்கள் படுகொலை செய்யப் பட்டதைக் கண்டித்து கடந்த 2ம்திகதி 13 பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த 'வன்முறைக்கெதிரான பெண்கள் கூட்டமைப்பு' ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியது. பெண்களுக்கெதிரான அரசியல் வன்முறையைக் கண்டித்து இவ்வார்ப்பாட்டத்தின் போது ஆயுத கலாசாரத்தையும், வன்முறை அரசியலையும் கைவிட்டு ஜனநாயகத்தை மீட்டெடுப்போம் என்று குரலெழுப்பப்பட்டது

# 'மதியாலோசனை'

இந்த ஜூன் மாதத்தோடு நிறைவடையும் மாகாணசபை களின் ஆயுட் காலம் தொடர்பாக, ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் தேர்தலை நிறுத்திவிட்டு ஜனாதிபதி தேர்தலை நடாத்துமாறு பொ.ஐ.மு. பிரபலஸ்தர்கள் கோரிக்கை விடுத் துள்ளதாக தெரியவருகின்றது.

ஜனாதிபதி தேர்தலுடன், அரசியல் தீர்வு யோசனைகள் பற்றிய மக்களின் அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பது. இக்கோரிக்கையை முன்வைத்த பிரபலஸதர்களின் கருத்தாக உள்ளது.

மாகாண சபை தேர்தல்களை நடத்தி அதன் பின் அரசியல் தீர்வுயோ சனைகளை நிறைவேற்ற முனையும் போது, அதன் மூலம் ஸ்தாபிக் கப்படவுள்ள வலய அமைப்புகளை அமைக்க மீண்டும் தேர்தலை நடாத்த வேண்டியிருப்பதால் மாகாண சபைத் தேர்தல்கள் நடாத்துவது பிரயோச னமற்றதென்பது அவர்கள் கருத்தாக உளளது.

ஜனாதிபதித் தேர்தலில் உறுதியாக அரசு வெற்றிபெறும் எனவும், வெற்றிகொள்ளும் அச்சந்தர்ப்பத்தில் அரசியல் தீர்வுயோசனைகளையும் முன்வைத்து அதனை செயற்படுத்த முடியுமென இப்பிரபலஸ்தாகள் தலைமைக்கு அறிவுறுத்தியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





MILEN RADEV

# கண்மூடிப் பால் குடிக்கும் பூனை!

மீண்டும் ஒரு முறை செய்தித் தணிக்கையை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது அரசாங்கம். அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த செய்தித் தடை உத்தரவின் படி யுத்தம் குறித்த தகவல்கள் குறிப்பாக படை நகர்வுகள், திட்டங்கள் பற்றிய விமர்சனங்கள், உயிரிழப்புகள் சேதங்கள் என்பன பற்றிய எந்த தகவலும் வெளியிடுவது தடை செய்யப்படலாம்.

உள்நாட்டு தகவல் தொடர்பு சாதனங்கள் மட்டுமன்றி வெளிநாட்டு தொடர்பு சாதனங்களினூடாக செய்திகள் இங்கு வருவதும் தடை செய்யப்பட்டுள்ளது !

இவ்வாறு எழுதப்படும் கட்டுரைகளை பரிசோதித்துப் பார்த்து பிரசுரிக்க அனுமதிக்கவென ஒரு தகுதி வாய்ந்த அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அந்த அதிகாரி வேறுயாருமல்ல, *மேஜர் ஜெனரல் ஜாலிய நம்முனி* தான் அவர்.

இலங்கையின் செய்தித் தணிக்கை வரலாற்றிலேயே முதல் முதலாக தணிக்கை அதிகாரியாக ஒரு இராணுவ உயர் அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

1996ம் ஆண்டிலும் கூட இதே அரசாங்கம் இப்படி ஒரு தணிக்கை முறையை அமுலுக்கு கொண்டு வந்தது. அதுவும் *'ஒப்பிரேசன் ரிவிரச'* மூலமாக யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய போது இந்த தணிக்கை கொண்டு வரப்பட்டது.

இந்தத் தணிக்கை முறை அமுலுக்கு கொண்டுவரப்பட்ட போது, யாழ்ப்பாணத்தில் அரசாங்கம் செய்யும் செயல்கள் யுத்தப்பிரதேசத்திற்கு வெளியே இருக்கும் மக்களுக்கு தெரியக் கூடாது என்பதற்காகவே கொண்டுவரப்பட்டது என்பது வெளிப்படையாக தெரிந்தது. இத்தணிக்கை முறையை அப்போது எதிர்த்த பல தொடர்பு சாதனங்கள் தமதும் மக்களதும் அடிப்படை உரிமை என்பது மறுக்கப்படுகிறது என்பதற்காக

**நாசேமறுப்பான்:**

அதை எதிர்த்ததை விட, யுத்தம் பற்றிய தகவல்களை அரசாங்கம் மறைக்கும் அதே வேளை, புலிகளது தகவல்கள் உலக முழுவதும் பரவலாக சென்றடைகின்றன என்ற காரணத்திற்காகவே கண்டித்தன.

எப்படியோ மக்கள் அரசாங்கத்தினதும் புலிகளதும் தகவல்களில் மட்டுமே தங்கியிருக்க வேண்டிய நிலை இருந்தது. தனிப்பட்ட, சுதந்திர செய்திகளுக்கு வாய்ப்பில்லை என்ற நிலமை நிலவியது. இது அரசாங்கம் தான் மனம் போன படி யாழ்ப்பாணத்தில் நடந்து கொள்ள வாய்ப்பளித்தது. ஆறு மாத காலம் நடைமுறையில் இருந்த இந்தத் தணிக்கை பின்னர் ஒக்டோபர் 1996 இல் ரத்துச் செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தை கைப்பற்றி முடி சூட்டிய பின் இப்போது மீண்டும் அதே தணிக்கை உத்தரவு நடை முறைக்கு வந்துள்ளது.

முன்பை விட கறாரான கட்டுப்பாடுகளுடன் வந்துள்ள இது நடைமுறைப் படுத்துவதிலும் 'இராணுவத்தன்மை' இருக்கும் என்பதற்கு இராணுவத்தின் உயரதிகாரி தணிக்கையாளராக நியமிக்கப்பட்டிருப்பதே போதுமான சாட்சி.

இந்தத் திடீர் தணிக்கை அறிவிப்பை அரசாங்கம் வெளியிடக் காரணம் என்ன? கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படும் இந்தக் கட்டத்தில் ஏற்படவுள்ள நிலமைகள் பற்றிய உண்மைத் தகவல்கள் வெளித் தெரியக் கூடாது என்பது அரசாங்கத்தின் தீர்மானமாக இருக்க வேண்டும்.

இத் தணிக்கை அமுலுக்கு வந்த பின் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பாகிய தகவலொன்றில், கொல்லப்பட்ட பயங்கர வாதிகளின் தொகை 45 என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இராணுவ தரப்பு சேதம் பற்றி அறிவிக்கப் படவில்லை.

ஆனால் அதே வேளை வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக அவசர அவசரமாக இரத்தம் தேவை என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த வேண்டு கோள் எவ்வளவு அவசரமானது என்பதற்கு வைத்தியசாலை உத்தியோகத்தர்களே (டாக்டர்கள் உட்பட) இரத்த தானம் செய்ய வேண்டியிருந்தது. என்பதே போதுமான சான்றாகும்.

கொழும்பு வீதிகளில் ஓயாமல் கேட்கும் 'அம்புலன்ஸ்' வண்டிச் சத்தங்களும், இரத்தத் தட்டுப்பாட்டு அறிவிப்பும் இலங்கை யுத்த நிலவரத்துடன் பரிச்சயமான ஒருவருக்கு என்ன நடக்கிறது என்பதை ஊகிக்க அதிக நேரமிராது.

ஆனால், உண்மைகளை விட ஊகங்களை மிகவும் ஆபத்தானவை. உண்மைகளை மக்கள் தெரிந்து கொண்ளும் போது, அவை கசப்பானவையாக இருந்தாலும் அவற்றை அவர்களால் விளங்கிக் கொள்ள முடியும். உடனடி அரசியல் நெருக்கடிகளை அது அரசாங்கத்திற்கு கொடுத்தாலும் கூட அது ஏற்படுத்தும் பாதிப்பு, ஊகங்களால் ஏற்படுத்தப்படப் போகும் பாதிப்பை விட மோசமானதாக இருக்கப் போவதில்லை.

இவ்வாறுதான் அரசாங்கம் முல்லைத்தீவு முகாம் முற்றாக அழிக்கப்பட்ட போது தகவல்களை மறைத்தது. ஆனால், தகவல்கள் மக்களிடம் எப்படியோ போய்ச் சேர்ந்தன. தணிக்கை நீக்கப்பட்ட வேளை முழுத் தகவல்களும் வெளியே வந்தன. அரசாங்கத்திற்கு இது கொடுத்த அரசியல் நெருக்கடிகள் புதியவை அல்ல.

ஆயினும் திரும்பவும் அதே தணிக்கை முறையை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது.

மக்களின் பெருமளவு நிதியைக் கொட்டி நடக்கும் ஒரு யுத்தத்தில், என்ன நடக்கிறது என்று அறிய மக்களுக்கு உள்ள உரிமையை இந்தத் தணிக்கை மறுக்கிறது. அதே வேளை தாம் செய்யும் நடவடிக்கை எவ்வளவுக்கு சரியானது என்று ஆராய்வதற்கான வாய்ப்பையும், அதைப்பற்றிய மக்களது அபிப்பிராயத்தை அறிந்து கொள்வதற்கான நிலமையையும் அது இல்லாமற் செய்கிறது. இது மக்களிற்கு கட்டுப்பட்ட, மக்களின் தேவைகளை நிறைவேற்றுகிற ஒரு அரசாங்கம் என்ற ஜனநாயகக் கட்டப்பாட்டை மீறுகின்ற ஒரு படுமோசமான ஜனநாயக விரோத நடவடிக்கையாகும்.

இந்தச் செயலை, அரசாங்கத்திலிருக்கும் மு.கா. உட்பட அனைத்துக் கட்சிகளும் எதிர்த்துள்ளன. வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் முழுதான எதிர்ப்பைக் காட்டியுள்ளன. சட்டத்தை வாபஸ் வாங்கக் கோரியுள்ளன. ஆயினும் அரசு அசைந்து கொடுப்பதாக தெரியவில்லை.

பூனை கண்களை மூடிக்கொண்டு பாலைக் குடிக்கும் போது நினைகிறதாம் உலகம் இருண்டுவிட்டதென்று.

ஆனால் உலகம் இருண்டு விடுவதில்லை.

செய்திகள் வாய் மூலமாக வேகமாகப் பரவிகொண்டு தான் இருக்கின்றன. இந்த அரசாங்கத்தையும் அதன் யுத்தத்தையும் ஆட்டங்காணச் செய்யும் பயங்கர வேகத்துடன்.

# மெல்லத் தமிழினி

## ராமா... ராமா.....!

இந்தியா அணுகுண்டுப் பரிசோதனை நடாத்தியதில் இங்குள்ள சிலருக்கு 'வலு புழுகம்'. 'புண்ணிய பாரதம்', பல புனிதர்களும், யோகிகளும் தத்துவ ஞானிகளும் பிறந்த தேசம். மகாவிஷ்ணுவின் அவதாரமான இராமபிரான் ஆட்சி செய்த பூமி. இந்தப்பூமியின் பெருமை வெறுமனே தெய்வீகச் சிறப்பால் மட்டுமன்றி பலத்தாலும் நிருபிக்கப்படவேணும் என்ற இவர்களது நீண்ட நாள் ஆசை இந்த அணுகுண்டுப் பரிசோதனையுடன் நிறைவு கொண்டது.

புதிய பி.ஜே.பி. அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது, இராமர் கோயில் கட்டுவதற்காகவென வரலாற்றுப் புகழ்பெற்ற பாபர் மசூதியை இடித்த புண்ணியவான்கள் ஆட்சிக்கு வந்துவிட்டார்கள். இனி நமக்கென்ன, இந்திய தேசம் வாழும், இந்தப்பாரம்பரியம் வாழும், இந்துக்கள் பூமியாகிய இந்தியாவில், அடக்க ஒடுக்கமாக வாழ மற்றைய துலுக்கர்கள் புரிந்து கொள்ளுவார்கள் என்று சந்தோசப்பட்டு இந்தச் சிலர் எழுதியும் பேசியும் வந்தார்கள் - இலங்கையில் இருந்து கொண்டு.

இந்தச் சிலருக்கு இப்போது இந்தியா அணுகுண்டு வெடித்தது எப்படி இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

தலைகால் புரியாத சந்தோசம் அவர்களுக்கு. இராமதூதரின் வாரிசுகளான இவர்களுக்கு 'சைவமும் தமிழும் தழைத்தோங்க' வந்து சேர்ந்த ஒரு மாபெரும் வாய்ப்பு இது. ஈழத்தமிழர்கள் இன்னல் துடைக்கக் கிடைத்த சந்தர்ப்பம் இது.

இந்தச் சந்தோசம் இவர்களுக்கு இந்தியாவின் அணுகுண்டுப் பரிசோதனைக்கு எதிரான அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளது கண்டனங்கள், பொருளாதாரத் தடை மிரட்டல்கள் போன்றவற்றை கூட எதிர்க்கும் அளவுக்கு துணிவை ஏற்படுத்திவிட்டது! ஒரு, வீரத்தை மயிரில் கொண்ட பத்திரிகை தனது எதிர்ப்பை நீண்ட ஒரு ஆசிரியர் தலையங்கமாகத் தீட்டியிருந்தது. ஒரு ஆசிய நாட்டின் தொழிநுட்ப வளர்ச்சியை கண்டு சகிக்காத மேலைநாட்டு வல்லரசுகளின் கூச்சலாகவே இந்த எதிர்ப்பலைகளை அது வர்ணித்தது.

ஆனால், அதே பரிசோதனையை பாகிஸ்தான் செய்தவுடன் இந்த 'புழுகம்', ஆசிய சார்பு நிலைப்பாடு எல்லாம் போன இடம் தெரியவில்லை. இந்தியா ஒரு ஜனநாயக நாடு, பாகிஸ்தான் சர்வாதிகார ஆட்சிகள் பலவற்றினைக் கண்ட நாடு, அது இது என்று பாகிஸ்தானின் பரிசோதனை ஒரு தேவையில்லாத விடயமாகப் போய்விட்டது அதற்கு. பொருளாதாரத் தடை பயமுறுத்தலை அடுத்து பாகிஸ்தானுக்கு பெரும் நெருக்கடி ஏற்படப்போகிறது, ஏற்பட வேண்டும் என்ற ஆதங்கம் இவர்களுக்கு.

இனி, ஒரு பாபர் மசூதி என்ன, ஓராயிரம் பாபர் மசூதிகளையும் இடிக்கலாம், ஊரெல்லாம் ராமர் கோயில் கட்டலாம் என்ற பாணியில் எழுந்துவரத் தொடங்கிய இந்து வெறிக்கூச்சலை அடக்கி வாசிக்க வேண்டிய தேவை பாகிஸ்தான் குண்டு வெடிப்பால் ஏற்பட்டுவிட்டது.

பாகிஸ்தானுக்கு அணுகுண்டுச் சோதனை செய்ய உள்ள உரிமையை மறுக்க முடியாது என்று இந்திய பாதுகாப்பு அமைச்சரே சொல்லிவிட்ட பிறகும் இவர்களுக்கு பொறுக்கவில்லை.

எப்படித்தான் பொறுக்கும்?

## தமிழருக்கு இல்லை....!

மேர்ஜ் தலைவர் சார்ள்ஸ் அபேசேகரா அவர்களை நினைவு கூரும் முகமாக கூட்டம் ஒன்று கொழும்பு இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது.

மேர்ஜ் அமைப்பில் அங்கம் வகிப்பவர்கள், அதன் பல்வேறு பிரிவுகளில் வேலை செய்பவர்கள் எல்லோரும் அங்கு வந்திருந்தார்கள்.

'சரிநிகரை' சேர்ந்த இருவர் சென்றபோது நடந்த சம்பவம் இது:

வாசலில் நின்ற காவலாளி ஒருவர் 'எங்கே போகிறீர்கள்' என்று கேட்டான்.

பதில் சொல்லப்பட்டது. கூடவே தாம் மேர்ஜில் வேலை செய்பவர்கள் என்றும் கூறப்பட்டது. மேர்ஜ் அடையாள அட்டையையும் காண்பிக்கப்பட்டது.

ஆயினும் காவலாளிக்கு திருப்தி எற்படவில்லை.

'உள்ளே யாரையாவது தெரியுமா?' என்று கேட்டான் 'நிறையப்பேரை . . . செயலாளர் சுனந்த எமது நண்பர் 'என்று கூட கூறப்பட்டது.

ஆயினும் அவருக்கு திருப்தியில்லை. மற்றைய காவலாளியிடம் அவன் சொன்னான்.

" மச்சான் இரண்டு தமிழர் வந்து நிக்கிறார்கள் உள்ளே விடவா என்று போன் பண்ணிக் கேள்"

நல்லவேளையாக ஒரு யுக்திய நண்பர் அவ்விடத்திற்கு வந்தார். அவரது சிபாரிசின் பேரில் சரிநிகர் நண்பர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அவர் சிங்களவர் என்பதைத் தவிர இவ்வாறு அனுமதிக்கப்பட்டதற்கு வேறு காரணம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

உள்ளே போகும் போது யுக்திய நண்பரிடம் கேட்டார்கள் சரிநிகர் நண்பர்கள்:

"எனிந்தக் கெடுபிடி, இலங்கை மன்றக் கல்லூரியில் இவ்வளவு கெடுபிடி எப்போதும் இருந்ததில்லையே? பல தடவை நாம் வந்து போய்யிருக்கிறோமே . . "

அவருக்கும் காரணம் தெரியவில்லை.

உள்ளே போன போதுதான் காரணம் தெரிந்தது. அங்கு கூட்டத்தில் உரையாற்ற அமைச்சர் ஜி.எல். பீரிஸ் வந்திருந்தார்.

அவரது காவலர்கள் தான் இப்படி தமிழ்-சிங்களம் பார்த்து உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தவர்கள். இலங்கை மன்றக் கல்லூரிக் காவலாளிகள் அல்ல என்பது தெரிந்தது.

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாக பீற்றித்திரியும் அமைச்சரின் காவலாளிகளிடமே இன்னமும் இனவெறி உணர்வு போகவில்லை என்றால், அமைச்சர் நாட்டில் இனப்பிரச்சினையை தீர்க்கப் போவது எப்போது?

கூட்டம் தமிழர்களுக்கானதல்ல என்று முடிவுகட்டும் அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கியது யார்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அக்கரைப்பற்று :
# கனன்று கொண்டிருக்கும் எரிமலை வெடிப்பது நிச்சியம் ! யார் தடுப்பர் ?



தேனும் பாலும் தேனாறு ஓட
மீனும் நூலும் மீதமுடன் நிறைந்திருக்க
வயலும் வனப்பும் வாழ்வை சுவையாக்க
வடக்கும் தெற்கும்
தமிழர் முஸ்லிமென
வாழ்வாங்கு வாழ்வுடன் இருந்தோம்!

இதுதான் அக்கரைபற்று மண்; இந்த மண்ணில் இப்போது அச்சமும், பீதியும், மரணபயமும் ஒவ்வொரு மனிதனையும் ஆட்கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு மாதத்துக்கு முன்பிருந்த சுமூக நிலையைக் காணோம். தமிழ் மக்கள் முஸ்லிம் கிராமங்களுக்கு வர அஞ்சுகின்றனர். முஸ்லிம்கள் தங்கள் தொழில்நிலையம், வாயல்களுக்கு செல்ல அஞ்சிநிற்கின்றனர். மாலை ஆறு மணியானால், ஊரே வெறிச்சோடி சூனியம் ஆட்சி செலுத்துகிறது. துப்பாக்கிகளுக்கும், வெடிகுண்டுகளுக்கும் பயந்து மனிதர்கள் அடங்கிக்கிடக்கின்றனர். புலிகளும், ஆயுதப்படைகளும் ஊரினுள் நடமாடித்திரிகின்றனர்.

இப்படியான, வார்த்தைகளால் விபரிக்க முடியாத பொழுதுகளை இம்மக்கள் ஏலவே கண்டுள்ளனர்தாம். தமிழ் - முஸ்லிம் இனவரலாற்றில் 1984 சித்திரைத் திங்கள் கலவரம் இந்த மண்ணில் தான் முதன் முதலில் வெடித்தது. இத்தீ பொத்துவில் தொடக்கம் கிழக்கு முழுவதும் கனன்று எரிந்து அழிவுகளையும், இழப்புக்களையும் கண்ணீரையும் கசப்புணர்வுகளையும் தமிழ் - முஸ்லிம் தரப்பில் அழியாமல் பதித்துவிட்டது.

மீண்டும் ஒரு கொடிய பொ்ழுது 1990 ஜூனில் மீண்டும் கோர முகம் எடுத்தது. பிரேமதாச அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமான பேச்சுவார்த்தை முறிவடைந்த கதையோடு விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்கு வரை முஸ்லிம்களுக்கெதிரான ஒரு தலைப்பட்சமான யுத்தத்தை பிரகடனப்படுத்தினர். வடக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த 60 ஆயிரம் குடும்பங்கள் இனச்சுத்திகரிப்பு நோக்கில் வடக்கில் இருந்து உடுத்த உடுப்புகளுடன் துரத்தியடிக்கப்பட்டிருந்தனர். கிழக்கில் முஸ்லிம்களுக்கெதிராக இனப்போர் விடுதலைப் புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்டு பள்ளிவாசல் படுகொலை, முஸ்லிம் கிராமங்கள் மீதான படுகொலை என பல்வேறு வழிகளில் முஸ்லிம்கள் கொல்லப் பட்டுக் கொன்றிருந்தனர். வடக்கு, முஸ்லிம்கள் வெளியேற்றத்துடன் தனித்தமிழ்த் தேசமாக மாற, கிழக்கு முஸ்லிம்கிராமங்கள் பேய் அலையும் மயானங்களாக மாறிநின்றது. 1990 தமிழ் மக்களின் ஆயுதப்போராட்ட வரலாற்றிலும், முஸ்லிம்களின் இருப்பின் மீதான வரலாற்றிலும் கொடூரமும், இரத்தமும், மரணமும், கண்ணீரும், பீதியும் நிறைந்த காலமாக எழுதப்பட்டது.

90ன் வடுக்கள் வடுக்களாகவே இருக்க, கிழக்கில் தவிர்க்கமுடியாமல், இணைந்து வாழ மட்டுமே சாத்தியமான நிலைமையின் காரணமாய், 93க்குப் பின் மீண்டும் தமிழர் - முஸ்லிம், முஸ்லிம் - விடுதலைப் புலிகளுக்கிடையான உறவு படிப்படியாக சாதாரண நிலைமைக்கு திரும்பியது.

என்றுமே சாத்தியம் என்று நினைத்துப் பார்த்திராத சூழல் மீண்டும் துளிர்விடத் தொடங்கியது. காத்தான்குடியிலிருந்து கல்முனைக்கும், அக்கரைப்பற்றிலிருந்து - பொத்துவிலுக்கும் தமிழ்க் கிராமங்களினூடாக, விடுதலைப் புலிகளின் பார்வைக்கூடாக முஸ்லிம்கள் சுதந்திரமாக பயணம் செய்து கொண்டிருந்தனர். சாத்தியமில்லாதது, சாத்தியப்பட்டவுடன் இனி, என்றுமே கடந்த அக்கொடிய பொழுதுகள் மீள உயிர்பெற வா்ய்ப்பில்லை என நம்பப்பட்டது.

அறந்த நம்பிக்கையின் உயிரின் மீது கடந்த இரு மாதகாலமாய், வெடிகுண்டு எறியப்பட்டு விட்டது, நம்பிக்கையின் ஆயுள் முடிந்து விடுமா என தமிழ் - முஸ்லிம் உறவை நேசிக்கும் மானிட உள்ளங்கள் ஐயுறுகிறது.

### அக்கரைப்பற்று மண்ணுக்கு என்ன நடந்தது?

கடந்த பெப்ரவரி மாதம் முஸ்லிம்களின் புனித நோன்புப்பெருநாள் இரவு அக்கரைப்பற்று மத்திய பஸ் நிலையத்தில் பொலிசாருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் அக்கரைப்பற்று முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டதுடன், பெருநாளுக்கு பொருட்கள் வாங்கச் சென்ற முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டனர்.

ஏப்ரல் மாதம் அக்கரைப்பற்று *மாவடிச் சந்தியில்* அமைந்துள்ள பள்ளிவாசலினுல் இருந்த மின்மாற்றி தகர்க்கப்பட்டது.

1998.05.14ம்திகதி இரவு அக்கரைப்பற்று *'மர்க்கஸ் '* பள்ளிவாயலினுள் இறைவனைத் தொழுதுகொண்டிருந்த பொலிஸ்காரர் ஒருவரைச் சுட்டு மரணிக்கச் செய்ததுடன், மூன்று முஸ்லிம் பொது மக்கள் கிரனைட் வீசி காயப்படுத்தப் பட்டனர்.

1998.06.02.ம்திகதி அக்கரபைப்பற்று - அம்பாறை வீதியிலுள்ள முஸ்லிம் கிராமமான *பட்டியப்பிட்டி அர்-ரஹிமியா வித்தியாலயத்தி*னுள் அமைந்திருந்த மின்ம்மாற்றியை தகர்த்ததுடன், முஸ்லிம்களுக்குச் சொந்தமான மூன்று துவிச்சக்கரவண்டிகளையும் அபகரித்துச் சென்றதுடன், முஸ்லிம் பொது மக்களைத் தாக்கி ஆயுதமுனையில் அச்சுறுத்திய சம்பவம்.

1998.06.04ம்திகதி அக்கரைப்பற்று *பட்டினப் பள்ளி* வாயிலுக்கருகே வீசப்பட்ட கிரனைட் தாக்குதலில் பதினொரு முஸ்லிம் பொது மக்கள் காயப்பட்டு, ஆஸ்பத்தரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.. அதே இரவு அக்கரைப்பற்று *புதுப்பள்ளிவாயல், பெரிய பள்ளிவாயல்* ஆகியவற்றில் அமைந்திருந்த இரு மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டதுடன், அன்றிரவு முஸ்லிம்கள் பெருமளவு அச்சறுத்தப்பட்டு, ஆயுத முனையில் தாக்கப்பட்டனர், ஒரு மோட்டார் சைக்கிளும், மூன்று துவிச்சக்கரவண்டிகளும் அபகரித்துச் செல்லப்பட்டது.

இச்சம்பவங்களின் விளைவால் விடுதலைப் புலிகள் தொடர்பாய் மௌனமாய் இருந்த முஸ்லிம்கள் இன்று மனோ ரீதியாக மிகவும் பாதிப்படைந்துள்ளனர். தமிழர், முஸ்லிம் பிரதேசத்தினுள் வருவது மாலை 6 மணிக்கு பின் தடுக்கப்பட்டது. இதனால், தமிழர் - முஸ்லிம்களுக்கிடையே இருந்த நெருக்கம் இடைவெளிகளாய் மாறிக்கொண்டிருக்கிறது.

ஏழை முஸ்லிம் விவசாயிகள் தங்கள் வயல் நிலங்களில் அறுவடைக்காய் காத்திருக்கும் நெல் வயல்களை எண்ணி தலையில் கைவைத்து நின்கின்றனர். தமிழ் மக்கள் தங்கள் தொழில்களுக்காய் நம்பியிருக்கும் முஸ்லிம் பிரதேசத்தில், சுமூகமாக செல்ல முடியாததால் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பாவி தமிழ், முஸ்லிம் மக்கள் இருளும் பொழுதைப்பார்த்து விடிவது எப்போது என தவிர்த்து நிற்கின்றனர்.

இன்று அக்கரைப்பற்று கனன்றுக்கொண்டிருக்கும் எரிமலையாகி வெடிக்கப்போவது உறுதியென்பது போல், நெருப்பு ஜுவாலை கொண்டு நிற்கின்றது, இதைத் தடுப்பது விடுதலைப் புலிகளின் கைகளில் தான் உள்ளது.

விடுதலைப் புலிகள் ஒரு பொறுப்பு வாய்ந்த விடுதலை இயக்கம் என்ற வகையில் நிதானமாக இப்பிரச்சினையை அணுகுவதே நியாயமானது. அவ்வணுகுதலே இன்றைய எதிர்கால தமிழ்-முஸ்லிம் உறவுகளுக்கு நன்மையளிக்கும்.

பள்ளிவாயலுக்குள்ளும், பள்ளிவாயிலுக்கு அருகிலும், அப்பாவி முஸ்லிம்கள் ஜனசந்தடி அதிகரித்து இருக்கும் நிலைகளிலும் தங்களது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வது, முதலில் நிலைமைகளைச் சீராக்க அடிப்படையான நடவடிக்கையாக அமையும்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை, முற்றும் முழுதான அரசியல், சிந்தனாபூர்வமான ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு அமைப்பின் கீழும், மட்டத்திலும் இல்லாத காரணத்தினாலும் அவர்களால் அல்லது முஸ்லிம் நிறுவனங்களால் எடுக்கப்படும் முடிவுகள் தீர்க்கமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை உலகில் ஒரு முதல் தர கெரில்லா இயக்கமாக இருப்பதனாலும், தங்களுக்கென்ற அரசியல், இராணுவ ஒழுக்கக்கோட்பாடுகளைக் கொண்டிருப்பதாலும், இராணுவத்தாக்குதல்கள் நியாயப்படுகளுக்கு அப்பாற்பட்டு - முஸ்லிம் பிரதேசங்களில் சாதக, பாதக நிலைகளை அனுசரித்து நடக்கவேண்டியது விடுதலைப்புலிகளுக்கு மிகவும் அவசியமானதாகும்.

அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்களின் சம்மேளனம் விடுதலைப் புலிகளின் அம்பாறை, மட்டு. மாவட்ட அரசியல் - இராணுவத் தலைமையுடன் அக்கரைப்பற்று முஸ்லிம்களின் இன்றைய் நிலைப்பாடு தொடர்பாய் பேசுவதற்கு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக கடிதம் ஒன்றை எழுதி அனுப்பி வைத்துள்ளது. *முஸ்லிம் மக்கள் விடுதலை முன்னணி* என்ற அமைப்பும் தமிழீழ விடுதலைப்புலி தலைமைகயகத்திற்கும், ஏனைய பிரதேச தலைமையங்களுக்கும் பகிரங்கப் பிரசுரமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் இதனை பரிசீலிப்பது அவசியமானதாகும். மாறாக, உதாசீனப்படுத்தி, தங்களது நடவடிக்கைகளைத் தொடர்ந்தால் அது நிச்சயம் தமிழ் - முஸ்லிம் வாழ்வில் விபரிக்க முடியாத துயர் கதைகளை எழுதுவிடும்.

*''எரிந்த வீடுகளின் புதிய கூரைகளில்*
*பறவைகள் பாடவும்*
*கொல்லப்பட்டவர்களது புதைகுழிகளில்*
*புதிய மலர்கள் மலரவும்*
*நான் பிரார்த்திக்கிறேன்.*
*புதிய பறவைகளது பாடல்களும்*
*புதிய மலர்களது வாசனையும்*
*எரிந்த வீடுகளில் பிறந்து வளர்ந்த*
*இளைய முஸ்லிம்களையும்-தமிழர்களையும்*
*ஒன்று சேர்க்கும்.*
*இறந்தவர்களது புதைகுழிகளில்*
*கண்ணீர் வடித்த*
*முஸ்லிம் பெண்களதும்*
*தமிழ் பெண்களதும்*
*மனசை நிறைய வைக்கும்.*

*இதை விட*
*எனக்கு எதுவும் வேண்டியதில்லை*
*இது மட்டுமே எனக்கு வேண்டியது!''*

என்ற ஜெயபாலனின் வரிகள் பொய்த்துப் போகாமல் காப்பாற்றுவது நமது அனைவரினதும் கடமையாகும்.

அபூநோல்

அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிகளின் சம்மேளனம்
FEDERATION OF AKKARAIPATTU MOSQUES
Hon President Hon. Secretary Hon Treas

தொலைபேசி 063 - 77460
பெக்ஸ் 063 - 77455
04. 06. 1998

ஐ.சி.ஆர்.சி
மட்டக்களப்பு தலைமையகத்தினூடாக...

இராணுவப் பிராந்தியத் தலைமை, மட்டு - அம்பாரை மாவட்டம்
அரசியல் பிராந்தியத் தலைமை, மட்டு - அம்பாரை மாவட்டம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''பலம் பலத்துக்கு மரியாதை செய்யும்'' இது இந்தியாவின் அணு சக்தி விஞ்ஞானியும், பாதுகாப்பு அமைச்சரின், விஞ்ஞான ஆலோசகரும், பாதுகாப்பு ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் தலைவருமான டொக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அடிக்கடி கூறிக்கொள்ளும் கருத்தாகும். மாறாக, இந்தியப் பிரதமரான வாஜ்பாய் அணுகுண்டு பரிசோதனைப் பற்றி இவ்வாறு கூறுகிறார். ''இப்பிராந்திய அமைதியைப் பேணவே அதைச் செய்தோம்''. இந்த முரண்பாட்டின் பின்னணியில் இந்திய அணுகுண்டை நோக்குவோம்.

தண்மை யுத்தம் அல்லது பனிப்போர் (Cold War) என்பது இரண்டாம் உலக யுத்த முடிவில் தோன்றிய ஓர் இராணுவ, அரசியல் நடைமுறையாகும். அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய இரு நாடுகளின் தலைமையில் நேட்டோ (NATO), வோர்ஸோ (WARSAW) என இரு அணிகள் தோற்றுவிக்கப்பட்டு, யுத்தம் ஒன்று நிகழாதது போல் காட்டிக் கொண்டு யுத்தம் புரிந்த நிகழ்வே அது.

இத்தண்மை யுத்தக்காலத்தில் வலுச் சமநிலை (Balance of Power) என்ற ஓரம்சம் பேணப்பட்டது. இதன் மூலம் பெரும் வல்லரசுகளான அமெரிக்கா, ரஷ்யா என்பன தமக்குள் மோதிக் கொள்ளாமல், படைநகர்த்தலின் மூலம் மிரட்டியும், யுத்தங்களை மூன்றாவது மண்டல நாடுகளுக்குள் நகர்த்தியும் வந்தன. சோவியத்தில் ஏற்பட்ட பின்னடைவுடன் இவ்வலுச் சமநிலையில் மாற்றம் ஏற்பட்டது. 1990களின் ஆரம்பத்தில் சீனாவில் ஏற்பட்ட அபரிதமான வளர்ச்சி மீண்டும் ஒரு புதிய பனிப்போர் யுத்தை (New Cold War) தோற்றுவிக்கும் படியாக சர்வதேச விவகாரங்களை அவதானித்து வருபவர்கள் குறிப்பிட்டனர். அத்தகைய அவதானிப்பு மெய்ப்பிக்கப்பட முன்பு இந்திய, பாகிஸ்தானிய அணுகுண்டுப் பரிசோதனை நிகழ்ந்துள்ளது. இதன் பின்பு அதன் குணாம்சம் வேறு பட வாய்ப்புண்டு.

1980களின் நடுப்பகுதியில் சோவியத்தில் ஏற்பட்ட பின்னடைவுடன் உலகின் ஏக பெரும் சக்தியாக அமெரிக்கா வந்தது (Sole Super Power). இக்காலகட்டத்திலிருந்து அமெரிக்கா முன்பு பேணிவந்த அணிசார்ந்த நடவடிக்கைகளைக் கைவிட்டு எல்லா நாடுகளுடனும் தனித்தனியான உறவுகளை (State to State Relations) பேணத் தொடங்கியது.

இத்தகைய தனியான உறவுகளைப் பேணுவதற்காக பிராந்திய வேறுபாடுகளையும், சித்தாந்த வேறுபாடுகளையும், நிற வேற்றுமைகளையும், அந்தஸ்து வேறுபாடுகளையும் அமெரிக்கா மறந்தது. இதன் மூலம் உலகில் நடைபெறுகின்ற சகல விடயங்களிலும் தனது நகங்களை பாய்ச்சுகின்ற அளவுக்கு வியாபகத் தன்மையை தக்கவைத்துக் கொண்டது.

இரண்டாம் உலக யுத்த முடிவில் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக இருந்த நாடு ஜப்பான். யுத்தத்தில் ஜப்பான் ஈட்டிக்கொண்ட பிரமிக்கத்தக்க வெற்றியை அமெரிக்கா கூர்ந்து கவனித்தது. அதன் விளைவே ஜப்பான் மீது விசப்பட்ட அணுகுண்டுகளாகும். அணுகுண்டுப் பிரயோகத்தின் அவலங்களை முதன் முதலாக உலகுக்குக் காட்டிய நாடு அமெரிக்காதான். அதிற் கூட ஒரு நேர்மையின்மையை அமெரிக்கா கைக்கொண்டிருந்தது. அணு விஞ்ஞானியான அயன்ஸ்ரீன் ஒரு யூதர். ஜேர்மனியில் வாழ்ந்த அவர் ஹிட்லரின் யூத அழிப்பின் போது பாதுகாப்பாக நாடு கடத்தி வைக்கப்பட்டார். தனது மக்களுக்கு ஜேர்மனி செய்த அநீதிகளுக்குப் பிராயச்சித்தம் காணும் நோக்குடன் அதற்கான அணு சூத்திரத்தை (Formula) அமெரிக்காவுக்கு வழங்கினார். ஆனால், அமெரிக்காவோ அதைத் தனது நலனுக்காக ஜப்பான் மீது பிரயோகித்தது. இப்படிப்பட்ட அமெரிக்கா இந்தியாவின் அணுகுண்டு உலகிற்கு ஆபத்தானது என்கிறது.

ஐ.நா சபை தோற்றம் பெற்றதும் உலகை இராணுவ அழிவிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் பாதுகாப்புச்சபை ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் வீட்டோ அதிகாரம் கொண்ட ஐந்து நாடுகள் (பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, சீனா) நிரந்தர அங்கத்துவ நாடுகளாக பிரகடனப்படுத்தப்பட்டது. இந்நாடுகளில், ஆயுத உற்பத்திக்கோ பிரயோகத்திற்கோ எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. இக்குறைபாடுகளுடன் ஐ.நா.சபையைச் சாட்சியாக வைத்துக்கொண்டு நடைபெறுகின்ற யுத்தங்களுக்கு காரணமாகியது. அதேவேளை இந்தியா, நைஜீரியா ஆகிய நிரந்தர அங்கத்துவ நாடுகளாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற நியாயப் பூர்வமான கோரிக்கையும் புறக்கணிக்கப்பட்டது. இத்தகைய ஞானஸ்தானம் எதுவுமின்றி இந்தியா அணுகுண்டுப் பரிசோதனை செய்தது என்பதுதான் இன்றுள்ள குற்றச்சாட்டு.

ஒரு வல்லரசாக இருக்கத்தக்க ஆற்றல் இந்தியாவுக்கு உண்டு. பெரிய நிலப்பரப்பு, போதியளவு கனிய வளம், மக்கள் தொகை, விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சி, விண்வெளித் தகவல் போன்ற எல்லாவற்றிலும் ஆற்றல் மிக்கதாக இருந்து வருகிறது. இவ்வாறான ஒரு நாட்டிற்கு இராணுவ ரீதியான ஸ்திரப்பாடு என்பது மிக மிக அவசியமானதாகும்.

இந்தியாவின் அயல் நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகியன இஸ்லாமிய நாடுகளாகும். சீனா மத அடிப்படைவாதத்தைக் கொண்டிருக்காவிடினும், சோசலிச நாடாக இருக்கிறது. இலங்கை பௌத்த அடிப்படை வாதத்தைக் கொண்டிருக்கிறது. இத்தகைய ஒரு சூழலில் இந்தியா இந்து அடிப்படை வாதத்தை நோக்கிச் செல்வதில், ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. சூழ்நிலையின் நிர்ப்பந்தங்களால் ஏற்பட்டு விட்ட இத்தேவை இந்தியா தனது ஸ்தீரப்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கும் எனக் கருதக்கூடும்.

இந்திய மண்ணில் வெடித்த அணுகுண்டை அமெரிக்கா ஒரு இந்து குண்டாகவே அடையாளம் கண்டிருக்கிறது. இத்தகைய ஒரு பார்வையை இதற்கு முன்னைய காலங்களில் அமெரிக்கா வைத்திருக்க வாய்ப்பில்லை. கூடவே, இந்தியாவுக்கு போட்டியாக பாகிஸ்தானில் வெடித்த அணுகுண்டு அமெரிக்காவின் பார்வையில் இஸ்லாமிய குண்டுகளாகும். மொத்தமாக தென்னாசியாவின் ஒரு மூலையில் ஏற்பட்ட சிறு அதிர்வுகள் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பாரிய அதிர்வுகளின் முதற்படி எனலாம்.

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயினதும், அமெரிக்க செய்மதிகளினதும் கண்களில் ராஜஸ்தான் பாலைவன மண்ணைத் தூவிவிட்டு இந்தியா தனது அணுகுண்டுகளை பரிசீத்துவிட்டது என்ற அமெரிக்காவின் முணுமுணுப்பை அவ்வாறே ஏற்றுக்கொண்டு விடமுடியாது. அமெரிக்கா தன்னையும் மீறிய ஒரு வன்மையை இந்தியா வைத்திருக்கிறது எனக் காட்ட முயலாம். இதன் மூலம் இனிநடத்தப்போகும் யுத்தத் தந்திர லீலைகளை நியாயப்படுத்த முடியும்.

1979ல் பாகிஸ்தானின் தலைவரான ஜெரனல் ஸியா உல் ஹக் அமெரிக்க நாசகார முயற்சியினால் விமான வெடிப்பில் கொல்லப்பட்டார். திராணியுள்ள ஒரு இஸ்லாமியத் தலைமைத்துவத்தை அழித்து விடுவதே அதன் நோக்கமாக இருந்தது. ஒரு இஸ்லாமிய அணுகுண்டை ஸியா வெடிக்க வைத்துவிட்டால், இஸ்லாமிய நாடுகள் அவருடன் கைகோர்த்து வரும் என நினைத்திருந்ததை தற்போதைய பிரதமரான நவாஸ் ஷெரீப் எவ்வாறு மாற்றப்போகிறார்? 1991இல் பாலைவனப் புயல் என்ற யுத்தத்தை சதாம் ஹுசைனுக்கெதிராக அமெரிக்கா நடாத்தியதற்கும் இதே காரணங்கள் தான் இருந்தன. ஆனால், இன்று இஸ்லாமிய என்ற குழு புதுமுனைகளுக்கு அமெரிக்கா பயப்படவேண்டியுள்ளது.

தற்போதுள்ள நிலையில் அமெரிக்காவின் எதிரணியில் அணி வகுத்து நிற்கக்கூடிய வாய்ப்பு இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு உண்டு. இந்நாடுகளுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதிலேயே அமெரிக்காவின் வெற்றி தங்கியிருக்கிறது. சீனாதான் இந்தியாவுக்குள்ள பெரிய அச்சுறுத்தல் என இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சரான ஜோர்ஜ் பெர்ணான்டஸ் சொல்லித்தான் தெரியவேண்டும் என்றில்லை. அவரது அறிக்கைக்கு உலகச் செய்தி நிறுவனங்கள் அனைத்தும் ஏன் அபார முக்கியத்துவம் கொடுத்தன.

முதலிரு யுத்தங்களும் ஐரோப்பிய நாடுகள், பெரு நிலங்களை விஸ்தரிப்பதற்காக தமக்குள் போட்டியிட்ட சம்பவமே. 1945இல் பின் அமெரிக்கா ரஷ்ய அணிகள் மூன்றாவது மண்டல நாடுகள் மீது மேற்கொண்ட யுத்தம் தண்மை யுத்தம் எனப்பட்டது.

இவ்விரு தண்மைகளையும் மீறிய ஒரு வடிவமாக அதாவது அரசியல் ரீதியாகவும், தகவல் தொழிநுட்பத்தின் மூலமாகவும் மிரட்டிய ஆசிய நாடுகளுக்கிடையே ஒரு தவிர்க்க முடியாத நிலையை அமெரிக்கா தோற்றுவிக்க வாய்ப்புண்டு. இதில் இந்திய - சீன, இந்திய - பாகிஸ்தானிய, சீன - பாகிஸ்தானிய முரண்பாடுகள் மேலோங்கி இருக்கும். இதன் மூலம் இனிவரும் யுத்தச் சூழல் மூன்றாவது மண்டல நாடுகள் என்றில்லாமல் தனித்து ஆசிய மண்டலத்து நிகழ்வொன்றாகவே இருக்கும்.

இவ் அணுப் பரிசோதனைப் போட்டியானது பிராந்தியங்களைப் பாதிக்குமே தவிர சிறிய நாடுகள், இனங்கள் என, பிரித்துப் பார்ப்பதில் அர்த்தமில்லை. பொருத்திக்கொள்ளத் தக்க வல்லமைமிக்க நாடுகளுக்கு மட்டுமே இவைப் பற்றிப் பேசுவதில் தேவையிருக்கும். சிறிய நாடுகள் அபிப்பிராயம் மட்டும் சொல்ல முடியுமே தவிர விளைவுகளை அவற்றால் தடுத்து நிறுத்த முடியாது.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ளும் இடத்து அமெரிக்கா வெற்றி பெறப்போவதில்லை. மாறாக; தனக்கிருக்கக்கூடிய பாரிய சந்தை வாய்ப்புக்களை இழக்கவே வாய்ப்புண்டு. தேசியக் கம்பனிகளின் செயற்பாடு, பாதிப்பிற்குள்ளாகும். அதேவேளை, இந்தியா போன்ற நாடுகளில் சுயஉற்பத்தி ஆற்றல் அதிகரிக்க வாய்ப்புண்டு. இத்தகைய பெரிய சந்தை வாய்ப்பொன்றை அமெரிக்கா இழக்க விரும்பாது. இந்த அடிப்படையை விளங்கிக்கொண்டே பிரதமர் பொருளாதாரத் தடைகளால் இந்தியாவை எதுவும் செய்து விடமுடியாது என அறைகூவல் விடுத்தார்.

இந்தியா, மகாத்மா காந்தி, அகிம்சை போன்ற விடயங்களில் இந்தியா பெற்றிருந்த நன்மதிப்பு இன்றைய சூழலில் வேறு அர்த்தத்தைக் கொடுக்கிறது. அணுகுண்டையும், அகிம்சையின் இன்னொரு வடிவம் என இந்தியா அரசு வெளியில் சொல்வது வெட்கக் கேடானதாகும்.

உலக அரங்கில் இந்தியா தன்னை நிலைநிறுத்திக்கொள்ள அணுகுண்டு பரிசோதனை தவிர்க்க முடியாத தொன்றாகும். அதேவேளை தற்போது ஆட்சியில் இருக்கும் இந்து அடிப்படைவாதக் கட்சிக்கு மக்களை அணிதிரட்டவும், அயல்நாடுகளுக்கு இந்தியாப்பற்றிய புதிய கருத்தொன்றையும் உருவாக்கி மிரட்டி வைக்கவும் உதவும். அந்தப்பின்னணியில் பார்த்தால், டாக்டர் அப்துல் கலாம் குறிப்பிடுகின்ற ''பலம் பலத்திற்கு மரியாதை செய்யும்'' என்ற கூற்றே இந்திய அணுகுண்டு விடயத்தில் மேலோங்கி உள்ளது.

"

## பலம் பலத்திற்கு மரியாதை செய்யும்!

"

விஜயன்



PHOTO : INDIA TODAY

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அப்படிப்பட்ட ஒரு விடுதலை எனது மகனுக்குத் தேவையில்லை!

-தோழர் சீலவத்தி

**1971** ஏப்ரல் புரட்சி பற்றிய பலர் மத்தியிலும் வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்ற போதிலும் அதில் பங்கு கொண்டவர்கள் செய்த அர்ப்பணிப்பு, தியாகம், பிரக்ஞை என்பவற்றையும் அதன் காரணமாக அவர்கள் பட்ட துன்பங்களையும், அவலங்களையும் எவரும் குறைத்து மதிப்பிட மாட்டார்கள் என்பது மாத்திரம் உண்மை. கட்சிக்குள் மாத்திரமல்ல, கட்சிக்கு வெளியிலும் பலர் ஆதரவாளர்களாகவும் செயற்பாட்டாளர்களாகவும் இருந்து வந்துள்ளனர். அந்த வகையில் அன்றைய நெருக்கடி மிக்க காலப்பகுதியில் தாய்மாரினதும் தந்தைமாரினதும் பங்களிப்பு, தியாகம் என்பவையும் சாதாரணமானவையல்ல.

சென்ற இதழில் ஏப்ரல் புரட்சியின் தலைவர்களில் ஒருவரான ஒஸ்மன்ட் டி சில்வாவின் நேர்காணல் பிரசுரமானது. அவரது தாயார் சீலவத்தி டி சில்வா பற்றி தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகின்ற நோக்கில் அவர் பற்றிய அறிமுகமும் சிறு உரையாடலும் இவ்விதழில் பிரசுரமாகிறது.

அவர் இப்போது இல்லை என்றே பரவலான கதை நிலவி வந்தது. ஆனால் ஒஸ்மன் டி சில்வாவிடம் நேர்காணலொன்றை செய்வதற்குச் சென்றிருந்த வேளை அவரது தாயார் ஜீவனமும் இருக்கின்ற தகவலை அறிய முடிந்தது. வயது முதிர்ந்த நிலையிலும் "இது தகர்த்தெறியப்பட வேண்டிய சமூக அமைப்புமுறை" என உறுதியாகக் கூறுகிறார் அவர்.

அன்று தொடக்கம் இன்று வரை ஜே.வி.பி.யினர் மத்தியிலும் இடதுசாரிப் பெண்கள் மத்தியிலும் மதிப்பு மிக்கவராக விளங்கிவரும் தோழர் சீலவத்தியை வட்கொரிய புரட்சிகரத் தலைவரின் தாயார் "கம்பொங்ஷொக்" என்ற பெயரில் ஜே.வி.பி.யினர் அழைத்து வந்தனர்.

1923 டிசம்பர் 24ஆம் திகதி கொழும்பு-பொரலலையில் பிறந்த இவரின் பெற்றோர், ஏ.ஈ.குணசிங்கவின் தொழிற் கட்சியின் ஆதரவாளர்கள். 1940இல் தள்ளு வண்டிகளை சொந்தமாக வைத்து வாடகைக்கு கொடுத்து வந்த வில்பிரட் சில்வாவை இவர் மணந்தார்.

30களில் மலேரியா காய்ச்சல் பரவியபோது, மலேரியா ஒழிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த சமசமாஜக் கட்சியினரின் பிரச்சாரத்தால் கவரப்பட்டு தம்பதியர்கள் இருவரும் அரசியலில் ஈடுபாடு காட்டினர். இரண்டாம் உலக மகா யுத்தக் காலப் பகுதியில் சமசமாஜக் கட்சி பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் தடை செய்யப்பட்டிருந்தது. சம சமாஜக் கட்சியின் செயற்பாடுகள் அனைத்தும் இரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இரகசியப் பிரச்சார வேலைகளிலும் கட்சியின் உத்தியோகபூர்வமான ஏடான "சமசமாஜய" பத்திரிகையை இரகசியமாக விநியோகிப்பது போன்ற வேளைலகளில் தோழர் சீலவத்தி ஈடுபட்டு வந்தார். கால்களில் பத்திரிகைகளை சுற்றி வைத்து இரப்பர் போட்டு விழாதபடி வைத்துக்கொண்டு வெளித் தெரியாதபடி சேலையணிந்து செல்வாராம் இவர்.

1942 இல் இவர் கொம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து கொண்டார். உள்ளூராட்சித் தேர்தல்களின் போது பீட்டர் கெனமனின் வெற்றிக்காக கடுமையாக உழைத்தார். பேர் பெற்ற டிராம் வண்டித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தின்போது வீதி மறியல் செய்தனர், பெண்கள். அப்பெண்களுக்கு தலைமை தாங்கியவர்களில் சீலவத்தி, மல்லிகா, சோமா போன்றவர்கள் முக்கியமானவர்கள். இரண்டாம் யுத்த காலப்பகுதியின் பின் சமசமாஜக்கட்சியின் தலைவர்கள் விடுதலையாகி வந்தனர். அதன் பின் கட்சியின் வேலைகளைப் பகிரங்கமாக நடத்த முடிந்ததால், சீலவத்தி தனது பிரதேசமான வனாத்தமுல்ல பகுதியில் ல.ச.ச.க.வின் மாபெரும் பகிரங்கக் கூட்டத்தை நடத்துகின்ற ஒழுங்குகளை மேற்கொண்டார். பின்னர் ல.ச.ச.க. தலைமை தாங்கிய லிப்டன் கம்பனி, பொஸ்டட் கம்பனி, கொமர்ஷல் கொம்பனி போன்ற வேலை நிறுத்தப் போராட்டங்களிலெல்லாம் முக்கிய பங்காற்றியிருக்கிறார்.

1953 ஹர்த்தால் போராட்டத்தின் போது பெண்களின் பங்களிப்பு என்பது வரலாறு காணாத ஒன்று என்பதை யாரும் அறிவர். வீதிகளை மறித்து மறியல் போராட்டம் செய்த போது அரசாங்கம் வலுக்கட்டயமாக வாகனங்களை செலுத்தியது. அதனை தடுப்பதற்கென வீதிகளில் கிடையாக குழி தோண்டுதல், மற்றும் வாகனங்களை சேதப்படுத்துதல போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக வெடி குண்டுகள் கூட தயார் படுத்தப்பட்டிருந்தது. அப்படியான தயாரிப்புகளில் தோழர் சீலவத்திக்கும் பங்கிருந்தது.

சீலவத்தி அரசியல் ரீதியில் நிறைந்த அனுபவங்களைப் பெற்றிருந்த வேளை 1963, 1964களில், இடதுசாரிக் கட்சிகள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய முன்னணி கட்டுவது குறித்து தீர்மானம் நிறைவேற்றிய போது லெஸ்லி குணவர்தனவுடன் சேர்ந்து நடுநிலைமை வகித்தார். ஆனால் அது எவ்வளவு தவறான நிலைப்பாடு என்பதை பிற்காலத்தில் உணர்ந்ததாகத் தெரிவிக்கிறார்.

படிப்படியாக தான் சார்ந்த கட்சியிலிருந்து நம்பிக்கையிழந்தார். ஜே.வி.பி. செயற்படத் தொடங்கிய போது அது வரை காலம் ல.ச.ச.க.வில் செயற்பட்டு வந்த தனது மகன் ஜே.வி.பி.யில் இணைந்து அதில் தீவிரமாக செயற்படத் தொடங்கி, தனது வீடும் ஜே.வி.பி.யின் கட்சிக் காரியாலயமாக செயற்படத் தொடங்கிய போது அதில் படிப்படியாக ஈடுபடத் தொடங்கினார். அவரால் முடிந்த வேலைகளை பொறுப்பெடுத்து செய்து வந்தார்.

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் பின்னர் ஏப்ரல் 18ஆம் திகதி கைது செய்யப்பட்டார். சமூக விடுதலைக்காக எந்த அமைப்பில் தீவிரமாக ஆரம்பத்திலிருந்து தன்னை அர்ப்பணித்து வந்தாரோ, அதே கட்சியின் தலைமையிலான கூட்டணி அரசாங்கம் தான் இவரை கைது செய்து கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கியது. தோள்பட்டையில் பட்ட அடி காரணமாக தோள்பட்டை எலும்பு முறிந்து நீண்ட காலம் சிகிச்சை பெற்று வந்தார். தோழர் சீலவத்திக்கு மொத்தம் எட்டுப் பிள்ளைகள் (ஆண்கள் ஐந்து பேர், பெண்கள் மூவர்). புரட்சியின் போது அவரது மூன்று பிள்ளைகளும் (ஒஸ்மன்ட், சிட்னி, நெந்தொல்) கைது செய்யப்பட்டனர். எல்லோரும் நான்கு வருடங்களுக்கு குறையாத சிறைவாசத்தை அனுபவித்தனர். ஒரு மகன் 1987-89 காலப்பகுதியில் கொல்லப்பட்டார். படையினரால் கொல்லப்பட்டவர் என்றே இன்றும் நம்பப்படுகிறது.

71 ஏப்ரல் புரட்சியைத் தொடர்ந்து இவரது வீடு பொலிஸாரால் அழித்து தீக்கிரையாக்கப்பட்டது. சூழ இருந்தவர்களால் பொருட்கள் சூறையாடப்பட்டன. வீட்டில் இருந்த ஏனைய பிள்ளைகள், மருமக்கள்மார், பேரன் பேத்தி என எல்லோருமாக எல்லாவற்றையும் பறிகொடுத்த நிலையில் வீட்டை விட்டு வெளியேறி சில வருடங்கள் தலைமறைவாக இருக்க நேரிட்டது. போகுமிடங்களிலெல்லாம் ஒரு பயங்கரவாதக் குடும்பம் என்று பார்க்கப்பட்டதே இதற்கான காரணம். "சொந்தக்காரர்கள் கூட எங்களுடன் நெருங்க அஞ்சினர். எங்களுக்கு உதவி செய்ய மறுத்தனர். வீட்டில் இருந்த ஆண்கள் எல்லோரும் கைது செய்யப்பட்ட நிலையில் பெண்கள் நாங்கள் வறுமையிலும், பயத்திலும் காலத்தை கடத்தினோம். அந்த துன்பங்களையும், அவலத்தையும் இன்று நினைத்துப் பார்க்கவும் நடுங்குகிறது" என்கிறார் சீலவத்தியின் மகள். இப்படிப்பட்ட கொடூர அனுபவங்களின் மத்தியிலும் புரட்சியில் நம்பிக்கை கொண்டவராகவும், சமூகப் புரட்சியொன்றை எதிர்பார்த்த வண்ணமும் இருக்கின்ற இந்த தாய் வரலாற்று நினைவுகளில் பதிந்து விட்டவர்.

**லங்கா சமசமாஜக்கட்சியின் தீவிர உறுப்பினராக செயற்பட்ட நீங்கள் எப்படி ஜே.வி.பி.யின் செயற்பாட்டாளராக ஆனீர்கள்?**

எமது வீட்டில் தான் ஜே.வி.பி.யின் சகல அந்தரங்க கூட்டங்களும் நடத்தப்பட்டன. ஆரம்பத்தில் மகன் கூட எனக்கு விபரங்களை மறைத்தான். வீட்டில் நடத்தப்படும் கூட்டங்களின் போது அந்த பிள்ளைகளுக்கான உதவிகளை நான் செய்து வந்த போதும் கூட ஒரு மனித குலத்துக்கு விடிவு தேடித்தரும் ஒரு புரட்சிக்கான தயாரிப்புகளை செய்து வருகிறார்கள் என்பதை நான் விளங்கிக் கொள்ள தாமதமாகவில்லை. புரட்சிக்கான சகல ஒத்துழைப்புகளையும் நான் செய்ய தீர்மானித்தேன். இதேவேளை ஜே.வி.பி. குறித்து போலிப் பிரச்சாரங்களை ல.ச.ச.க. மற்றும் கொம்யூனிஸ்ட் கட்சியும் செய்து வந்த போது அது வரை காலம் அதன் உறுப்பினராக இருந்து செயற்பட்டு வந்த என்னால், அந்தக் கட்சிகளை விமர்சிக்காமல் இருக்க முடியவில்லை. எனவே படிப்படியாக ல.ச.ச.க.வின் செயற்பாடுகளிலிருந்து விலகிய அதே வேளை ஜே.வி.பி.யுடனான செயற்பாடுகளை அதிகரித்துக் கொண்டேன்.

**71இல் யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விஜேவீரவை சந்தித்து தாக்குதலை நடத்துகின்ற செய்தியை அவரிடமிருந்து நீங்கள் தான் பெற்று வந்தீர்கள் என்று கூறப்படுகிறதே உண்மையா?**

இயக்கத்தின் இளைஞர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம் அவர்களை சிறைக்குச் சென்று சந்திப்பது மற்றும் ல.ச.ச.க.வைச் சேர்ந்த -வழக்கறிஞர்களாக இருந்த- எனது நண்பர்களின் உதவியோடு விடுவிப்பது, சிறையிலிருக்கும் கட்சி உறுப்பினர்களிடம் தகவல்களைக் கொண்டு செல்வது, அவர்களிடமிருந்து தகவல்களை கொண்டு வருவது போன்ற கடமைகளை செய்து வந்தேன். யாழ்ப்பாணத்துக்குச் சென்று தோழர் விஜேவீரவை சந்திக்க நானும் தோழர் குமநாயக்கவும் சென்றிருந்தோம். தாக்குதலை மேற்கொள்ளும் தீர்மானம் பற்றிய தகவல் என்னிடம் அனுப்பப்படவில்லை. அத்தகவல் குமநாயக்கவினூடாக அனுப்பப்பட்டதாக கூறப்பட்டது.

**புரட்சிக்கு முன்னரேயே உங்கள் மகன் உட்பட பல இளைஞர்களை கைது செய்யும் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. அப்போது ஆட்சியிலிருந்த ல.ச.ச.க.வினரை சந்தித்து உரையாட சந்தர்ப்பம் கிடைத்ததா?**

தோழர் என்.எம்.பெரேராவை கட்சித் தலைமைக் காரியாலயத்தில் வைத்து நானும் குமநாயக்கவும் சென்று சந்தித்து இது குறித்து உரையாடினோம். இந்நாட்டின் புரட்சிகர இளைஞர்கள் தங்களது செயற்பாடுகளை தொடர்ந்து செய்வதை தடுக்க எவராலும் முடியாதே தோழர், அவர்களை கைது செய்து அடைத்து அடக்குமுறையை பிரயோகிப்பது இடதுசாரிக் கட்சிகளின் கூட்டணி அரசாங்கமொன்றில் எப்படி நிகழ முடியும்? நீங்கள் கூறிவருவதைப் போல இடதுசாரிக் கட்சிகளை நாசம் செய்ய வந்த சீ.ஐ.ஏ. இயக்கமென்பது கட்டுக்கதை. முடிந்தால் அவர்களுடன் சேர்ந்து ஒத்துழையுங்கள்" என்று கேட்டேன். அவர் இதற்கு செவிமடுக்கவில்லை. அலட்சியமாக நடந்து கொண்டார். "இப்படி சென்றால் செக்கோஸ்லவேக்கியாவில் நடந்ததைப் போல் தான் ஆகும். உங்களது மகன் ஒஸ்மன்டை வேண்டுமென்றால் விடுதலை செய்கிறேன். மற்றவர்களைப் பற்றி என்னோடு ஒன்றும் பேச வேண்டாம்" என்று கூறிவிட்டார். அப்படிப்பட்ட ஒரு விடுதலை எனது மகனுக்கு மட்டும் தேவை இல்லை என்று வந்து விட்டேன்.

**அப்போதைய ல.ச.ச.க.வினர், அரசாங்கத்துடன் சேர்வதென்ற முடிவை எடுத்த போது நீங்கள் என்ன முடிவு செய்தீர்கள்?**

ஐ.தே.க தோற்கடிக்குமுகமாக ஐக்கிய முன்னணியொன்றை கட்டியெழுப்புவதற்கு ல.ச.ச.க., ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்ற பிரேரணை குறித்து ஒரு முறை நகர சபை மண்டபத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் ஒரு பெரிய விவாதம் நடந்தது. ஏறத்தாழ 700க்கும் மேற்பட்ட வாக்குகள் அப் பிரேரணைக்கு ஆதரவாக அளிக்கப்பட்டது. அந்த விவாதத்தின் போது பாலா தம்பு, எட்மன்ட் சமரக்கொடி போன்ற தோழர்கள் கடுமையாக எதிர்த்து தாங்கள் வெளியேறுவதாக அறிவித்தார்கள். லெஸ்லி குணவர்தன, கொல்வின் ஆகியோர் இதன் போது தாங்கள் நடுநிலை வகிப்பதாக அறிவித்தார்கள். அவர்களோடு சேர்ந்து நானும் நடுநிலை வகித்தேன். பிற்காலத்தில் அப்படியொரு நிலைப்பாட்டை எடுத்திருக்கக் கூடாது என்பதை உணர்ந்து கொண்டேன்.

**நீங்கள் கைது செய்யப்பட்டது எப்போது?**

ஏப்ரல் 18ஆம் திகதியன்று நான் கைது செய்யப்பட்டேன். ஒஸ்மன்டை எங்கு வைத்திருந்தார்கள் என்பது தெரியாதிருந்தது. நான் தேடியலைந்து கொண்டிருந்தேன். அப்படியான ஒரு வேளையில் தான், இடையில் வைத்து பொலிஸார் என்னைக் கைது செய்தார்கள். நான்கு வருடங்கள் எவ்வித வெளியுறவுகளும் இல்லாமல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தேன். ஆரம்பத்தில் நான் கடும் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தேன். தோளில் கடும் தாக்குதலால் குறிப்பிட்ட காலம் வரை சிகிச்சை பெற்று வந்தேன். 5ஆம் திகதி தாக்குதல் பற்றிய செய்தியை விஜேவீரவிடமிருந்து நான் தான் பெற்று வந்தேன் என வாக்குமூலமளித்தால் என்னை விடுதலை செய்வதாக கூறினார்கள். நான் இறுதி வரை ஒப்புக்கொள்ள மறுத்தேன். அதன் விளைவாகவே நான்கு வருடங்கள் சிறையில் கழித்தேன். மதிலுக்கு அப்பால் எனது மகன்மார் மூவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தும் கூட அவர்களைச் சந்திக்க அனுமதி தரப்படவில்லை. ஒரு முறை ஒஸ்மன்ட் என்னை சந்திக்க வேண்டுமென விசாரணையாளர்களிடம் கோரியதைத் தொடர்ந்து ஆணைக்குழுவிலிருந்த ஒரு மனித நேயமிக்க ஒரு விசாரணையாளர் தனது சொந்த முயற்சியின் பேரில் பல இடங்களிலிருந்து உத்தரவு பெற்று ஒரே ஒரு முறை சந்திக்க வழி செய்தார்.

**சிறையில் பெற்ற அனுபவங்களை விளக்குங்களேன்?**

வெலிக்கடை சிறையில் எங்களில் பலர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஜே.வி.பி.யின் பெண் தோழர்கள் பலர் அதில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். சிறைக்குள் நாங்கள் முகம் கொடுத்த முக்கிய பிரச்சினை, சாதாரண சமூக விரோத குற்றங்களுக்காகத் தண்டனை பெற்ற கைதிகளையும் எங்களைப் போன்ற அரசியல் கைதிகளையும் ஒன்றாக போடப்பட்டிருந்தது தான். பாதாள உலக செயற்பாடுகளில் கொலை, கொள்ளை போன்ற செயல்களில் ஈடுபட்ட பலரும் எங்களுடன் சேர்த்து போடப்பட்டிருந்தனர். சிறைக்குள் அவர்களுக்கு, பல சலுகைகள் சிறை அதிகாரிகளால் வழங்கப்பட்டு வந்தன. உணவு, இருப்பிடம், சீருடை என பல விடயங்களில் அவர்களுக்கு விசேட வசதிகள் இருந்தன. அரசியல் கைதிகளான நாங்கள் நியாயமான வசிதிகளோஇன்று இருந்த அதே வேளை கிரிமினல் குற்றவாளிகள் சலுகை பெற்றவர்களாகவும், சிறைக்குள் அதிகாரம் நிறைந்தவர்களாகவும் இருந்தார்கள். அது மட்டுமன்றி அக்கைதிகள் எங்களை இம்சித்தார்கள். எனவே, சிறைக்குள் அடிக்கடி இரு சாராருக்குமிடையில் சண்டைகள் நடப்பதுண்டு. நாங்கள் எமது எதிர்ப்பை அவ்வப்போது வெளிப்படுத்தும் வகையில் சிறைச் சாலைக்குள்ளும் போராடினோம். ஏற்கெனவே சித்திரவதைக்குள்ளாகி, விரக்தியுற்ற நிலையில் சிறைவாசத்தை அனுபவித்து வந்த பெண் தோழர்களுக்கு ஏற்பட்ட இவ்வகையான நிலைமைகள் ஒரு வகையில் சித்திரவதைகளே. உண்மையில், சிறைச்சாலை என்பது இன்னொரு அரசியல் வகுப்பு மாத்திரமன்றி இன்னொரு போராட்டக்களமும் கூடத்தான்.

**தொகுப்பு-கோமதி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கொழும்புவாழ் தமிழர் பிரச்சினை :

# மேலும் சில குறிப்புகள் .....

பரந்தாமன்

ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு இனக்குழுமம் தன் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு ஐக்கியப்படுவது அவசியமாக உள்ளது. இவ் இனக் குழுமம் தனது அகமுரண்பாடுகளுக்கு மத்தியிலும் பொதுவான அரசியலின் கீழும், அவ் அரசியலை வென்றெடுப்பதற்கு அமைக்கப்பட்ட பொதுவான அமைப்பின் கீழும், அவ் அமைப்பின் வேலைத் திட்டத்தின் கீழும் ஐக்கியப்படுவது அவசியமானதாகும். அதுவும் பெரும்பான்மை இனத்திற்கு மத்தியில் வாழும் சிறுபான்மை இனக் குழுமங்களுக்கு இது மிக மிக அவசியமானது. இல்லையேல் ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் ஒரு அடி எடுத்து அசைவது கூட, இவ் இனக்குழுமத்திற்கு சாத்தியமில்லாது போய் விடும்.

கொழும்புத் தமிழர்களைப் பொறுத்த வரையிலும் இன்று இத்தேவை முன்னரை விட அதிகமாக உள்ளது. பெரும்பான்மை இனத்தினரால் சூழப்பட்டுள்ள நிலையில் வாழும் இவ் இனக்குழுமம் தன் அகமுரண்பாடுகளுக்கு மத்தியிலும் ஐக்கியப்பட்டு செயற்படாவிட்டால் தன் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கும் பயணத்தின் ஒரு மைல் கல்லைக் கூடத் தாண்ட முடியாது. எனவேத் கொழும்புத் தமிழர்கள் மத்தியில் பல்வேறு சமூக சக்திகளும் தமது சொந்த அடையாளங்களுக்கு அப்பால், பொது அடையாளத்தின் கீழ் ஐக்கியப்படுவது பற்றியும் அதற்கான மார்க்கங்கள் பற்றியும் நடைமுறையில் ஏற்படும் தடைகளை வென்றெடுப்பது பற்றியும், ஆழமாக சிந்திக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சமூகம் எவ்வாறு கட்டமைந்துள்ளது? அதில் செயற்படும் பல்வேறு சமூக சக்திகளும் யாவை? இச்சமூக சக்திகளுக்கிடையேயான முரண்பாடுகள் யாவை? கொழும்புத் தமிழ் அரசியலில் இதுவரை காலமும் அதன் அரசியலும், தலைமையும் எவ்வாறு செயற்பட்டுள்ளது என்கின்ற விடயங்களை பரிசீலிக்கும்போது தான், கொழும்புத் தமிழர்களை ஐக்கியப்படுத்தும் மார்க்கங்களை எம்மால் கண்டுகொள்ள முடியும்.

### கொழும்புத் தமிழ்ச் சமூகம் எவ்வாறு உள்ளது?

கொழும்புத் தமிழ்ச் சமூகம் இரண்டு பெரிய இனப்பிரிவுகளையும், அதற்குள் பல்வேறு சமூகப் பிரிவுகளையும் கொண்டதாக விளங்குகின்றது. இந்திய வம்சாவளிப் பிரிவினர், வடக்கு கிழக்கினைத் தாயகமாகக் கொண்ட இலங்கைத் தமிழர் என்போரே அவ்விரு இனப்பிரிவினர் ஆவர்.

### இந்திய வம்சாவளிப் பிரிவினர்

இந்தியா வம்சாவளிப் பிரிவினரில் தமிழ்க் கத்தோலிக்கர்கள், வர்த்தகப் பிரிவினர், அருந்ததியர் சமூகப்பிரிவினர் என மூன்று வகைகளான பலமான சமூக சக்திகள் அடங்குகின்றனர்.

இம்மூன்று சமூக சக்திகளிலும் தமிழ்க் கத்தோலிக்கப் பிரிவினரே மிகவும் பலமான சக்திகளாக உள்ளனர். கொட்டாஞ்சேனை- கொச்சிக்கடை, ஜிந்துப்பிட்டிப் பகுதிகளில், தொடர்ச்சியான ஒரு நிலப்பரப்பில் நெருக்கமாக வாழ்வதும், போர்க் குணமிக்கவர்களாக இருப்பதும், கத்தோலிக்க மதமும், அதன் நிறுவனங்களும் இவர்களை ஒன்றிணைத்து வைத்திருப்பதும் இவர்களின் பலமான நிலைமைக்கு காரணமாகும். இதைவிட, கொழும்பு வடக்கில் மட்டக்குளி, முகத்துவாரம் பகுதிகளில் இவர்கள் கணிசமான அளவு வாழ்வதும், இவர்களது சமூகப் பலத்தினை ஊக்குவித்துள்ளது. கொழும்புத் தமிழ் அரசியலைத் தீர்மானிக்கும் சக்திகளாக இவர்களே உள்ளனர். எதிர்காலத்தில் கொழும்புத் தமிழ் அரசியலில் காத்திரமான பாத்திரத்தினை வகிக்கும் ஆற்றல் இவர்களுக்கே உள்ளது. மாநகரசபை உறுப்பினர் ஜெரால்ட் பெர்னாந்து இவர்களின் பிரதிநிதியே ஆவர்.

எனினும், கல்வியறிவிலும், பொருளாதார நிலையிலும் சற்று பின்தள்ளி இருப்பதனால் கொழும்புத் தமிழ் அரசியலின் தலைமையை இவர்களால் கைப்பற்ற முடியவில்லை. அது இந்திய வர்த்தக சமூகத்தினரிடமே தற்போது உள்ளது. வர்த்தக சமூகமும், அதன் அரசியல் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் அரசியலில்இச்சமூகம் முனைப்புள்ள சக்திகளாக வருவதை விரும்பவில்லை. இதனாலேயே ஒரு பெரிய சமூகப் பின்புலம் இருந்தும் இச் சமூகத்தின் பிரதிநிதியான ஜெரால்ட் பெர்னான்டோவால் மாநகர சபை உறுப்பினர் பதவிக்கு அப்பால் மேல் எழ முடியவில்லை. ஆனால், அண்மைக் காலமாக இப்போக்கில் சற்று மாறுதல் தெரிகிறது. இச்சமூகத்தில் வாழும் முன்னேறிய பிரிவினர் பலர் தமது அரசியல் அந்தஸ்துப்பற்றி விழிப்புபெற ஆரம்பித்துள்ளனர்.

அடுத்தது வர்த்தகப்பிரிவினர். இவர்களே கொழும்புத் தமிழ் அரசியலின் தலைமைகளாக உள்ளனர். கொழும்பு மாவட்டத்தின் இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்களாக யோகராஜன், தேவராஜ் போன்றவர்கள் இவர்களின் பிரதிநிதிகளேயாவர். கொழும்பு நகர் வர்த்தகத்தில் நகை வியாபாரம், புடவை வியாபரம், இயந்திர உதிரிப் பாகங்களின் வியாபாரம், மொத்த சில்லறை வியாபாரம் என்பவற்றில் இவர்களின் ஆதிக்கமும் மேலோங்கிய நிலையில் உள்ளது. அதுவும் நகை வியாபாரம் முழுக்க முழுக்க இவர்களின் ஆதிக்கத்திலேயே உள்ளது. இவர்களில் மொட்டை வேளாளர் என அழைக்கப்படுகிற ஆறு நாட்டு வேளாளர் சாதிப்பிரிவினர் மேலோங்கிய நிலையில் உள்ளனர். புடவை வர்த்தகம், இயந்திர உதிரிப் பாகங்களின் வர்த்தகம் என்பவற்றில் ஆதிக்க நிலையில் உள்ள இவர்கள் தங்கள் சாதிக்கென ''ஆறு நாட்டு வேளாளர் சங்கம்'' என ஒரு அமைப்பையும் வைத்துள்ளனர். சாதிப்பண்புகளை மிக இறுக்கமாக கொண்ட பிரிவினர் இவர்களாவர். கொழும்பின் பிரதான புடவை வர்த்தக நிறுவனமான 'ரஞ்சனாஸ்' புடவை வர்த்தக நிறுவனம் இச்சாதியே சேர்ந்த கறுப்பையா பிள்ளைக்குச் சொந்தமானது. கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான பி.பி.தேவராஜ் இச்சாதி பிரிவினரைச் சேர்ந்தவர் ஆவர்.

தமது பணபலத்தினால், அரசியலை வளைத்துப் போடும் ஆற்றல் மேற்கூறிய சாதிப்பிரிவினர் உட்பட இந்திய வர்த்தகப் பிரிவினருக்கு உள்ளது. பெரிதளவு மக்கள் பின்புலம் இல்லாதபோதும், பணத்தின் மூலம் கொழும்புத் தமிழர்களின் தலைமைச் சக்தியை தம்வசம் வைத்துக் கொள்ள இவர்களால் முடிகின்றது. கொழும்புத் தமிழர்களின் மேல் செல்வாக்குச் செலுத்துகின்ற பல இந்து ஆலயங்களும் அதனையொட்டிய பல இந்து நிறுவனங்களும் இவர்களின் ஆதிக்கத்திலேயே உள்ளன. பண பலம், பல்வேறு சமூக நிறுவனங்களின் பலம், அரசியற்பலம் என்பவற்றினால் கொழும்பு வாழ் இந்திய வம்சாவளி தமிழர்கள் மத்தியில் ஆதிக்க சக்திகளாக இவர்களே உள்ளனர்.

மூன்றாவது பிரிவினர் அருந்ததியர் சமூகப் பிரிவினர் ஆவர். கொழும்புத் தமிழர்களின் மிகவும் அடிநிலையில் இருக்கும் சமூகப் பிரிவினர் இவர்களேயாவர். நகரசுத்தித் தொழிலுக்காக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டவர்களின் பரம்பரையினரே இவர்களாவர். கொழும்பில் மிகவும் பின்தங்கிய சேரிப்புறங்களில் எவ்வித சுகாதாரமும் அற்ற நிலையில் இவர்கள் வாழ்கின்றனர். கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் என சகல நிலைகளிலும் பின்தள்ளிய நிலையில் வாழும் இவர்கள் இன ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்குமுறை, சாதிய ஒடுக்கு முறை என அனைத்து ஒடுக்குமுறைக்கும் உட்பட்டவர்களாக வாழ்கின்றனர். தற்போது மத்தியக் கிழக்கு வேலைவாய்ப்பு, இவர்களில் ஒரு பிரிவினர் மத்தியில் பொருளாதார ரீதியான மேல்நோக்கிய அசைவினை சற்றுத் துரிதப்படுத்தியுள்ளது. எனினும், சாதி என்கின்ற சித்தாந்த ஒடுக்கு முறை தொடர்ந்த வண்ணமே உள்ளது. கல்வி அறிவும் இவர்கள் மத்தியில் தற்போது சற்று முன்னேறியுள்ளது.

நீண்டகாலமாக கவனிப்பாரற்று ஒரு அரசியல் அனாதைகளாக இருந்த இவர்கள், வாக்குரிமையைத் தொடர்ந்தும், ஏனைய சிறு சிறு மேல்நோக்கிய அசைவுகளைத் தொடர்ந்தும் தற்போது கவனிப்புக்குள்ளாகத் தொடங்கியுள்ளனர். எனினும், இவர்களுக்கான சரியான அரசியல் தலைமை இன்னும் உருவாகவில்லை. முன்பு ஓரளவு இவர்களது நலனைக் கவனித்த அருந்ததியர் சங்கம், அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் போன்ற அமைப்புக்களும் இன்று செயலற்று போயுள்ளன.

இவர்களுக்கென உறுதியான தலைமை இல்லாததனால், இந்திய வர்த்தக சக்திகள் தங்களின் நலன்களுக்கு இவர்களைப் பயன்படுத்தும் நிலையே இன்று வரை தொடர்கின்றது. அண்மையில் நடைபெற்ற மாநகர சபைத் தேர்தலில் இ.தொ.கா. வினால் நியமிக்கப்பட்ட ஏழு வேட்பாளர்களில் ஒருவர் கூட இச்சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வில்லை.

எனினும், தேர்தல் காலத்தில் இந்திய வர்த்தகர்களின் வாக்குவேட்டைக்காக அதிகளவு பிரச்சார உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் இவர்களே யாவர்.

மிகவும் பின்தங்கிய பிரிவினராக இருப்பதனால் கொழும்புத் தமிழ்ச் சமூகத்தின் அதிகளவிலான அரசியல் அபிலாஷைகளின் தேவைகளை வேண்டி நிற்பவர்கள் இவர்களே யாவர்.

இவர்களைப்பற்றிய தொடர்ச்சியான அறிமுகம் சரிநிகரில் அருந்ததியன் எழுதும் ''தலித்தியக் குறிப்புக் களில்''வந்துள்ளது.

### இலங்கைத் தமிழர்கள்

வடக்கு - கிழக்கினைத் தாயகமாகக் கொண்ட இலங்கைத் தமிழர் கொழும்பில் வெள்ளவத்தை பகுதிகளில் செறிவாகவும், கறுவாக்காடு, பம்பலப்பிட்டி, கொழும்பு வடக்குப் பகுதிகளில் சற்று கூடுதலாகவும் வாழ்கின்றனர். தற்போது யுத்த இடப்பெயர்வைத் தொடர்ந்து மட்டக் குளி காக்கைத்தீவு, மொறட்டுவ தொடர்மாடிப்பகுதி என்பவற்றில் செறிவாக வாழும் நிலையும் ஏற்பட்டுள்ளது. தற்போது கொழும்பில் தனியார் நிறுவனங்களினாலும் கட்டப்படும் தொடர் மாடிகள் இவர்களை இலக்காகக் கொண்டே கட்டப்படுவன ஆகும்.

இவர்களில், கறுவாக்காடு பகுதிகளில் வாழும் தமிழர்கள், தமிழ் அடையாளங்களைத் துறந்து ஆங்கிலச் சமூகப்பின்னணியில் வாழும் உயர் வர்க்கத்தவர்களாக உள்ளனர். ஏனையவர்கள் தமிழ் அடையாளங்களைத் தொடர்ந்தும் பேணி வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் யாழ் குடாநாட்டை சேர்ந்தவர்களாவர்.

ஆத்மார்த்த ரீதியாக இவர்கள் வடக்கு - கிழக்கு போராட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளமையால், கொழும்புத் தமிழ் அரசியலில் அக்கறையற்றவர்களாக அதிலிருந்து சற்று விலகியே நிற்கின்றனர். கொழும்பில் நடைபெறும் தேர்தலில்களிலோ, அதன் வாக்களிப்பிலோ அதிகளவு அக்கறை காட்டுவதில்லை. கொழும்பு தமிழ் அரசியலையும், வடக்கு கிழக்கு அரசியலினூடாக பார்ப்பதினாலேயே இந்நிலை ஏற்படுகின்றது. இவர்கள் சார்பில் அரசியற் களத்தில் நிற்பவர்களும், கொழும்பு அரசியலை உயர்த்திப் பிடிக்காது வடக்கு கிழக்கு அரசியலையே உயர்த்திப் பிடிக்கின்றனர்.

எனினும், யதார்த்த நிலை வேறாக உள்ளது. வடக்கு - கிழக்கு பிரச்சினைத் தீர்ந்தாலும் இவர்களில் பெரும்பாலனோர் கொழும்பிலேயே வசிக்கப்போகிறார்கள். இந்நிலையில் தமது அரசியல் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கு கொழும்பு அரசியலில் கவனம் செலுத்த வேண்டிய நிலை இவர்களுக்கு உள்ளது. அரசியல் தீர்வின் பின் வடக்கு கிழக்கிற்கு நகரக் கூடியவர்கள் கூட அதுவரை தமது அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கு கொழும்பு அரசியலையே நம்பியிருக்க வேண்டிய நிலை உள்ளது.

எனவே இவர்கள் வடக்கு கிழக்கு தமிழர் என்ற அடையாளத்தினைத் தொடர்ந்து பேணுகின்ற அதே வேளை, கொழும்பில் வசிக்கும் வரை கொழும்புத் தமிழர் என்ற அடையாளத்தையும் பேண வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

### கொழும்புத் தமிழர்களை ஐக்கியப்படுத்தும் மார்க்கம் பற்றி...

மேற்கூறியவாறு, நான்கு பலமான சமூக சக்திகள் கொழும்பில் வாழ்கின்ற நிலையில், அவர்களை ஐக்கியப்படுத்தும் மார்க்கங்களைக் கண்டு பிடிப்பதிலேயே கொழும்புத் தமிழர்களின் ஐக்கியம் தங்கியுள்ளது.

இந்நான்கு சக்திகளில் சமூக அளவில் அதிகாரம் பெற்ற சக்திகளாக இந்திய வர்த்தகர்களும் வடக்கு கிழக்கு தமிழர்களும் இருக்கின்ற அதே வேளை அரசியல் அளவிலும், சமூக அளவிலும் அதிகாரம் பெற்ற சக்திகளாக இந்திய வர்த்தகர்கள் உள்ளனர் ஏனைய இரு சக்திகளான கத்தோலிக்க மதப்பிரிவினரும், அருந்ததிய சமூகத்தினரும் அதிகாரம் குறைந்த சக்திகளாகவே உள்ளனர். அருந்ததியர் சமூகத்தினர் அறவே அதிகாரம் அற்றவர்களாக உள்ளனர் இந்த வகையில் பார்க்கும் போது சமூக அளவில் கொழும்பு தமிழ்ச் சமூகத்தின் ஆதிக்க ஒழுங்கு இந்திய வர்த்தகர்கள், வடக்கு கிழக்கு தமிழர்கள், கத்தோலிக்கத் தமிழர்கள், அருந்ததியர் சமூகத்தவர் என்ற படி வரிசையிலேயே காணப்படுகின்றது.

கொழும்புத் தமிழர்களை கொழும்புத் தமிழர் என்ற இனக்குழும அடையாளத்தின் கீழ் ஐக்கியப்படுத்த வேண்டுமானால் முதலில் இவ் வாதிக்க படிநிலைவரிசை ஒழுங்கினை தகர்க்கவேண்டியது முன் நிபந்தனையாக உள்ளது.

இவ்வாதிக்க படிநிலையினைத் தகர்த்து நான்கு சமூக சக்திகளையும் சமத்துவமாக ஒரு வானவில் கூட்டணி வடிவத்தில் இணைக்கக் கூடிய மார்க்கங்களை கண்டாக வேண்டும். இங்கே ஜனநாயகம் என்பது எண்ணிக்கை ஜனநாயகத்திற்கு அப்பால் சமூகங்களின் ஜனநாயகம் என்ற வகையில் நாம் அதனை வளர்த்துச் செல்லவேண்டும். இவ்வாறு எந்த வொரு ஆதிக்க நிலையும் அற்ற நிலையில் இணைக்கும் போதுதான், அனைத்து சமூகங்களினதும் ஆத்மார்த்த ரீதியான பங்களிப்பை கொழும்புத் தமிழர்களுக்கான அரசியல் நிறுவனம் பெற்றுக்கொள்ள முடியும்.

அமைப்பின் தலைமைத்துவம் உட்பட அரசியல் பிரதிநிதித்துவம் போன்ற அனைத்திலும் சமத்துவம் பேணப்படல் வேண்டும். இந்த வகையில் கொழும்புத் தமிழ் தலைமைத்துவம் என்பது மேற்கூறிய நான்கு சமூகப் பிரிவினரின் கூட்டாக அமைதல் வேண்டும். கொழும்புத் தமிழர் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் இவ்வாறு ஒரு அமைப்பினை உருவாக்குவது பற்றி யோசிக்கலாம்.

### கொழும்புத் தமிழர்களுக்கான அமைப்பின் பிரதான பண்புகள்

மேற்கூறிய சிந்தனையின் அடிப்படையில் பருமட்டாக கொழும்புத் தமிழர்களுக்கான அமைப்பு பின்வரும்

—18

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்கிருந்து இதனை ஆரம்பிப்பது என்று கூட சிந்திக்க முடியாத ளவுக்கு பிரச்சினை உக்கிரமடைந்துள்ளது. யார் சரி? யார் பிழை? உண்மை, பொய் எது? என்பனவற்றை பிரித்தறியக்கூட முடியாத அளவுக்கு இவ்விடயம் சிக்கலாகிப் போயுள்ளது.

எனினும், இச்சிக்கலை தீர்த்துக் கொள்வது அவசியமாகும்; சிக்கிக் கொண்ட விடயங்களை பிரித்தெடுத்தல் வேண்டும். இம்முக்கியத் தடையை வெற்றி கொள்ளாவிடில் மீண்டும் தீர்த்துக்கொள்ள முடியாத அழிவு மட்டுமே எஞ்சக்கூடும்.

நாம் போராட்டக் களத்திற்கு, இவ்விடயங்களை ஆழ யோசித்துவிட்டே செல்ல வேண்டியுள்ளது.

நான்கு மாதங்களைக் கடந்து சென்றுக் கொண்டிருக்கும் பியகம வர்த்தக வலயத்தினைச் சேர்ந்த சி அன்ட் எச் (C and H) தொழிலாளர் போராட்டம் எவரது கவனத்திற்கும் உட்படாது முன்னோக்கிச் சென்று கொண்டிருப்பது, இங்கு நிலவும் அடக்குமுறையின் உச்சகட்டத்தையே தெளிவாகப் பிரதிபலிக்கிறது என்று கூறலாம்.

வெற்றியின் பலத்தோடு நிறைவடைய வேண்டிய இந்தத்தொழிலாளர் போராட்டம், தோல்வியின் கவலையோடு நிறைவடைகின்ற அவலத்துக்கு முகம் கொடுத்து வருகின்றது. இந்த சி அன்ட் எச் தொழிலாளர் போராட்டத்தை விளங்கிக் கொள்ள முதலில் இருந்தே நாம் திரும்பிப் பார்க்க வேண்டும்.

### பின்னணி

பியகம சுதந்திர வர்த்தக வலயத்திலேயே அதிக தொழிலாளர்கள் (3800) சி அன்ட் எச் நிறுவனத்திலே தான் தொழில் புரிகின்றனர். இத் தொழிலாளர்களில் 200 பேர் ஆண்கள், எஞ்சியவர்கள் அனைவரும் பெண்களாவர். கொரிய நிறுவனமான இந்நிறுவனம், விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்கின்றது.

இவ்வருடம் ஜனவரி 28ம்திகதி, நிறுவனத்திற்கு வெளியே ஒரு சம்பவம் நிகழ்ந்தது. சி அன்ட் எச் நிறுவனத்தின் தொழிலாளர் பிரதிநிதிகளாக ''ஊழியர் சபை'' செயற்பட்டது. இதன் புதிய தலைவராக சுகத் என்பவர் கடந்த வருட இறுதியில் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் உள்ளிட்ட புதிய நிர்வாகத்தின் ஆயுட்காலம் இரண்டு வருடங்களேயாகும்.

இப்புதிய ஊழியர் சபை நிர்வாகம் நீண்டகாலமாக நிலவிவந்த தொழிலாளர் பிரச்சினைகள் குறித்து பல தடவைகள் எழுத்து மூலமாக தொழிற்சாலை நிர்வாகத்திற்கு அறிவித்தது. இதன் முக்கியமான கோரிக்கை நிறுவனத்தின் முகாமையாளர்களுள் ஒருவரான எர்னஸ்ட் பெரேராவின் முரட்டுத்தனமான நிர்வாகத்தை நிறுத்தி, அவரை நீக்க வேண்டும் என்பதாகும். இது தொடர்பாக மௌனம் காத்த நிர்வாகத்தினர், இறுதியில் பெப்ரவரி 2ம் திகதி விசாரணை நடாத்துவதாகக் கூறி ஊழியர் சபைக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். ஜனவரி 28ம் திகதி எர்னஸ்ட் பெரேராவுக்கு நிறுவனத்தினால் கட்டாய விடுமுறை வழங்கப்பட்டது. அன்றைய இரவு ஊழியர் சபையின் தலைவரான சுகத் நாணயக்காரவின் இல்லத்துக்கு வந்த ரவுடிக் கும்பல் ஒன்று, அவரை பலமாகத் தாக்கி காயப்படுத்தியுள்ளது. அத்தோடு நிறுத்திக்கொள்ளாத அந்த ரவுடிக்கும்பல் ஊழியர் சபை பிரதிநிதிகளின் இல்லங்களுக்கும் சென்று, கொலைப்பயமுறுத்தல் விடுத்துள்ளது.

### தொழிலாளரை அடக்க ரவுடிகள்

இதையொன்றுமே அறியாதவர் போல, பெப்ரவரி 2ம்திகதி எர்னஸ்ட் பெரேரா விசாரணைக்கென காலை 8.00 மணியளவில், பொலிசார் சிலருடன் நிறுவனத்துக்கு வருகை தந்துள்ளார். ஆனால், ஏற்கெனவே ரவுடிகளை அனுப்பி தலைவரைத் தாக்கியது எர்னஸ்ட் பெரேரா தான் என்ற கருத்து தொழிலாளர்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டிருந்தது. இந்நிலைமை தொழிலாளர்களுக்கிடையே அமைதியின்மையை ஏற்படுத்தியது. அவர்களை அடக்கவென பொலிசார் நிறுவனத்துக்குள் புகுந்ததும் இந்நிலைமை மேலும் உக்கிரமடைந்தது. இதனை எதிர்த்த தொழிலாளர்களை எர்னஸ்ட் பெரேரா அடக்க எடுத்த முயற்சிகளை பொறுக்காத 300 பெண் தொழிலாளர்கள், எர்னஸ்ட் பெரேராவை அவரது அறையிலிருந்து வெளியே கொணர்ந்து தாக்கத் தொடங்கினர். ஒருவாறு பொலிஸ் தலையீட்டின் காரணமாக எர்னஸ்ட் பெரேரா அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டார். நிறுவனம் தொழிலாளர்களுக்கு பயமுறுத்தல் விடுத்ததுடன், அனைத்தையும் பொலிசார் பார்த்துக்கொள்வர் எனக்கூறி விட்டது.

சில நாட்கள் கழிந்தன. பெப்ரவரி 11ம் திகதி இரவு, பியகம பொலிசாரினால், இல்லங்களை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த ஊழியர்கள் தலைவர் உள்ளிட்ட சபைப் பிரதிநிதிகள் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

### 62 தொழிலாளர் நீக்கம்

12ம்திகதி இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்ட பின், பிணை வழங்கப்படாது மஹர சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். பின்னர் 18ம்திகதி அவர்கள் நால்வருக்கும் பிணை வழங்கப்பட்டது. ஆனால், அன்றைய தினம் மேலும் தொழிலாளர்கள் பலர் கைது செய்யப்பட்டு, அவர்களில் 10 பேர் மீண்டும் மஹர சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர். பெப்ரவரி 25ம் திகதி அப் பத்து பேருக்கும் பிணை வழங்கப்பட்டது. ஆனால், நிறுவனத்தின் நிர்வாகிகளினால் பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 62 தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். இந் நிலைமையின் கீழ் 25ம்திகதி கம்பஹா நீதிமன்ற வளவில் 3000க்கு அதிகமான தொழிலாளர்கள் கூடினர். இந்நிலைமையை சாட்டாகப் பயன்படுத்திய நிர்வாகிகள், நிறுவனம் தற்காலிகமாக மூடப்பட்டதென அறிவித்தனர்.

பெப்ரவரி 26ம்திகதி, நிறுவன வாயிலில் கூடிய தொழிலாளர்கள், நிறுவனத்தின் நிர்வாகிகள் மற்றும் பி.ஓ.ஐ. அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்த முடிவெடுத்தனர். இங்கு தொழிலாளர்கள் சார்பாக ஜே.வி.பி.யின் தொழிற்கட்சியான அனைத்து சங்கங்களினதும் ஊழியர் சங்கம் முன்வந்தது. நிறுவனத்தின் சார்பாக முகாமைத்துவத்தினால் நியமிக்கப்பட்ட நிறுவன அதிகாரிகள் 25 பேர் உள்ளிட்ட ஒரு குழு முன் வந்தது. இங்கு இரு சாராரினதும் இணக்கத்தின் பிரகாரம், மீண்டும் நிறுவனம் திறக்கப்படுமெனவும், நீக்கப்பட்டிருந்த தொழிலாளர்களை (வேலை இழந்த 62 பேர்) வேலைக்கமர்த்த வேண்டுமாயின், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கடிதத்தில் கையெழுத்திட வேண்டுமெனவும் அத்தொழிற்சங்கத்தால் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

''....... ஆகிய நான் சி அன்ட் எச் நிறுவனத்தில் மீண்டும் தொழில் பெற்றுத்தருமாறு கோருவதுடன், நிறுவன சட்ட திட்டங்களுக்கு இனி மேல் பணிந்து போவதோடு உற்பத்தி நடவடிக்கைகளை பொறுப்போடு மேற்கொள்ளவும், எனது முழுமையான பங்களிப்பை வழங்கவும் இதன் மூலம் கட்டுப்படுகிறேன்.''

இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிறுவனச் சட்டத்தின் சில சரத்துகள் தொடர்பாக தொழிலாளர்கள் காட்டிய எதிர்ப்புணர்வின் கீழ், அச்சரத்துக்கள் நீக்கப்பட்டாலும், அத்தொழிற்சங்கத்தால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட உறுதியின் அடிப்படையில் அக்கடிதத்தில் கையெழுத்திட அனைவரும் சம்மதித்தனர். அங்கு நிர்வாகத்தினரால் இனிமேல் எந்த ஊழியர்களும் பழிவாங்கப்படமாட்டார்கள் என உறுதியளிக்கப்பட்டது. அது வெறும் வாய் ஜாலமென்பது அடுத்த நாள் தொடக்கம் வேலைக்குச் சென்ற தொழிலாளர்களுக்கு விளங்கியது.

> **தொழிற்சங்கம், "அவசரப்படாதீர்கள். நாம் சமாதானமாக கதைத்து பிரச்சினையைத் தீர்ப்போம். உங்கள் தரப்பிலும் தவறு உள்ளது. எர்னஸ்டை தாக்கியது தவறு. அவரும் ஒரு தொழிலாளி....." எனக் கூறியது. தொழிலாளர்கள் கோபமுற்றனர். தொழிற்சங்கம் தம்மை கைவிட்டுவிட்டதென்று புரிந்து கொண்டார்கள். இவ்வளவு நாட்களும் தமக்கெதிராக குரூரமாக நடந்து கொண்டு, பல தொழிலாளர்களை விரட்டியடித்து, நிர்வாகத் தரப்பினரின் திருப்திக்காக செயற்படும் பொலிசார், மற்றும் ரவுடிகளைக் கொண்டு தொழிலாளர்களைத் தாக்கிய எர்னஸ்ட் பெரேரா எங்ஙனம் ஒரு தொழிலாளியாவார் என்று அவர்கள் கேட்கத் தொடங்கினர்.**

### பழிவாங்கப்பட்ட தொழிலாளர்கள்

நிர்வாகத் தரப்பினரின் அடக்குமுறை உக்கிரமாக்கப்பட்டது. தொழிலாளர்களைப் பழிவாங்குதல் தொடர்பான புதிய வழிமுறைகள் கையாளப்படத் தொடங்கின. இந்நெருக்கடிக்கு காரணமாகிய எர்னஸ்ட் பெரேராவுக்கு முகாமையாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன் சம்பள உயர்வுகள் மற்றும் வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் மார்ச் 15ம்திகதி மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவதாக அனைவருக்கும் உறுதியளிக்கப்பட்ட போதும், இன்றுவரை மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் 28 பேர் மட்டுமே. அவர்களுக்கும் கூட நிறுவனத்தில், முதலில் செய்யப்பட்ட வேலை கூட வழங்கப்படாது, அவர்கள் அனைவரும் ஒரு அறையில் தனியாக இருத்தப்பட்டு, நிறுவனத்தின் வேறு எந்த ஊழியருடனும் பேசுவது கூட தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பேசும்போது பிடிபட்டால் எந்த விசாரணையோ, முன்னறிவிப்போ இன்றி வேலையிலிருந்து நீக்கப்பட்டதாக கடிதம் கொடுக்கப்பட்டு, சேவையிலிருந்து விலத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டது. கடந்த வாரமொன்றில் நிறுவனத்துக்குள் விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரமொன்றை வைத்திருந்தார் என்ற ஒரே காரணத்துக்காக ஊழியர் ஒருவர் வேலையிலிருந்தே நீக்கப்பட்டுவிட்டார். இது ஒரு மோசமான மனித உரிமை மீறல் செயலாகும். இது நபரொருவருக்கு அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள பேசும், எழுதும், கூட்டம் கூடும் சுதந்திரத்தை பறித்தெடுக்கும் செயலாகும். இவை தொடர்பாக நிர்வாகத் தரப்பாருடன் பேசுவதற்குக்கூட இடமளிக்காத நிர்வாகிகள் ஊழியர் சபை பிரதிநிதிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்து, தாம் எந்த தொழிற்சங்கத்தையும் நம்புவதில்லையெனவும், இது தொடர்பாக எவராவது கதைத்தால் வீட்டுக்குச் செல்ல தயாராக வேண்டுமென்றும் பகிரங்கமாக வெருட்டி வருகிறது.

### ச்சூ காட் முறை

இதற்கு எதிராக செயற்படத் தொழிலாளர்கள் பின்வாங்கிய நிலையில் தொழிலாளர்களை பலவந்தமாக 12 மணிநேரம் ''சேவை காவலில்'' வைத்திருக்கும் நிர்வாகிகள், மிகவும் மோசமான முறையான ''சிறுநீர் அட்டை முறை''யையும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். (''ச்சூ காட்'' எனும் இந்த முறை இலங்கையில் இயங்குகின்ற அனைத்து சுதந்திர வர்த்தக வலையங்களிலும் நடைமுறையிலிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.)

சகல தொழிலாளிக்கும் தமது இயற்கை கடனை நிறைவேற்றிக் கொள்ளவென இந்த அட்டை வழங்கப்பட்டு வருவதுடன் மேற்பார்வையாளரால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு கையொப்பமிட்ட பின்னரே மலசல கூடத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படுவர். சில நேரங்களில் மேற்பார்வையாளர்கள் கையொப்பமிட மறுப்பதுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொறுமையாக அடக்கி இருக்க வேண்டியுமுள்ளது. இதற்கு முன்னரும் ஒரு சந்தர்ப்பத்தில் சிறுநீர் அட்டை முறை அமுல் செய்யப்பட்ட போதும், பின்னர் தொழிலாளர்கள் போராடியதன் பேரில் அதனை அமுல்படுத்துவது நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் தொழிலாளர்களை பழிவாங்க நிர்வாகிகள் அம்முறையை அமுலுக்கு கொண்டு வந்துள்ளனர்.

இந்தத் துன்புறுத்தல்கள் நாளுக்கு நாள் மோசமாக உக்கிரமடையும் நிலைமைக்கு எதிராக, எதையும் செய்ய முடியாதிருக்கும் தொழிலாளர்கள், வேலையிலிருந்து விலகிச் செல்லத் தொடங்கியுள்ளனர். இதுவரை நிறுவனத்திலிருந்து 425 பேர் வரையில் விலகிச்சென்றுள்ளனர். இது நிர்வாகத்தின் குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

### தோல்விக்கு என்ன காரணம்?

சி அன்ட் எச் தொழிலாளர் போராட்டம் இவ்வாறு தோல்வியை நோக்கி பயணித்தது ஏன்? இப்பிரச்சினைக்கு விடை தேடுவது முக்கியமானதாகும். ஏனெனில், எதிர்காலத்தில் வெடித்துச் சிதறவுள்ள எரிமலை, பியகம தொழிலாளர்களிடம் எழுச்சி பெற்றுள்ளது.

### 94 போராட்டம் முதலாவது பலி

94ல் இவ்வாறான தொழிலாளர் போராட்டம்; உக்கிரமான அடக்குமுறைக்கு முன்னால் வெற்றி கண்டது எவ்வாறு? இதற்கு எங்கிருந்து தலைமைத்துவம் கிடைத்தது?

சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க உரிமை, ''வலயம்'' ஸ்தாபிக்கப்படும் பொழுதே பறிக்கப்பட்டு விட்டது. முதலீட்டாளர்கள் விரும்பிய வகையில், தொழிலாளர்களை சுரண்டத் தேவையான அனைத்து வசதிகளும் முதலாளித்துவ அரசாங்கத்தினால், எந்தவிதத் தயக்கமுமின்றி வழங்கப்பட்டுவிட்டது. இதனை நாட்டின் ஏனைய தொழிற்சங்க அமைப்புகள் பாரதூரமாக எண்ணியிருக்கவில்லை. அதேபோல், சுதந்திர வர்த்தக தொழி



> **நிர்வாகத் தரப்பினரின் அடக்குமுறை உக்கிரமாக்கப்பட்டது. தொழிலாளர்களைப் பழிவாங்குதல் தொடர்பான புதிய வழிமுறைகள் கையாளப்படத் தொடங்கின. இந்நெருக்கடிக்கு காரணமாகிய எர்னஸ்ட் பெரேராவுக்கு முகாமையாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன் சம்பள உயர்வுகள் மற்றும் வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் மார்ச் 15ம்திகதி மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவதாக அனைவருக்கும் உறுதியளிக்கப்பட்ட போதும், இன்றுவரை மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் 28 பேர் மட்டுமே. அவர்களுக்கும் கூட நிறுவனத்தில், முதலில் செய்யப்பட்ட வேலை கூட வழங்கப்படாது, அவர்கள் அனைவரும் ஒரு அறையில் தனியாக இருத்தப்பட்டு, நிறுவனத்தின் வேறு எந்த ஊழியருடனும் பேசுவது கூட தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பேசும்போது பிடிபட்டால் எந்த விசாரணையோ, முன்னறிவிப்போ இன்றி வேலையிலிருந்து நீக்கப்பட்டதாக கடிதம் கொடுக்கப்பட்டு; சேவையிலிருந்து விலத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டது.**

சே

.. எம்மால்
என்பன ... கூட
இருக்கின்றோ
இறங்கினோம்.
கொண்டிருந்த
சிதறியது எதிர்
எர்னஸ்ட் பெ
முடியவில்லை.
தான். எனினும்,
கொண்டு விட்
தலைவர்களை
நீக்கினர். பொ
தொழிலாளர்க
விளங்கலாம்.

அது எவ்வாறா
சென்றோம். நா
வுடன் ஒன்றினை
இவ்வாறு செய்
இடம்பெறும் ச
முகம்கொடுக்க
விடயங்கள் கா
எண்ணினோம்
செய்தோம். பத்
வந்தோம். மே
நிலைமை மாறி

இது வரை எ
சுவரொட்டி ஒ
இவ்வாறான
செய்யவில்லை
ஊழியர்களை நீ
செய்ய தொ
வழக்குப்போ
பெற்றுக்கொண்
பெற்றுக்கொள்

எனினும், பல
கொண்டிருக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# நிறுவனம்:

## ...திர வர்த்தக வலயத்தில் கருங்காலித் ...ழிற்சங்கங்கள்!

சரிநிகருக்காக மொ.ல.செனவிரத்ன
தமிழில்: தர்ஷினி

> ஜே.வி.பியின் பத்திரிகைகளை தொகைதொகையாக நிறுவனத்துக்குள் எடுத்துச் சென்று விற்பனை செய்யும்படி தொழிலாளர்கள் கோரப்பட்டனர். ஆச்சரியப்படத்தக்கவகையில் நிறுவனத்தின் நிர்வாகிகளும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது அமைதியாக இருந்தனர். இத்தொழிற் சங்கத்திற்கும் நிர்வாகிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் பல இடம்பெற்ற போதும் தொழிலாளர்களின் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருந்தது.

லாளாகளுககிடையிலும தொழிற்சங்க அமைப்புகள் உருவாகவில்லை. இடதுசாரிகள் எனக் கூறிக்கொள்ளும் அரசியல் கட்சியொன்று பாரதூரமாக தலையிடாது, போராட்டம் ஆரம்பமானவுடன் மட்டும் 'தலையைக் காட்டிவிட்டுச் செல்ல'த் தொடங்கியது. மாறாக, நீண்ட காலப்போராட்டங்களுக்கென தொழிலாளர்களை தயார்ப்படுத்தவில்லை. இந்நிலைமையின் கீழ் தொழிலாளர்கள் தன்னெழுச்சி பெற்று நிறுவனமயப்பட்டு, 94ல் பெரும் போராட்டத்தை மேற்கொண்டனர். போராட்டம் வெற்றியளித்ததாயினும், பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினால் ஒரு தொழிலாளரை இழக்க நேரிட்டது. அவர் அன்சல் லங்கா நிறுவனத்தைச் சேர்ந்த பிரேமரத்ன என்பவராவர். பொ.ஐ.மு. அரசாங்கத்தின் முதலாவது (தொழிலாளர்) பலி அப்போதுதான் நடந்தது.

### ஜே.வி.பி.யின் அந்தரே

94 பொதுத்தேர்தலுடன் மீண்டும் அரசியல் நீரோட்டத்திற்குள் கலந்த ஜே.வி.பி.யினர், துரிதமாக நாட்டின் வெவ்வேறு துறைகளில் தமது நடவடிக்கைகளை உறுதிப்படுத்த விளைந்தனர். இதன் ஒரு படியாக சு.வ.வ. (FTZ) தொழிலாளர்கள் மத்தியில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அனைத்து சங்க ஊழியர் சங்கத்தின் ஊடாக

ஜே.வி.பி. இவ்வாறு செயற்பட வந்தது, பெரும்பாலான தொழிலாளர்களுக்கு பெரும் ஆறுதல் அளித்தது. இங்கிருந்த முன்னைய தொழிற் சங்கங்கள் எல்லாம் தொழிலாளர்களை முதலாளித்துவ வர்க்கத்தினரால் சிறைக்குள் வைப்பதற்கே உதவி வந்தனர்.

சி அன்ட் எச் தொழிலாளர்கள் இம்முறை போராட்டத்தை ஆரம்பித்த போது ஜே.வி.பி.யின் தொழிற்சங்கத்தை நோக்கிச் செல்லத் தொடங்கியது இதனாலேயே எனலாம். முதல் சுற்றில் 800 தொழிலாளர்களுக்கு அதிகமானோர் இதில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டதுடன் அவர்கள், அங்கத்துவக் கட்டணமாக ரூ.10 வீதம் செலுத்தவும் தொடங்கினர். ஆனால், விரைவிலேயே ஜே.வி.பியின் பத்திரிகைகளை தொகைதொகையாக நிறுவனத்துக்குள் எடுத்துச் சென்று விற்பனை செய்யும்படி தொழிலாளர்கள் கோரப்பட்டனர். ஆச்சரியப்படத்தக்கவகையில் நிறுவனத்தின் நிர்வாகிகளும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது அமைதியாக இருந்தனர். இத்தொழிற் சங்கத்திற்கும் நிர்வாகிகளுக்கும் இடையே போச்சுவார்த்தைகள் பல இடம்பெற்ற போதும் தொழிலாளர்களின் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருந்தது.

### தலைமையே துரோகியாக....

இதனால் ஆத்திரமுற்ற தொழிலாளர்கள் கேள்வியெழுப்பச் சென்ற போது தொழிற்சங்கம், ''அவசரப்படாதீர்கள். நாம் சமாதானமாக கதைத்து பிரச்சினையைத் தீர்ப்போம். உங்கள் தரப்பிலும் தவறு உள்ளது. எர்னஸ்டை தாக்கியது தவறு. அவரும் ஒரு தொழிலாளி.....'' எனக் கூறியது. தொழிலாளர்கள் கோபமுற்றனர். தொழிற்சங்கம் தம்மை கைவிட்டுவிட்டதென்று புரிந்து கொண்டார்கள். இவ்வளவு நாட்களும் தமக்கெதிராக குரூரமாக நடந்து கொண்டு, பல தொழிலாளர்களை விரட்டியடித்து, நிர்வாகத் தரப்பினரின் திருப்திக்காக செயற்படும் பொலிசார், மற்றும் ரவுடிகளைக் கொண்டு தொழிலாளர்களைத் தாக்கிய எர்னஸ்ட் பெரேரா எங்ஙனம் ஒரு தொழிலாளியாவார் என்று அவர்கள் கேட்கத் தொடங்கினர். தாம் ஏமாற்றப்பட்டுவிட்டதை தொழிலாளர்களால் நம்ப முடியாதிருந்தது; ஆனால், பரிதாபம், அது உண்மையாக அல்லவா இருந்தது.

இந்த வேளையில் தான் நிர்வாகத் தரப்பினர் ஊழியர் சபையை ஏற்றுக் கொள்ள முடியாதென அறிவித்தனர். இது தொழிலாளர்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியது. 'அந்தரே' தொழிற்சங்கமோ இது தொடர்பாக நிர்வாகத் தரப்பாருடன் எந்தவிதப் பேச்சுவார்த்தையையும் மேற்கொள்ளவில்லை. அத்துடன் வேலையிலிருந்து நீக்கப்பட்ட அனைவருக்கும் முதலாளித்துவ சட்டப்படி ''வழக்கு'' தொடுக்கும்படி அழுத்தம் கொடுத்தனர்.

பெப்ரவரி 20 நிர்வாகத்தரப்பாருடன் நிறுவனத்தை மீண்டும் திறப்பதற்கான பேச்சுவார்த்தையின் போது; நிர்வாகத்தினால் வழங்கப்பட்டிருந்த வாக்குறுதிகளாக பழிவாங்காமை, குறை சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் ஆகியவற்றை தாம் பெற்றுக் கொடுப்பதாக தொழிலாளர்களுக்கு உறுதியளிக்கவே இல்லையென தற்போது இத் தொழிற்சங்கம் கூறுகிறது. இது முன்னைய தொழிற்சங்கத் தலைமைகளை விட துரோகத்தில் ஒரு படி மேலே போய்விட்டது என்பதையே காட்டியது.

தொழிலாளர் உரிமைக்காக தோற்றுகிறோம் எனக் கூறிக் கொண்டு பாரிய மே தின ஊர்வலங்கள், கூட்டம் என்பனவற்றை வைத்து, ''உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்'' எனக் கூச்சலிடும் ஜே.வி.பி தொழிற் சங்கப் பிரிவின் உண்மை நிலவரம் இப்போதுதான் தொழிலாளர்களுக்கு தெரிய வந்தது.

### துரோக ஒப்பந்தம்

மின்சார சபைத் தொழிலாளர் போராட்டத்தில், அப்போராட்டம் ஐ.தே.க. வின் திட்டமெனவும் ஜே.வி.பிக்கு அப்போராட்டத்துடன் எந்தவித தொடர்பும் இல்லையென பொ.ஐ.மு.வுக்கு அறிவித்தல் விடுத்ததும், உருக்கு, துறைமுகம் மற்றும் பிற போராட்டங்களை கைவிட்டு அவற்றுக்கு பகிரங்கமாக எதிர்ப் பிரச்சாரத்தை மேற்கொண்டதையும் பார்க்கும்போது அதன் சுயரூபம் தெரியவருகிறது. இந்நிலைமையை மேலும் நீடித்துக் கொண்டே கடந்த வாரம் பியகம அன்சல் லங்கா நிறுவனத்தின் நிர்வாகத்துடன் ஒப்பந்தமொன்றை செய்து கொண்டதன் மூலம் தொழிலாளர்களுக்கெதிராக செயற்பட்டது இப்படித்தான்;

''இருசாராரினதும் அபிலாஷையானது, பரந்த, சுமுகமான சேவை நிலைமையை கட்டியெழுப்புதல், அதிமுன்னேற்ற உற்பத்தியின் பலனைப் பெற்றுக்கொள்ளல்'' என்று கூறி ஏற்படுத்தப்பட்ட இந்தக்கூட்டு ஒப்பந்தம் 2000ம் ஆண்டு வரை அமுலில் இருக்கும். அக் காலப் பகுதியில் தொழிற்சங்கக் கோரிக்கைகளை முன்வைத்தல், வேலை நிறுத்தம் செய்தல் என்பனவற்றை செய்வதில்லையென தொழிற்சங்கம் உறுதியளித்துள்ளது.

சி அன்ட் எச் போராட்டத்தினூடாக நிர்வாகத்தரப்பு மற்றும் தொழிற் சங்கம் கொண்டு செல்லும் நடவடிக்கைகளை நாம் ஏன் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் என்பது இப்போது விளங்கக் கூடும்.

நாடு முழுவதும் கட்டியெழுப்பப்பட்டு, பின்னர் சரிந்து தரைமட்டமாகும் தொழிலாளர் போராட்டம் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்குள்ளும், சந்தர்ப்பவாத இடதுசாரிக்குள்ளும் சிக்குப்பட்டு அழிவுறுவது துன்பகரமானதேயன்றி வெற்றிகரமானதல்ல.

### ...யை இழந்த தொழிற்சங்க உறுப்பினர்

...வியை ஏற்றுக்கொள்வதை விட, வேறு என்ன செய்வது
...ன ...ப்பார்க்க முடியாத நிலையில் நாம் அனைவரும்
...பரும் நம்பிக்கையுடனேயே நாம் போராட்டத்தில்
...வருடங்களாக எமக்கெதிராக கட்டியெழுப்பப்பட்டுக்
...றுத்தல்களுக்கெதிராக போராடும் தேவை வெடித்துச்
...த சம்பவமொன்றை அடிப்படையாகக் கொண்டாகும்.
...ின் குரூர நிர்வாகத்தினை எவராலும் தாங்கிக்கொள்ள
...ர தாக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகியதும் இதனால்
...ா மூலம் நிர்வாகத்தரப்பினர் உச்சமான பயனை பெற்று...
... ஊழியர் பிரச்சினைக்காக முன்வந்த தொழிலாளர்
...வதற்காக, அவர்கள் அனைவரையும் வேலையிலிருந்து
...ற்றச்சாட்டின் கீழ் சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட
...டையில் இயங்கக் கூடியவர்கள் இருந்ததை இதன் மூலம்

..., நாம் 4 மாதங்களாக போர்ாட்டத்தை முன்கொண்டு
...யர் சபையினூடாக போராடுவதற்குப் பதிலாக 'அந்தரே'
... அவர்கள் பால் இருந்த நம்பிக்கையினாலேயே. ஜே.வி.பி
...ன நாம் எண்ணவே இல்லை. எனினும், இப்பொழுது
...ங்கள் காரணமாக எம்மால் சக தொழிலாளர்களுக்கும்
...ாத நிலை தோன்றியுள்ளது. அவர்கள் முதலில் கூறிய
...க, நாம் போராட்டத்தில் வெற்றி பெற்று விடுவோம் என
...னால் அவர்கள் கூறிய அனைத்து விடயங்களையும்
...கள் விற்றோம், சங்கத்திற்கு தொழிலாளர்களை கொண்டு
...திற்கு ஊர்வலம் சென்றோம். ஆனாலும் இப்பொழுது
...ு.

...ச்சினையை விளக்குகின்ற துண்டுப்பிரசுரம் ஒன்றை,
... இவர்களால் அடிக்க முடியாதுள்ளது. பியகமவில்
...ட்டம் உள்ளதென்று கூட அவர்கள் பிரச்சாரம்
...கள் செய்த ஒரே வேலை சேவையிலிருந்து நீக்கப்பட்ட
...த்திற்குக் கொண்டு சென்றது மட்டுமே. இந்த வேலையை
...கமொன்று தேவையில்லை. அத்துடன் நாம்
...யும் விரும்பவில்லை. நாம் போராடியது, நட்டஈடு
...டுக்குச் செல்ல அல்ல. எமது தொழிற்சங்க உரிமையை
...பாராடினோம்.

...ாளர்களுக்கு இப்போதைய நிலைமையை பொறுத்துக்
...ுள்ளது. அதனால் நிறுவனத்தில் இருந்து விலகிச் செல்ல

தொடங்கியுள்ளனர். எமக்காக நிறுவனத் தரப்பாருடன் பேச அவர்கள் தயாராக இல்லை. அந்த வாய்ப்பு இல்லாமல் போனது இவ்வாறுதான். எவராவது பிரச்சினை தொடர்பாக கதைத்தால், அன்றே அவரை வேலையிலிருந்து நீக்கி விடுவார்கள். கடந்த வாரம் துண்டுப் பிரசுரம் விநியோகித்ததற்காக வேலையிலிருந்து நீக்கப்பட்ட சம்பத் என்பவரை, 'அந்தரே'வுக்கு அழைத்துச் சென்ற பின்னர், அவர்கள் இதற்கு நாம் வழக்குத் தொடரலாம் என்று கூறினர். இதனால் தொழிலாளர்கள் பலர் கதைக்கப் பயப்படுகிறார்கள். வழக்குப்போட அல்லவே நாம் போராடத் தொடங்கினோம்.

இந்நிலைமையின் காரணமாக தொழிலாளர்கள் மத்தியில் பல்வேறுபட்ட கருத்துக்கள் மேலெழத் தொடங்கின. சில கருத்துக்கள் துரதிருஷ்டவசமானவை. தோல்வியை ஏற்றுக்கொண்டு அனைவரும் சேவையிலிருந்து விலகத் தொடங்கினர். எனினும், அவ்வாறு செய்ய இடமளிக்க முடியாது. பின்னர் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கதைத்து தீர்மானமொன்றுக்கு வந்தோம். அதாவது, அனைவரும் ஊழியர் சபையாக செயற்படுவோம் என முடிவெடுத்தோம். ஏனெனில், 'அந்தரே - ஜே.வி.பி.' தலையீட்டை சில தொழிலாளர்கள் விரும்பவில்லை. முன்பு அவ்வாறான நிலை இருக்கவில்லை. அனைவரும் ஒன்றுபட்டு இருந்தோம். கட்சியின் கையாட்களாக மாறமுடியாது என பலர் கூறினர். ஜே.வி.பி. தொழிலாளர்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் நிலைக்கு வந்துள்ளதா என்பதை, அன்சல் லங்கா பிரச்சினையை உதாரணத்திற்கு எடுத்து பதில் கூறுவது கடினம். இறுதியில் எமது இன்றைய தீர்மானம் ஊழியர் சபையை கட்டியெழுப்புவதே. மீண்டும் ஊழியர் சபையை ஏற்றுக்கொள்ளும் படி நாம் கடந்த வாரம் பி.ஓ.ஐ. அதிகாரிகளுக்கு எழுத்துமூலம் அறிவித்தோம். அதேபோல் வலயத்தில் இருக்கும் நிறுவனங்களின் தொழிற்சங்கங்களை ஒன்றுபடுமாறு கோரி கடிதம் எழுதியுள்ளோம். அனைவரதும் ஆதரவு இவ்விடயத்தில் கிட்டியது.

வலயத்தில் இடம்பெறும் அடிமை நிலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அனைவரையும் நாம் அழைக்கின்றோம்.

இலங்கையில் எந்தவொரு நிறுவனத்திலும் இடம்பெறாத வகையில் அடிப்படை மனித உரிமைகளை மீறி, தொழிலாளர் உழைப்பை சுரண்டி, மிகவும் மோசமான நிர்வாகத்தை நடாத்தும் நிர்வாகிகளுக்கு எதிராக அனைவரும் ஒன்றுபட்டு, பகட்டு சந்தர்ப்பவாத நலன்களிலிருந்து விலகிப் போராடினால் வெற்றியை பெற்றுக்கொள்ள முடியும் என நம்புகின்றோம். சி அன்ட் எச் நிறுவனம் எமக்கெதிராக அடக்குமுறையைப் பிரயோகித்து சுரண்டுவதுடன், மக்களின் பணத்தினால் வயிற்றை வளர்க்கும் முறையை, கடந்த வாரம் திருட்டுத்தனமாக மின்சாரத்தை பெற்றதற்காக 1 கோடி 10 லட்சம் தண்டப் பணத்தினை வழங்க வேண்டியேற்பட்டதன் மூலம் இதனை புரிந்து கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# கிரகமாற்றமும், இடதுசாரிக் கூட்டும்...

விக்ரமபாகு கருணாரத்ன

லக்பிம வாசித்துக்கொண்டிருந்த எனது மகள் 'அப்பாவுக்கு சனி மாற்றம் நல்லதென இதில் உள்ளது' என்று கூறினார். எனக்குச் சிரிப்பு வந்தது. எனினும், நான் அதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என வாசித்துப் பார்த்தேன். ஏப்ரல் தொடக்கம் இரண்டரை வருடங்களுக்கு சனி, மேட இராசியில் சஞ்சரிப்பதால் இடதுசாரி தலைவர்களுக்கு சுப காலம் வருகின்றதாம். இது கிரகப்பலன் மூலம் கூறக் கூடியதல்ல. இது சர்வதேசத்தைப் பார்த்தாலே விளங்கக் கூடிய விடயம். குறிப்பாக, இலங்கையின் அரசியல் நிலவரத்தை அறிந்த எந்தவொரு முட்டாள் அரசியல் வாதியும் தெரிந்துக் கொள்ளும் விடயமாகும். எனினும், நன்மையான விடயம் என்றவுடன் அது வானத்தைப் பிய்த்துக்கொண்டு வருவதில்லை. அதற்காக நாம் தொழிற்படவேண்டும்.

சரியான இடதுசாரி முன்னணியொன்றைக் கட்டியெழுப்பி மக்களுக்கிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவோமானால் அதனூடாக எதிர்காலத்தில் பலமான இடதுசாரி கட்சியொன்று கட்டி எழுப்பப்படும் வாய்ப்புகள் உள்ளன.

ம.வி.முயினர் மே தினக் கூட்டத்தில் நவசமசமாஜக் கட்சியுடன் ஒன்று சேரும் எதிர்பார்ப்பு ஏற்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து இது பற்றி ஒடுக்கப்படுபவர்களின் அக்கறை அக்கட்சியில் இருக்கிறது என்பது எனக்கும் தெரியத்தொடங்கியது. அது பற்றி எல்லாத் தரப்பினரிடமிருந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ம.வி.மு தோழர்கள் விமல், குணதிலக்க ஆகியோர் எமது காரியாலயத்திற்கு வந்து, இது தொடர்பாக பேசியது ஆச்சரியமானது அல்ல. ஏனெனில், ம.வி.மு இலகுவாக ஏனையக் கட்சிகளுக்கு இடம் கொடுத்து விடாது. இச் செயற்பாடு அவசியமானது என்பதால் தாம் விசாரித்துப்பார்க்கின்றனர்.

எவ்வாறெனினும், இடதுசாரிகளைஒன்று சேர்ப்பது என்பது இலகுவான நடவடிக்கை அல்ல. ஏனென்றால், கருத்தியலின் அடிப்படையிலேயே இடதுசாரிகள் பிளவுப்பட்டுள்ளனர்.

எனவே இடம், பதவி ஆகியன பற்றிய பிளவானால் அதனை எப்படியாவது தீர்த்துக் கொள்ளலாம். ஆனால், கருத்துக்கள் பற்றிய முரண் பாடுகளைத் தீர்ப்பது இலேசானதொன்றல்ல. ஆனாலும் இப்போது இடதுசாரிகளை ஒன்று சேருமாறு நிர்ப்பந்திக்கும் நிலைமையொன்றும் உள்ளது.

சோதிடக்காரர்கள் என்றால், கிரகப்பலன் அமைவதன் படியே இவை யாவும் நடப்பதாகச் சொல்வார்கள். உண்மையிலேயே இவை பற்றியதான நம்பிக்கை மக்களிடம் கொஞ்ச நஞ்சமல்ல. இலங்கையில் மட்டுமல்ல ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பெரும் அரசியல் தலைவர்கள் கூட கிரகப்பலன் பற்றி நம்பிக்கை வைத்துள்ளனர். அதனால் இலங்கையின் அரசியல் தலைவர்கள் சனி மாற்றம் நிகழ்கின்றது எனக் கூறப்படும் நாட்களில் இலங்கையிலிருந்து தப்பியோடித் திரும்பி வந்தது ஒன்றும் பெரிய விடயமல்ல. கிரகப்பலன் பற்றி மனிதர்கள் ஏன் இவ்வளவு நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இது சிக்கலுக்குரிய கேள்வியொன்றாகும்.

நான், சமயங்களை நம்புவதற்கு யதார்த்தமான அடிப்படையொன்று இருக்கவேண்டும் என இதற்கு முன்பும் சுட்டிக் காட்டியுள்ளேன். அசைவு பற்றியும், அடிப்படை ஒழுங்கு பற்றியும் தெளிவு ஒன்றை ஏற்படுத்துவதனூடாக மனிதனால் சாதாரண அறிவை விட அப்பால் செல்லக் கூடிய அறிவைப் பெற முடியும். எல்லாச் சமயங்களிலும் இவ் ஒழுங்குகள், அடையாளங்களினூடாகவேணும் கற்பிக்க முயற்சி செய்யப்படுகின்றது. எல்லா விடயங்களிலும் உள்ளடக்கப்படும் பிறப்பு, இருப்பு, இறப்பு எனும் அடிப்படை ஒழுங்கு தொடர்பாக மனித மனதை ஈர்க்க எல்லாச் சமயங்களுமே முயல்கின்றன. படைப்பாளி, பரிசுத்த ஆவி, சுதன், மீட்பர் என்றாலும், ஆண்டவர், இரக்கமுள்ளவர், மன்னிப்பு அளிப்பவர் என்றாலும், பிரம்மா, விஷ்ணு, சிவபெருமான் என்றாலும் இவை பிறப்பு, நேரம், அழிவு, எனப்படும் நிலையற்ற மூலதர்மங்களே எனத் தெரிவிக்கப்படுகின்றது என்பதை எவரும் தெரிந்துக் கொள்ளவேண்டும்.

அதனால் சாதாரண அறிவின் எல்லையைக் கடந்து உலகை நோக்கிப் பார்க்க வழியொன்று கிடைப்பதனால் எல்லா மனிதருமே சமயமொன்றுடன் ஒன்றுப்படுகின்றனர். ஏனெனில், உள்ளும் புறமும் தடைகளுக்குட்படும்போதும் அது பற்றிக் கருத்தொன்றை ஏற்படுத்திக் கொள்ள சாதாரண அறிவும், தர்கமும் போதியது அல்ல. அதனால் தர்க்கமுறையிலான ஆராய்ச்சி அறிவொன்று தேவை. வாதமுறை ஆராய்ச்சி ஒழுங்கு எல்லாச் சமயங்களிலுமே வெவ்வேறு முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் ஒவ்வொருவரும் ஒன்றில் சமயமொன்றைப் பின்பற்ற வேண்டும். அல்லது தர்க்க முறை ஆராய்ச்சிப் பௌதீக வாதத்தை நம்ப வேண்டும். ஆனாலும், சோதிட சாஸ்திரத்தை நம்புவதற்கு உள்ள அடிப்படை என்ன? மற்றது இச்சோதிட சாஸ்திரத்தின் சித்தாந்த அடிப்படை தான் என்ன? இக் கிரகங்களுக்கு இடையில் ராகு, கேது இரண்டையும் பற்றி நினைத்தால் ஆச்சரியமாக உள்ளது. கேது எனப்படுவது சூரிய வெளிச்சம் காரணமாகப் பூமியின் பின்பக்கம் உண்டாகும் இருளான கேதுவாகும். ராகு எனப்படுவது சூரிய ஒளி காரணமாகக் பூமியின் முன்புறம் ஏற்படும் பளபளக்கும் உருளை வடிவான வால் நட்சத்திரமாகும். இவை பற்றித் தெரிந்துக் கொள்ள நிலம் உருண்டை வடிவானது எனவும், அது சூரியனைச் சுற்றி வலம் வருகிறது என்பதையும் அறிந்திருக்க வேண்டும் என்பதிலேயே பிரச்சினை உள்ளது.

அப்படியானால், ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு சோதிட சாஸ்திரங்களைக் கண்டு பிடித்த முனிவர்கள் இவ் விடயத்தை அறிந்திருக்கவில்லையா?

அனைத்துமே நடைபெறுவது எதிர் பாராத விதமாக அல்ல எனவும் பிறப்பு, வாழ்வு, அழிவு ஆகிய ஒழுங்கு எல்லா இடத்திலும், எப்போதும் நிகழ்வதாக அவர்கள் அறிந்து இருந்தனரா? அதன்படி, உலகின் நிகழ்வுகள் நடைபெறும் விதம் கிரகங்களின் அமைவின் படி, சாதாரணமாகப் புலப்படக் கூடிய முறையில் அவர்கள் சோதிடத்தைக் கணக்கிடும் முறையை அமைத்தனரா? அப்படியானால் அச்சித்தாந்த அறிவு இல்லாது போய், சோதிட கணக்குப் பார்ப்பது மட்டும் மிஞ்சியது எவ்வாறு? இவற்றுக்குப் பதில் தேடப் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கும். ஆனாலும் சோதிடக்காரர் சொல்லும் விடயங்களில் முக்கியத்துவம் உள்ளதா எனச் சரியாகத் தெரியாமல் அது பற்றிப் பேசுவது பயனுள்ளதா? இப்போது ''சனி தோஷம்'' பற்றிப் பேசுவதில் பயனுள்ளதா?

இப்போது சனிதோஷம் பற்றிப் பார்ப்போம். சோதிடக் காரர்கள் 1968-71 காலத்திலும் இவ்வாறு சனி மாற்றமொன்று நிகழ்ந்தது எனச்சொல்கிறார்கள். அக் காலத்தில் இடதுசாரி கிளர்ச்சி அணிகளின் எழுச்சியொன்று இருந்தது என்பது உண்மையே. ஆனால் மறுபுறம் 1923 பொது வேலை நிறுத்தம், 1929 பொது வேலை நிறுத்தம், 1953 ஹர்த்தால், 1980 பொது வேலை நிறுத்தம், 1988/89 கிளர்ச்சி இவை அனைத்தும் ஏற்பட்டது சனி மாற்றத்தின் காரணமாகவா? அவையும் அதேபோல் ஏற்பட்டதென அப்பண்டிதர்கள் காட்டுவார்களேயானால் இது பற்றிக் கண்டு பிடிக்க அக உணர்வு நிலைக்குரிய அடிப்படையொன்று இருக்கும். அவ்வாறு நியாயமாக எதிர்வு கூறமுடியாதுவிடின் சோதிட சாஸ்திரம் பற்றிக் கவனம் செலுத்துவது அடிப்படை அற்றதொன்றாகும்.

எவ்வாறெனினும், இனிவரும் சில வருடங்களினுள் இடதுசாரிகளுக்கு நன்மை தரும் சமூக அணிகள் அணிதிரள இடமுள்ளது. அது சோதிடக் காரர்கள் சொன்னாலும், இல்லாவிட்டாலும் எம்மால் எதிர் பார்க்கக் கூடிய நிலைமையாகும். அரசாங்கம் இப்போது கொண்டு

→ 18

# அப்பன் எட்டடி... மகள் பதினாறடியா?

1995ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரச படையினர் தென்மராட்சியைக் கைப்பற்றியதும் தென் மராட்சியில் இடம்பெயர்ந்திருந்த வலிகாமம் பகுதி மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர். இவர்களில் வலிகாமம் வடக்குப் பகுதி மக்களை தமது இருப்பிடங்களுக்குத் திரும்புவதற்கு இராணுவம் அனுமதிக்கவில்லை. தற்போது சிறீலங்கா அரசின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த இப்பகுதியை அதியுயர் பாதுகாப்பு வலயமாக (High Security Zone) பிரகடனம் செய்துள்ளார். இனிமேல் எக்காலத்திலும் தெல்லிப்பழைச் சந்திக்கு அப்பால் எவரும் செல்லமுடியாது.

ஈழப்போராட்டம் காரணமாக முதல் முதலில் இடம்பெயர்ந்தவர்கள் வலிகாமம் வடக்கு மக்களே. மும்முனைத்தாக்குதலுக்கு இலக்காகி சுமார் 12 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருபவர்களும் இவர்களே. இப்போது இவர்கள் நிரந்தர அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள். தமிழரசுக்கட்சியினதும், தமிழர் விடுதலைக் கூட்டணியினதும், கோட்டையாக விளங்கிய காங்கேசன்துறைத் தொகுதி தற்போது யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படுபவர்களைத் தடுத்து வைக்கும் தடுப்புக்காவல் முகாமாக மாறியுள்ளது. இனிமேல் தென்னிலங்கையில் கட்டிடம் கட்டுவதென்றாலும் காங்கேசன்துறையிலிருந்து தான் சீமெந்து போக வேண்டும். என்று ஜி.ஜி. பொன்னம்பலம் காங்கேசன்துறை சீமெந்து ஆலைத்திறப்பு விழாவின் போது கூறிய உலகின் இரண்டாவது பெரிய சீமெந்து ஆலையான காங்கேசன்துறை சீமெந்து ஆலை தற்போது முற்றாக மூடப்பட்டுள்ளது.

இதனால் மூன்று பிரபல பாடசாலைகள் வலிகாமம் வடக்கில் இயங்கி வந்தன. இலங்கையில் பல்வேறு துறைகளிலும் பல துறைசார் விற்பன்னர்களை உருவாக்கிய மகாஜனா, யூனியன், நடேஸ்வராக் கல்லூரிகள் வேறு எங்காவது கட்டித்தரப்படும் என ஜெனரல் அனுருத்த ரத்வத்த கூறியுள்ளரர்.

இந்துக்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களாக விளங்கிய சோழர் கால ஆலயங்களான மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் என்பனவற்றுக்கு இனிமேல் பக்தர்கள் சென்று வழிபாடு நடாத்த முடியாது. இந்துக்களின் புனித ஸ்தலமாக விளங்கும் கீரிமலைக்கு இனிமேல் யாத்திரீகர்களோ உல்லாசப் பிரயாணிகளோ சென்று நீராடவோ வழிபாடு செய்யவோ முடியாது. முன்பு, கீரிமலைக்கு உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப்பயணிகளும், யாத்திரீகர்களும் தினமும் பெருந் தொகையாக வருகை தருவது வழக்கம். பலாலி, மயிலிட்டி, வசாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன், வறுத்தலைவிளான், வீமன் காமம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை காங்கேசன்துறை கீரிமலை, கொல்லங்கலட்டி, பன்னாலை, அம்பானை, விழிசிட்டி ஆகிய கிராமங்கள் மேற்படி அதி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அடங்குகின்றன. வலிகாமம் வடக்கிலுள்ள 45 கிராமசேவகர் பிரிவுகளில், 30 கிராம சேவகர் பிரிவுகள் இந்த பாதுகாப்பு வலயத்தினுள் வருகின்றன.

ஈழப்போர் ஆரம்பமான பின்னர் மும்முனைத்தாக்குதல்களுக்கு இலக்காகி பல் வகையான துன்பங்களுக்கும் முகம் கொடுத்து இன்றும் இடம் பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வரும் இவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் மீளக்குடியமர்த்தல் நிவாரணம் 5000/= கூட இன்னமும் வழங்கப்படவில்லை. முன்னைய 3ம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் ஒரு பாடம் இருந்தது கீரிமலையில் வசிக்கும் ஒரு தமிழ் மாணவன் கதிர்காமத்தில் வசிக்கும் தனது சிங்கள மாணவ நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுவதாக இப்பாடம் அமைந்திருந்தது. இன ஒற்றுமையை வளர்க்கும் விதத்தில் இக்கடிதம் பாடப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. அதாவது தெற்கு எல்லை கதிர்காமம் வடக்கு எல்லை கீரிமலை கதிர்காமம் தான் தமிழீழத்தின் எல்லை என்று (அடங்காத்தமிழன்) சுந்தரலிங்கத்தின் தமிழீழ வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1958ம் ஆண்டு சிங்களச் சட்டத்தைக்கொண்டு வந்து தெற்கிலிருந்து தமிழர்களைக் கப்பலில் ஏற்றி யாழ்ப்பாணம் அனுப்பினார் பண்டாரநாயக்கா. சரியாக நாற்பது ஆண்டுகளின் பின், 1998க்காலம் காலமாக செல்வநாயகம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டி காங்கேசன்துறையிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றியுள்ளார். அன்னாரின் அருமைப்புதல்வி. அப்பன் எட்டடி பாய்ந்தால் மகள்? வளர்க பேரினவாதம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(இரகசியப் பகுதி)

# விஷ்ணுபுரத்தில் விஸ்வருபம் கொள்வது எது ?

ரஞ்சகுமார்

கர்ணன் பிறக்கும் போதே கவச குண்டலங்களுடன் பிறந்தானாம் !

விஷ்ணு புரத்தின் முன்னுரையில் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்: வாழ்வைச் சித்திரிப்பதல்ல இந்நாவல். அதன் அடிப்படைகளை ஆராய்வது. அத்தகைய தேடல் கொண்டவர்களே இதன் வாசகர்கள். நாவலிலிருந்து மேலும் விரிவடையக் கூடிய திறன் கொண்டவர்கள் அவர்கள். நாவலை தங்களை நோக்கி சுருக்கிக் கொள்ளும் வாசகர்களை நோக்கி இது தன் வாசல்




களை மூடிக்கொள்ளும். துரதிருஷ்டவசமாக அரசியல்க் கோட்பாடுகள் சார்ந்த எளிமைப் படுத்தல்கள் இங்கு இரண்டாம் வகை வாசகர்களையே உருவாக்கியுள்ளன-தடித்த எழுத்துக்கள் கட்டுரையாளரால் இடப்பட்டவை.

மேலோட்டமாகப் பார்க்கும் போது இக்கூற்று நியாயமாகப்படுகின்றது. எனினும், துரதிருஷ்ட வசமாக நாம் அரசியல் முரண்பாடுகள், குளறுபடிகள் நிறைந்துள்ள சமூகத்தில் அல்லவா வாழ்கின்றோம் ? சாதி, இன, மத, மொழி முரண்பாடுகள் கூர்மையடைந்து, நமது அரசியலே இம்முரண்பாடுகள் தரும் இடர்ப்பாடுகள் தான் என்றாகிப் போன துர்ப்பாக்கிய காலகட்டம் நம்முடையது. இவற்றிலிருந்து "ஞானத்தை" புறம்பாக கடைந்தெடுத்து வெண்ணெயாக உண்ண முடியுமா எம்மால் ?

இன்று ஒருவர் ஐயையோ என்னை அரசியல் வகைப்படுத்தி பார்க்காதீர் என்று கூப்பாடு போடுவது கோழைத்தனமானதும் அவரது அரசியல் சார்பு நிலையை பொத்தி மறைத்து கண்ணாமூச்சி விளையாடும் தந்திரோபாயம் மிக்கதுமாகும்.

ஜெயமோகன் ஆற்றல் மிகுந்த ஒரு படைப்பாளி. அதில் இரண்டாவது கருத்து எனக்கு கிடையாது. அவரது சிறுகதைகளை வாசித்து பிரமித்திருக்கிறேன். எனினும் அவரது சிறுகதைகள், "நாவல்" என்கின்ற பகுப்பாய்வு நூல் யாவுமே இந்த விஷ்ணுபுர நெடுஞ்சாலையில் கலந்து கொள்ளும் உப சாலைகளே என்பது இந்த நாவலை வாசித்து முடித்த பின்னர் தெளிவாக அறிந்து கொள்ளப்பட்டது. என்னதான் ஜெயமோகன் "அரசியலை வைத்து எனது ஞானத்தை அளக்காதே" என்று கேட்டுக் கொண்டாலும் அவரது அரசியல் சார்பு தெட்டத் தெளிவாக வெளிப்படுவது இந்த நாவல் மூலம் தான்.

ஒரு தடவை நண்பர் சட்டநாதன் அவர்கள் எனது ஒரு சிறுகதையைப்பற்றி கூறுமிடத்து, 'நாவல் ஒன்றிலிருந்து பிய்த்து எடுக்கப்பட்ட ஒரு அத்தியாயம் போல இது இருக்கின்றது' என்று கூறினார். அப்போது அந்தக் கூர்மையான ஒற்றைவரி விமரிசனம் எனக்கு வெறுப்பூட்டியது, எனக்கு அது விளங்கவேயில்லை. ஆனால் பிற்பாடு அக்கூற்று எவ்வளவு உண்மை யானதும், நேர்மையானதும் என உணர்ந்து கொண்டேன்.

ஜெயமோகனின் இந்த நாவலின் மிகவும் சிலாக்கிக்கத் தகுந்த அம்சமும் இந்த பிய்த்தெடுக்கக்கூடிய தன்மை தான். ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடைய பல சிறுகதைகளாக இந்நாவலை நாம் பகுக்கலாம். ஜெயமோகனது வார்த்தைகளில் சொல்வதானால் பல "வாசகக் குறுக்கீடு"களைக் கொண்ட நாவல் இது. நாவலின் மிகவும் பலமான் ஒரு அம்சம் இது.

அதே வேளை அவரது முன்னைய சிறுகதைகள் பலவும் இந்நாவலிலிருந்து பிய்த்தெடுக்கப்பட்டவை யாகவே உள்ளன என்பது எனது கருத்து. குறிப்பாகச் சொல்வதாயின் பல்லக்கு, போதி, லங்காதகனம், மாடன் மோட்சம், மண், திசைகளின் நடுவே, ஜகன் மித்யை, படுகை, டார்த்தீனியம் போன்றவற்றைக் கூறலாம்.

பல்லக்கு என்னும் சிறுகதையில் சாதிரீதியாக ஒடுக்கப்பட்ட ஒருவனது எழுச்சி உயர்சாதியினன் ஒருவனால் பொறாமையுடனும், ஆற்றாமையுடனும், கிலேசத்துடனும் பார்க்கப்படுவதும், உயர் சாதியினனின் வீழ்ச்சி பரிதாபத்துக்குரியதாகக் காட்டப்படுவதும் புலனாகும்.

ஜகன்மித்யை என்னும் சிறுகதை பார்ப்பனன் ஒருவன் தனது சித்தாந்தம் ஒன்றை பரப்ப முயன்று தோற்றுப் போவதை கழிவிரக்கத்துடன் சித்திரிக்கின்றது. சுழற்சித் தத்துவம் ஒரு குறிப்பிட்ட சம்பவம் இன்னுமொரு சந்தர்ப்பத்தில் மீண்டும் சர்வசமனாக நடந்தே தீரும் என்பதைப் பற்றி கற்பனை செய்கின்றது இந்தக் கதை. மேலைத்தேய தத்துவஞானிகள் தமது பௌதீகவெளிக் கருதுகோள்களையும், கண்டுபிடிப்புக்களையும் கணித வெளியில் நிரூபிப்பதில் வெற்றி பெறுகின்றார்கள். ஜகன் மித்யையில் ஜெயமோகன் கணித ரீதியான நிரூபணங்களுக்கும் முயல்வதைக் காணலாம்.

பெரியாரியக்கமும், இடதுசாரிகளும் நம்மிடையே ஏற்படுத்திய முக்கியமான சிந்தனைத் தாக்கங்களுள் ஒன்று சாதி மேட்டிமை, பார்ப்பனிய மேலாதிக்கம் ஆகியவை சம்பந்தமான புரிதல்களை நம் மத்தியில் அதிகப்படுத்தியமையாகும். அதன் காரணமாக மேற்கூறிய படுபிற்போக்குத்தனமான அம்சங்களை தம்முள் பேணி வந்த மதவாதிகள் சமரசம் ஒன்றுக்கு பரந்துபட்ட மக்கள் திரளினருடன் உடன்படுகிறார்கள். இந்தச் சமரசத்துக்குப் பிறகு மதவாதிகளும், சாதி மேட்டிமைக் காரர்களும் கையாள்கின்ற உத்திகளை மிகவும் ஊன்றிக் கவனித்தால் ஜெயமோகனிடத்திலும் நாம் காணலாம்.

அவரது பல கதைகளில் அவரது உயர்சாதி, பார்ப்பனிய சார்பு நிலையை, அவற்றின் சமீபகால தந்திரங்களை நாம் நிரூபிக்கலாம். எனினும் விரிவஞ்சி அதைத் தவிர்த்துக் கொள்கின்றேன்.

ஆனால்

தனது அச்சாணியாக ஊழி பற்றிய கருதுகோளைக் கொண்டுள்ள விஷ்ணுபுரம் நாவலில் ஊழி ஒன்றின் முடிவில் ஒரு சில ஆரோக்கியமான பழங்குடிப் பெண்களும் ஒரு மனோநிலை பிறழ்ந்த, வளர்ச்சி குன்றிய பார்ப்பனனும் உயிர் பிழைக்கின்றார்கள். பழங்குடிப் பெண்ணோ மழையிலும் புயலிலும் நிர்வாணமாக மலையுச்சியில் நிற்கிறாள் பிராமணனை பெரும் தாமரை மலரென்று தன்னுள் மூடிப் பாதுகாத்துப் பத்திரப்படுத்திக் கொள்கின்றது. விஷ்ணுபுரத்தின் ஞானசபையின் கடைசி வாரிசு அவன். விஷ்ணுபுரம் மீண்டும் மீண்டும் அழிந்து பிறக்கின்ற ஒரு நகரம். அங்கு பிராமணனுக்கு ஊழியில் கூட ஆசீர்வதிக்கப் பட்ட வாழ்க்கையும், ஏனையோ

→ 15



## ஜூன் - 05

1956 ஜூன் 5ல் 'தனிச் சிங்கள' மொழியே அரசகரும மொழியாக்கப்பட்டது. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலிருந்து தனிச்சிங்களச் சட்டம் இயற்றப்படும் 1956ம் ஆண்டுவரை ஆங்கிலமே அரச கரும மொழியாக இருந்தது.

இலங்கைக்கு ஆட்சி மாற்றம் (சுதந்திரம்??) கிடைக்கும் முன்னரே இலங்கையில் சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாக இருக்க வேண்டுமென்ற கருத்து பல அரசியல்வாதிகள் மட்டத்தில் நிலவியது தான். ஆனால் நடைமுறையில் இது செயற்பாங்கான உயிர்ப்பான சிந்தனையாக அமையவில்லை; வளரவும் இல்லை.

மாறாக, இலங்கையின் ஒருமைப்பாடு ஐக்கியம் சிதைந்து பிளவுறும் இலங்கைச் சமூகம் ஒன்றை 1956ன் பின்னர் காணக்கூடியதாக இருந்தது. இலங்கைத் தேசியம் என்பது தனிச்சிங்கள சமூகத்தினது தேசியமாகக் கருதி வளர்க்கப்பட்டது. தமிழர்கள் இலங்கைத் தேசியத்துக்குள் - சிங்கள தேசியத்துக்குள் - ஒன்றாக்கத் தொடங்கினர். இது தமிழர்களை மேலும் மேலும் இந்தத் தேசிய அரசியல் நீரோட்டத்திலிருந்து மீண்டு விலகி தமக்கான தேசிய அரசியல் - தமிழ் அரசியல், தமிழ்த் தேசிய அரசியலாக பரிணமித்தது. இலங்கையின் 1956ன் பின்னரான வரலாறு இவ்வாறு இருகிளைப்பட்டுச் செல்வதை நோக்கலாம்.

இன்று 1998 ஜூன் 5ல் காலடி எடுத்து வரலாறு நகர்கின்றது. இதுகாலுமான இந்த இடைப்பட்ட கால (1956 - 1998) கட்டத்தை வரலாற்றை நோக்கினும் நம்முன்னே விரியும் நிதர்சனங்கள் யாவை என்பதும் நமக்கு புலப்படுகின்றது.

ஆம், தமிழர்கள்! என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அவர்கள் படும் இம்சைகளும் துன்புறுத்தல்களும் கூட, இந்த 1956 ஜூன் 5ன் பின்னரான நிகழ்வுகளின் வரலாற்றின் தர்க்க ரீதியான விளைவுகள் தான்.

இதன் அழுத்தங்கள், வன்முறைகள், கொடுமைகள் ஒருபுறம் நிகழ்ந்தேறும் போது அதன் பின்னணியில் சூத்திரதாரிகளாய் அவ்வப்போது இலங்கை அரசாங்கத்தை அமைக்கும் கட்சிகளின் பாத்திரமும் மிக முக்கியமான அழுத்தமான இடத்தைப் பெற்றே வருகின்றன. ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க இடதுசாரிக் கட்சிகள் இவற்றின் பாத்திரங்கள். இவற்றின் வளர்ச்சிகள் செயற்பாடுகள் யாவும் கூட இந்த 1956 - 98 காலப்பகுதிகளினது வரலாறுகள் தான். ஐ.தே.கவும், ஸ்ரீ.ல.சு.கவும் ஒன்றை ஒன்று சளைத்தது அல்ல.

இந்த வரலாற்றை - திறம்பட நடாத்தியவர்கள் இன்னொரு சமூகத்தின் - தமிழர்களின் - தலைவிதியை தமிழர்களே தீர்மானிக்க எத்தனித்த அல்லது நிர்ப்பந்தித்த வரலாற்றையும் படைத்தவர்கள். 1956-98 காலப்பகுதியின் பின்னர் இடதுசாரிக் கட்சிகளின் முன்னேற்றம் பெருமளவுக்கு ஸ்தம்பித நிலையில் செல்வதொன்றாகவே அமைந்தன. வளர்ந்து வரும் சிங்கள பௌத்த பேரினவாத அரசியலுக்கு இடதுசாரிகளும் பலியாகி வருவதையும் இக்காலத்தில் காணலாம். வர்க்க நலன்களுக்கும் அப்பால் இனநலன்கள் முதன்மை பெறத் தொடங்கின. இது சிங்கள தமிழ் இளைஞர்கள் மத்தியில் 1965க்கு பிந்திய காலகட்டங்களில் தெளிவாகவே இனங்காணக்கூடியதாகவே மாறியது.

எவ்வாறாயினும் இலங்கையில் 1956 ஜூன் 5க்குப் பின்னரான நிலைமைகள் வரலாற்றையே மாற்றியமைத்துவிட்டன. இலங்கையர் என்பது மறக்கடிக்கப்பட்டு அல்லது இலங்கையர் என்பது சிங்கள சமூகத்திற்குரியவர்களாக மட்டும் மாற்றப்பட்டது தமிழர்கள் இலங்கையரல்லாதோர் என்ற நிலைமை ஏற்படத் தொடங்கியது. விளைவு, தமிழர்கள் தமக்கான 'அரசியல்', 'எதிர்காலம்' பற்றிய சிந்தனைக்கும் செயற்பாங்குக்கும் தள்ளப்பட்டனர். இதுவே இன்றைய தொடரும் வரலாறு.

இலங்கையர்களாகவும், தமிழர்களாகவும் வாழ்வதற்கான உந்துதல்களுக்கும் தெரிவுக்கும் கூட 1998 ஜூன் 5க்கு பின்னரான வரலாறு என்ன பதில் தந்துள்ளது?

## ஜூன் - 19

1968 ஜூன் 19ல் அமைச்சராக இருந்த மு. திருச்செல்வம் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். ஏன் தெரியுமா..?

1965ல் ஐ.தே.க. ஆட்சியமைப்பதற்காக தமிழரசுக்கட்சி தனது ஆதரவைத் தெரிவித்து அரசாங்க அமைச்சரவையிலும் இடம்பெற்றிருந்தது. இதனால் தமிழர்களிடமிருந்து தமிழரசுக்கட்சிக்கு ஒரு வீழ்ச்சிக் கூட்டம் மெதுவாக வளரத் தொடங்கியது எனலாம். இது ஒரு புறமிருக்க.....

ஐ.தே.க. ஆட்சியில் திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தார். அப்போது திருகோணமலை கோணேசர் கோயிலை புனித பிரதேசமாக்கும் பொருட்டு இதன் எல்லைகளை நிர்ணயிக்கும் முகமாக அமைச்சர் (திருச்செல்வம்) மூவர் கொண்ட குழு ஒன்றை நியமித்திருந்தார். இம்மூவரில் ஒரு தமிழர், ஒரு சிங்களவர், ஒரு பறங்கியர் என இடம்பெற்றிருந்தனர்.

திருமலையை பௌத்த பிரதேசமாக்கும் முயற்சி ஏலவே திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் நடைபெறத் தொடங்கிவிட்டன. இத்தகைய முயற்சிகளில் அதிகம் ஈடுபாடு கொண்ட சேருவாவில பௌத்த பிக்கு கோணேசர் கோயிலை புனித பிரதேசமாக்கும் செய்கைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தார். இதனால் அன்றைய பிரதமரான டட்லி, நியமித்த அந்தக்குழுவினது செயற்பாட்டை இடைநிறுத்தி வைத்தார்.

பிரதமரின் இந்தச் செய்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக தமிழரசுக் கட்சி, திருச்செல்வத்தை அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதொன்றும் வழக்கமான விஷயமல்ல.

ராகுலனை செஃப்பே வலியக்கூப்பிட்டு "உனக்கின்னும் ஒரு கிழமை ஊர்லாப் (விடுமுறை) இருக்கு...... மேலதிகமாய் இன்னும் ஒரு கிழமை தாறன்...... இந்த மாதம் நீ வெளியில எங்காவது போக விரும்பினால் போய்வரலாம் ........." என்றான்.

"ஓ......ஜா....."

மனதுள் சந்தோஷப்பனி தூவ அதைத் தாங்கமுடியாத தவிப்புடன் ராகுலன் விசிலும் வாயுமாய் வீடுவந்து சேர்ந்தான். இரவு முழுதும் மனைவி லதாவுடன் பிரான்ஸுக்குப் போவதா, இல்லை சுவிஸுக்குப் போவதா என விவாதித்தும் ஒரு தீர்மானத்திற்கும் வரமுடியவில்லை. சுவிஸில் லதாவின் அண்ணன் குடும்பமிருக்கிறது. பிரான்ஸிலோ ராகுலனுக்கு உறவுகள் ஏராளம்.

கடைசியில் என்றும் போல் லதாவே வென்றுவிட எண்ணிறந்த பலகாரவகைகளாலும், அண்ணனின் குழந்தை மயூரனுக்கு வாங்கிய ஏராளம் பரிசுப்பொருட்களாலும் டிக்கி நிரம்பி வழியவழிய அவர்களது கார் அஷ்டமி, நவமி, மரணயோகம், கரிநாள் தவிர்த்த ஓர் நல்லோரையில் சூரிச் நோக்கி கோலாகலமாய் புறப்பட்டது.

எட்டு மணிநேரச் சவாரிக் களைப்போடு சூரிச்சில் அண்ணன் வீட்டுவாசலை அடைந்தும் உள்ளே அடிஎடுத்து வைக்க மேலும் நாலு மணிநேரம் நற்றவமியற்ற வேண்டியிருக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அண்ணனும் அண்ணியும் வேலைக்குப் போனதாக ஏப்றன் கட்டிக்கொண்டு கண்ணாடி ஜன்னல் கதவுகளைத் துடைத்துக்கொண்டு நின்ற அயல்வீட்டுக்காரி செப்பினாள்.

"அப்போ அவர்கள் பேபி.... ?"
"எங்காவது ஹோர்ட்டில் (குழந்தைகள் பராமரிப் பகம்) விட்டிருக்கலாம் !"
இவர்கள் நிலமையை அறிந்தும் சுவிஸ்க்காரி அந்நியரை அதுவும் கறுத்த வெளிநாட்டுக் காரரை தன் வீட்டுக்குள் அழைத்து உட்காருங்கோ என்று உபசரித்துவிடுவாளா என்ன......
தன்பாட்டுக்குக் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே போனாள்.
அண்ணியும் வேலைக்குப் போய்விடுவாள்..... பகலில் யாருமிருக்கமாட்டோம் என்பதை முதலிலேயே சொல்லித் தொலைத்திருந்தால்...... இரவு வந்து சேரும்படியாகப் புறப்பட்டிருக்கலாம். இப்படிக் கைக் குழந்தையுடன் தெருத் துாங்கவேண்டியிருந்திராது.
"சுவிஸுக்குவருகிறோம்" என்று ரெலிபோன் பண்ணியபோதே அண்ணன் உள்ளுக்கிழுத்தது ஏனென்று இப்போதான் லதாவுக்கு மெல்ல ஒடி வெளித்தது. எனினும் ராகுலனை மேலும் குழப்பவேண்டாமென்று சமர்த்தாயிருந்தாள்.
ராகுலன் லதாவைக் கல்யாணம் கட்டுவதற்கு முன் அவனை சூரிச் ரெயில்வே ஸ்டேசனுக்கே வந்து காத்துக்கிடந்து வார்த்தைக்கு வார்த்தை "அத்தான்.........அத்தான்..." என்று அன்பொழுக அழைத்து நிலபாவாடை விரிக்காத குறையாக அழைத்துப்போனதும் இதே மைத்துனன்தான்.

பயணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனித்ததில் முதலிரண்டுநாளும் இருவருக்குமே சரியான துாக்கமில்லை. பயணத்தின்போது உட்கார்ந்தது போதாதென்று மேலும் தொடர்ந்து காரில் உட்கார்ந்திருக்க முதுகுத்தண்டுவடம் ஜிவ் ஜிவ்வென்று வலித்தது.
கொஞ்சம் நடந்து திரிந்தால் நல்லாயிருக்கும் போலிருந்தது. ஆனாலும் களைப்பும் அசதியும் அனுமதிப்பதாயில்லை.
குளிர்வேறு. காரைச்சூடுபண்ண அடிக்கடி ஸ்ரார்ட் பண்ணவேண்டியிருந்தது.
எப்போதான்
உடம்பைக்கொண்டுபோய் கட்டிலில் எறிஞ்சு படுப்போம் என்றிருந்தது.

அவர்கள் எப்போதுதான் வருவார்கள...... இது எப்போசாத்தியமாகும் என்று தெரியாமல் வெட்டிக்கு வீதியில் காத்திருப்பது இரத்தஅழுத்தத்தை உச்சத்திற்குக்கொண்டுபோக குழந்தைவேறு பசியெடுத்து அலறத்தொடங்கினாள். அவளுக்குப் பால் கரைக்க வேண்டிய வெந்நீர் வேறு தீர்ந்துவிட்டிருந்தது.
ஒரு ரெஸ்ரோறன்டைத் தேடிப்போய் கேட்டபோது. அவன் உள்ளே பைப்பில் பிடித்திருக்கவேணும் 'வெந்நீர்' என்று சொல்லிக்கொண்டு வந்து கொடுத்தான். அச்சூட்டில் மா கட்டிபட்டுக் கரைய மறுத்தது.
"வேறேதாவது கடையில கேட்டுப்பார்ப்பமே....". என்று காரைக் கிளம்பவும் ஒருவாறாக விருந்தோம்புவார் காரும் வந்து லான்ட் பண்ணியது.

இவ்வளவு நேரம் தெருவில் காக்கவைத்ததிற்காக ஒரு 'சொறி' யாவது சொல்ல வேணுமே...... ஊஹூம்! "இத்தனை மணிக்கு வந்து சேர்வோம் என்று உறுதியாக முன்பே சொல்லாதது உங்களதுதப்புத்தான்" என்றார்கள். அதையிட்டு ஒரு விவாதம் நடத்த அவர்களிடம் மேலும் சக்தியில்லை. மௌனம் காத்தனர்.
வழியில் சாப்பிடுவதற்காகப் பண்ணிக் கொண்டுவந்த சான்ட்விச்சுகள் நிறையவே மிஞ்சிக்கிடந்தன. எல்லோருக்கும் இரவுச் சாப்பாட்டிற்குப் போதுமானதாக இருந்தது.

மறுநாள் காலை அண்ணன் வேலைக்குப் புறப்பட தானும் வெளிக்கிட்டுக்கொண்டு வந்த அண்ணியார் சுகுணா லதாவுக்குச் சொன்னாள்.
"நானும் ஓரிடத்தை போகவேணும்...... வரக்கொஞ்சம் செல்லும் செல்லும்..."
ஓரிடத்துக்கு என்றால்...... "அதைப்பற்றி மேலே கேள்ாதே"என்பதுதான் அதற்குரிய உளவியல். இது லதா அறியாததா?
அவர்கள் குழந்தை மயூரனையும் இழுத்து வைத்து சட்டையை அணிவிக்கையில் மட்டும் சொன்னாள்:
"மயூரன் நிற்கட்டும் அண்ணி நான் பார்த்துக் கொள்ளமாட்டனே.....".
"வேண்டாம் லதா அவன் பயங்கரக் குழப்படிவிடுவன், ஒருவருக்கும் அடங்கான்......" அதற்கு முன்னேபின்னே ஒருநாளும் முகம்

பாரத்திராமலேயே லதாவைக் கண்டதிலிருந்து அவன் குழைஞ்சு குழைஞ்சு அவளுடன் சேர்ந்தமாதிரியைப் பார்க்க அப்படி அது அடம் பிடிக்கிற குழந்தை மாதிரியே தெரியவில்லை. இயல்பில் குழந்தைகளில் அதீத பிரியமுள்ள லதாவுக்கு மொழுமொழுவென்றிருந்த அவனுடன் விளையாடவும் ஆசையாயிருந்தது. இருந்தும் அவனையும் அவர்கள் வெளியே இழுத்துக்கொண்டு போவதன் சூத்திரம் முழுவதும் அறியாமல் வற்புறுத்திக் கேட்கத் தயங்கினாள்.

அவர்கள் புறப்பட்டுப் போன பின்பு குசினியுள் போய்ப் பார்த்தார்கள். நார்முடையொன்றுள் கொஞ்சம் முளைவிட்ட உருளைக்கிழங்கு, புருவமெனக் குனித்தும் வாடியும்போன ஒரு கூர்க்கன் (கெக்கரிக்காய்), ஒரு பிளாஸ்டிக் பைக்குள் எழுதித்தான் எடுப்பித்தார்களோ? கோழிகூடக் கொறிக்கத் தயங்கும் ஒரு சுண்டு குறுணல்அரிசி, தவிர வெளியாய் வேறொரு சமைக்கக்கூடிய வஸ்த்தும் இருக்கக்கூடிய தடயங்கள் புலப்படவில்லை. பிறிட்ஜைத் திறந்து பார்த்தார்கள். யார்சாபமோ ஐஸுடன் ஐஸாய் கல்லாய்ச் சமைந்துபோய் மல்லாக்கக் கிடந்தது ஒரு கோழி. அதுவும் கிறில் பண்ணுவதற்கான மலிவுப்பதிப்பு. அதையங்கிருந்து பெயர்த் தெடுக்கக்கூடிய ஈட்டியோ, வேலன்ன ஒரு போர்க்கருவியோ கடப்பாரையோ தென்படுகிறதா என்று தேடினார்கள்.
திடீரென கி. செ. துரையின் கதையொன்றில் சிவபதமடைந்த தேதி தெரியாத கோழியைச்சாப்பிட்ட ஒருவர் வயிற்றுள் கடுஞ் சமர்மூண்டு கலக்கி அவதிப்படுத்திய சம்பவம் ஞாபகம் வரவும்.........
அந்த எண்ணத்தை அதிலேயே போட்டுவிட்டு Migros Markt தேடிப் போய் ஆட்டிறைச்சி மற்றும் சாமான்கள் வாங்கிவந்து சமைத்துச் சாப்பிட்டார்கள்.
மாலையானதும் அண்ணன் குடும்பம் வந்து சேர்ந்தது. சாப்பாடானதும் அண்ணன் செற்றிக்குள் சாய்கோணத்தில் இருந்துகொண்டு ராகுலனிடம் ஜெர்மனியில் தனி நபர் வருமானம், சேமிப்பு சாத்திய அசாத்தியங்கள், நடப்பு வட்டிவீதங்கள், மற்றும் அத்யாவசிய நுகர்ச்சிப்




பண்டங்களின் விலைதலைகள் பற்றி உசாவினார். பின்னொரு கோழித் துாக்கம் போட்டார். அலாம் வைத்தது போல் ஏழு மணிக்கு எழும்பி பாத்றூம் போனார். பின் ஜாக்கெட்டை மாட்டினார்.
"எனக்கு ஒரு அலுவலிருக் வெளியில" என்று வெளியேறியவர்தான் எல்லாரும் படுக் கைக்குப்போனதன் மேல் பதினொருமணிக்கு வந்துசேர்ந்தார்.

மறுநாளும் இதே செயன்முறைகள் நேரசூசிகை போட்டதுபோல் நடந்தேறின. ஆனால் அண்ணியார் சுகுணாமட்டும் கொஞ்சம் மாற்றி தான் தையல்கிளாஸுக்குப் போவதாகச் சொன்னாள்.

மூன்றாம்நாள் காலை புறப்படமுதல் அண்ணியார் லதாவிடம் சொன்னாள் "மயூரனை கின்டர் கோர்ட் ஒன்றில கொஞ்சநாளாய் விடுகிறனாங்கள்...... புதுசில தனிய நிக்கிறானில்ல அழுகிறான்...... அதுதான் நானும் போய்க்கூட நிக்கிறனான்.... தனிய நிற்கப் பழகிட்டானென்றால் நானுமெங்கையென்டாலும் பார்ட் டைம் ஜொப்புக்குப் போகலாமென்றார் இவர்........ அவரும் தனியாளாய் அடிச்சு என்னத்தைத்தான் மிச்சம் பிடிக்கிறது இந்த நாட்டில இருக்கிற விலைவாசியில..."

அன்று மாலை அவர்கள் வந்திறங்கக்கூடிய நேரந்தான்....... ரெலிபோன் அடிக்கிறது. எடுப்பதா விடுவதா என்று லதா குழம்பவும்.... மீண்டும் மீண்டும் மீண்டும் அடிக்கிறது. ராகுலன் சொன்னான் "போய் எடும் சிலவேளை கொண்ணனாய்கூட இருக்கலாம்"

போய் எடுத்தால் மறுமுனையில்........
"குறுய்ஸ் கொட்..... நான் சூசாரா.... மன்னிக்கவேணும் அப்போது உறுதிப்படுத்த மறந்துவிட்டேன்.......சுகுணா....... நீ முன்னர் ஒத்துக்கொண்டபடி அடுத்த வார இறுதிநாட்கள் இரண்டும் என்னுடைய ஷிப்ட் வேலையையும் சேர்த்துச்செய்வாய்தானே....?"
(வியட்னாமோ தாய்லாந்துக்காரி.......) வார்த்தைகளை நசித்தும் சப்பியும் மழலை பேசினாள்.
"மன்னிக்கவேணும் நான் சுகுணாவல்ல..... அவர் வீட்டுவிருந்தாளி. இது சுகுணா வாற நேரந்தான் நீங்கள் அவர் வந்த பிறகு பேசுவது நல்லது. குறுய்ஸ் கொட்.....!"
அண்ணியாவது ஏற்கெனவே உறவுக்காரி கொஞ்சம் வாஞ்சையாய் இருப்பாள், அணைப்பாள், சிரிச்சுக்கலகலப்பாய் கதைப்பாளென்று எதிர்பார்த்து வந்த லதாவுக்கு அவள் ஏதோ கடன்காசைக் கேட்கப் போயிருக்கிறவர்களிடம் பேசுவதுமாதிரி முகங் கொடுக்காமல் கதைக்கிறதும் திருப்பிறதும் பெரும் ஏமாற்றமாயும் அவமதிப்பாயுமிருந்தது. ஆனாலும் ராகுலனிடம் சொல்ல முடியவில்லை.

அவர்கள் வீடு திரும்பவும் லதா அண்ணியாரிடம் சொன்னாள்:
"சூ...சாரா என்று யாரோ போன் எடுத்தார்கள்"
திடீரென்று அவள் முகம் கலவரமாகியது. மறைத்துக்கொண்டு ஆனால் குரலில் சற்றுப்பதட்டத்துடன் கேட்டாள்:
"எ..எ..என்னவாம்..........?"
"எனக்கு அவள் பேசிய ஜெர்மன் ஒண்டும் விளங்கேல்லை...... எதுக்கும் நீங்கள் வந்தாப்போல எடுங்கோ என்றன்... வைச்சிட்டாள்"
என்ற பிறகுதான் அவளுக்கு மூச்சு வந்தது. உதட்டை வலிந்து மலர்த்தி எமது தலைவி சந்திரிகாவைப் போலொரு சிரிப்பை உதிர்த்துவிட்டு "என்னோட தையல்கிளாஸுக்கு வாற ஒரு தாய்லாந்துப்பிள்ளை" என்றாள்.
நாலாம் நாள் மாலை அண்ணன் சாப்பிட்ட பின்னால் பான்பராக் போட்டுக் கொண்டு கோழித்துாக்கம் போடமுதல் திருவாய் மலர்ந்தார் "ஜெர்மனியைப்போல இல்லை... இஞ்சை கண்ட கண்ட பாட்டுக்கு ஆக்களைப் பிடிச்சு அனுப்பிறாங்கள்....... நீங்களும் அறிஞ்சிருப்பியள்தானே...... எந்த நேரமும் காட்டைப்பிடுங்கிக்கொண்டு ஊருக்கேத்திற நிலமை எங்களுக்கும் வரலாம்........ முந்தி உளைச்சதுகளை அப்பிடியே வீட்டுக்குக் குடுத்தன் ........ அடுத்தவளுக்குச் சீதனங்கொடுத்தன் ....... லதாவைக்கூப்பிட்டன் கையிருப்பு காலி.

www.tamilarangam.net





இனிமேற்கொண்டு பார்ட் டைம் ஜொப ஏதாவது பண்ணிக்கிண்ணினால்த்தான் நாலு காசைப் பார்க்கலாம் அதுதான் இப்ப கொஞ்சநாளா பின் னேரத்தில பார்ட் டைம் ஜொப்பொன்றுக்குப் போறனான்..........."

ராகுலனுக்கு அவர் கையிருப்பை அறிவதில் ஒரு சுவாரஸ்யமுமில்லை. அவன் பேச்சில் அசிரத்தையாய் முகட்டைப் பார்த்துக்கொண்டிருந்தான். அண்ணாச்சி தொடர்ந்தார்.........

''அங்கை சமையலெண்ணை லீற்றர் ஒண்டரை மார்க்கென்றியள்.......இஞ்ச லீட்டர் அஞ்சு பிராங்கெல்லே.........வரேக்க மட்டும் உந்தப்பெரிய கொம்பியில பத்து லீற்றர் கேசில ஒரு பத்து அடிச்சந்திருந்தா...... சும்மா ஐநூறு மார்க் வெளிச்சிருக்கும்........."

ராகுலன் மனதுள் - யாருக்கு..... ?-

கதை மீண்டும் பொருண்மியத்திக்கிலே செல்ல அறுவை தாங்காமல் ராகுலன் கேட்டான்:

''உங்கடை ஷுரிச்சில என்னதான் விஷேசம்........ அதைச்சொல்லுங்கோ........"

''விஷேசமெண்டு ......?"

''இங்க யாரும் ரூரிஸ்ட்டுக்கள் வந்தால் என்னத்தைப் போய்ப் பார்க்கிறவை....?"

'' நானூறு கிலோ மீட்டர் தள்ளி.........ஜெனீவா என்றால் யூ. என். ஓ கட்டிடத்தைச் சொல்லலாம்......... இஞ்சை ஒரு நூற்றைம்பது இருநூறு கிலோமீட்டரில ஒரு சேர்ச் இருக்காம் ........எங்கட சனமும் சிலது போறது........ வடக்கை ஷௌகவுசனில ஒரு நீர்வீழ்ச்சியிருக்காம்......... நானென்றால் இதொண்டுக்குமின்னும் போகேல்ல........இருக்கிற வேலைக் கரைச் சலுகளுக்கை எங்களுக்கெங்கால நேரம்.........?"

லதா ஆற்றாமல் கேட்டாள்:

''அப்ப ஒரு ஆபத்து அந்தரத்துக்குத்தன்னும் உங்களுக்கு லீவு எடுக்கேலாதோ அண்ணை?"

''இப்ப மற்ற வேலைக்குத்தான் லீவெடுத்தாலும்....... பார்ட் டைம் வேலைக்கு எடுத்தேனென்டால் எங்கையெண்டிருக்கிற நம்ம சனமே ஓடிப்போய் புகுந்திடும்......... பிறகு கோவிந்தாதான்..........கிறிஸ்மஸ் லீவுக்கை வந்திருந்தியளெண்டால் சோக்காய் எல்லாம் பார்த்திருக்கலாம்......."

ராகுலன் மனதுக்குள் " இதுதான் ஸ்னோ மலையாய் கொட்டிக்கிடக்கு பார்......" என்றிருப்பான்.

இவர்கள் ஒரு நாளாவது லீவு போட்டுவிட்டு தம்மோடு சந்தோஷமாக நிற்பார்கள் அல்லது ஏதாவது ஒரு இடத்திற்குக் கூட்டிப்போவார்கள் என்ற நம்பிக்கை அறவே பொய்த்துப்போய் அவர்களது - பொருள் முதல் உலகம்- வேறென்பதும் புரிந்து போயிற்று.

சடுதியான காலநிலை மாற்றம் ஒத்துக் கொள்ளவில்லையோ என்னவோ லதாவின் குழந்தைக்கு பகல் முழுவதும் லேசாக உடம்பு காய்ந்தது. பின்னேரமும் கொஞ்சம் சிணுங்கிக்கொண்டிருந்தாள். மயூரனுக்கும் காய்ச்சல் தொற்றிக்கொண்டுவிடும் என்ற பயத்தில் போலும் அண்ணனும், அண்ணியும் மாலை முழுவதும் மாடியில் இருந்த தம் படுக்கையறையே கதியென்று கிடந்தார்கள். கீழிறங்கவேயில்லை.

அண்ணன் பார்ட் டைம் வேலைக்குப் போய் வந்து மீண்டும் கடுவன் பூனைமாதிரி மாடிக்கு ஏறிப்போனான்.

அண்ணி குசினிக்குள்ளிருந்து சாப்பாடு எடுத்துக்கொண்டு போய் அவனுக்குக் கொடுத்தாள். ஒரு சம்பிரதாயத்திற்குக்கூட அவர்கள் ''என்ன..... குழந்தைக்கு எப்பிடியிருக்கு....?" என்று விசாரிக்கவில்லை. லதாவும் தன்னுள் உதிர்ந்து போயிருந்தாள். ராகுல் தன் குடும்பத்தைப் பற்றி விருந்தோம்பும் பாங்கு பற்றி மிக மட்டமாக எடை போடப் போகிறான் என்ற பயத்தில் மௌனம் காத்தாள். ராகுலுக்கும் அவர்கள் போக்கால் அங்கே மேற் கொண்டு தங்க அதைரியமாகவும், கூச்சமாகவும் இருந்தது.

இரவுமுழுவதும் குழந்தை அடிக்கடி சற்றே கண்ணயர்வதும் பின் எழும்பி அழுவதுமாயிருந்தது. இருவரும் மாறிமாறி தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு சிறிய கூடத்திலும் ஆளோடியிலும் உலாத்தினார்கள்.

குழந்தையின் அழுகையில் அண்ணன்காரனுக்கு வந்த உறக்கம் கலைந்து கலைந்து போனது. அடுத்த தடவை கலைந்தபோது எரிச்சலுடன் எழும்பி வெளியேவந்து மாடிப்படியில நின்று அதட்டினான்.

'' ஏய்....... லதா உந்தப்பிள்ளையைக் கொஞ்சம் அழாமல்தான் பாரன்........ மனுஷர் விடியவேலைக்குப் போகவேணுமல்லே......"

'' பிள்ளைக்குச்சாடையாய் மேல் காயுது அண்ணை...... அதுதான் அழுகிறாள்...."

''சுகமில்லையெண்டால் நேரத்தோட டொக்டரிட்டை காட்டியிருந்திருக்கலாமில்லை!"

அற்பப்பயலே அவர்கள் உனது விருந்தினர்கள். நீயல்லவா டாக்டரிடம் கூட்டிப்போயிருக்க வேணும்.

'' பராசெற்றோமோல் ஒன்று குடுத்திருக்கிறன்...... தணியுதோ பார்ப்பம்...."

''என்ன குடுத்தியோ...... இனியும் கத்தினால் மயூரனும் எழும்பி வாசிக்கத் தொடங்கிடுவான்........ பிறகெனக்கு வெளியில குதிக்கிறதைத் தவிர வேறை ஒண்டுஞ்செய்யேலா.........."

பிள்ளையே பெற்றுக்கொள்ளாதவன் மாதிரி அவன் பொழிந்துவிட்டு உள்ள போகவும் ராகுலன் லதாவின் காதில் மெல்ல ஆனால் உறுதியான குரலில் சொன்னான்:

''..... நாங்கள் உறவென்று நம்பி பிழையான இடத்துக்கு வந்திட்டம்........... இப்ப பிள்ளைக்குச் சட்டையைப் போட்டிட்டு...... நீரும் உடன வெளிக்கிடுறீர். இதுக்கு மேலயுமிங்கை ஒரு நிமிஷந்தன்னும் என்னால தங்கேலாது......."

லதா ஒரு மறுப்பும் சொல்லவில்லை. அவனோடு ஓசைப்படாது வெளிக்கிட்டாள். குழந்தையின் சாமான்கள் எல்லாம் சரிதானாவென்று இன்னொருதரம் சரி பார்த்துவிட்டு சூட்கேஸ்களை எடுத்துக் கொண்டு மெதுவாய் வெளியேறிக் கதவைச்சாத்தினார்கள். காரில் போய் அமர்ந்த பின்புதான் இயல்பாக மூச்சேவிடவே முடிந்தது. நிம்மதி உண்டானது.

கார் சுவிற்சலாந்து-ஜெர்மனி எல்லை நகரமான பாசலை அண்மிக்கவும் மலைகளும், அதன் சாரலில் அமைந்திருந்த அழகழகான வீடுகளும், பள்ளத்தாக்குகளும், தூரிகையால் இழுத்துவிட்டது போலிருந்த நதிகளும், பாலங்களும், சுரங்கப்பாதைகளும் மறைந்து விடை பெற்றன. சமதரையிலான விரைவுசாலையில் மணிக்கு 120 கி.மீ வேகங்கொள்ள அனுமதித்திருந்தார்கள். எதிர்த்திசையில் ஆபிரிக்க இறக்குமதியான வெள்ளாடுகளை நிறைத்துக்கொண்டு வேகமாக வந்த பாரவுந்தொன்று அவர்களது காரையும் சற்றே குலுக்கிவிட்டு சுவிஸ் நோக்கி அம்புருவிப்பறந்தது.

சற்றே பயந்துவிட்ட லதா சொன்னாள்:-

''கண் மண் தெரியாமல் அவன் பறக்கிற வேகத்தைப்பார்த்தியளே.........?"

'' எல்லாம் கொண்ணன் கோவிச்சுக் கொள்ளப் போறாரெண்ட பயத்திலதான்......."

''என்ன அண்ணை கோவிக்கப்போறாரெண்டோ...... என்னப்பா சொல்லுறியள்......?"

'' அதெல்லாம் அவர் எங்களுக்காக ஓடர் பண்ணின ஆடுகளல்லே........ அதுதான் விருந்துக்கு லேட்டானால் கோவிச்சுக்கொள்ளப் போறாரேயெண்டு கிலியில பறக்கிறான்......

சுவிஸ் நோக்கிக் கார் திரும்பியதிலிருந்தே சிரிப்பைத் தனியாகவே கழற்றி வைத்திருந்த லதா கண்களில் நீர் முட்டும்வரை கனிந்து குலுங்கிச்குலுங்கிச் சிரித்தாள்.

'' என்னவோ தெரியாதப்பா அண்ணை முந்தியிப்படியில்லை..... இப்ப சரியாய் மாறித்தான் விட்டார். அண்ணியோட சேர்ந்து எதுக்கெடுத்தாலும் · ஒரு இடத்தை போறம், ஒரு சாமான் வேண்டவேணும், ஒரு ஆக்கள் தந்தவை, ஒரு பகுதி வரும், ஒரு அலுவலிருக்கு......... என்று சஸ்பென்ஸ் வைத்துத்தான் கதைக்கிறார்."

'' அது சஸ்பென்ஸ் மாத்திரமில்லை....... மற்றவர்களை நாங்கள் ஒரு டிஸ்டென்ஸிலதான் வைத்திருக்கிறம் என்கிறதின்ற படிமம் அது..!"

அண்ணாச்சி அவர்கள் வீடு தேடிவந்து

'' நாங்கள் வேலைப்பழுவில உங்களைச் சரியாய் உபசரிக்காம விட்டிட்டம்...... மன்னிச்சுக் கொள்ளுங்கோ." என்று வந்து சாஷ்டங்கமாய் காலிலெல்லாம் வீழ்ந்துவிடப்போவதில்லை. சிலவேளை ரெலிபோனில் ஏதாவது பெனாத்தலாம். வீட்டுக்கு வந்ததும் முதலில் ரெலிபோன் இணைப்பைப் பிடுங்கிவிட்டார்கள்.

குழந்தையை டாக்டரிடம் கொண்டுபோய்க் காட்டியதில் அன்று மாலையே காய்ச்சல் சுகமாகித் தவழ்ந்தோடித் திரிந்தது.

மறுநாள் மாலை தோட்டத்தில் சாய்வுகதிரையைப் போட்டுக்கொண்டு ராகுலன் ஹேர்மன் ஹெஸ்ஸவின் சித்தார்த்தாவை வாசித்துக் கொண்டிருக்கையில் அங்கே சிற்றுண் டியும் சேமியாப்பாயாசமும் கொண்டு வந்த லதாவைக்கேட்டான்:

'' ஊர்லாப்தான் இன்னும் ஒரு கிழமை இருக்கே.... பாரீஸுக்குப் போவமே.......?"

அப்போ அவனை லதா மேற்கண்ணால் பார்த்த ஓர் பார்வையிருக்கே ......... ச்சொச் சொச்சொ!

நாங்கள் மெல்ல மாறுவம்............. அதை ராகுலன் தனியே ரசிக்கட்டும்.

O

9.12.1997. பெர்லின்

## விஷ்ணு ...

வாழ்க்கையும் கிடைப்பதாகத் தான் சித்திரிக்க முடிகின்றது ஜெயமோகனுக்கு. ஜகன்மித்யையில் அவர் பிரஸ்தாபிக்கின்ற சுழற்சித் தத்துவத்தையும், விஷ்ணுபுரத்தின் ஊழியையும் இணைத்துப் பார்ப்பதை என்னால் தவிர்க்க முடியவில்லை. உயர்ந்தவர்களுக்கு ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை யும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு சபிக்கப்பட்ட வாழ்க்கையும் எத்தனையோ ஊழிகளின் முடிவின் பின்னரும் தொடர்ந்து கொண்டே இருக்கப் போகின்றதோ?!

எனது தருக்கங்களை மீறி, என் ஆழ்மன இயக்கம் இதில் பதிவாகியிருப்பதை உணர்ந்தேன் என்று முன்னுரையில் ஜெயமோகன் கூறியிருப்பதும் எனது ஞாபகத்தில் வந்து தொலைக்கின்றது. ஜெயமோகனின். ஆழ்மன இயக்கம் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையையும், சபிக்கப்பட்ட வாழ்க்கையையும் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதில் தான் மையம் கொண்டுள்ளதோ ?!

விஷ்ணுபுரம் ஒரு நகரம் என்று சித்திரிக்கப் பட்டிருப்பினும் இந்திய துணைக்கண்டம் நமக்களித்த தத்துவங்கள் எல்லாவற்றையும் பரிசீலிக்கும் ஒரு தளம் அதுவாகும். விஷ்ணுபுரம் பற்றிய தகவல்கள் எம்மனதில் எழுப்பும் ஸ்தூல உருவம் கூட முழு இந்தியத் துணைக் கண்டத்தையுமே ஞாபகப் படுத்துகின்றது.

ஆனால் விஷ்ணுபுரத்தில் அதாவது இந்திய துணைக்கண்டத்தில் ஒரு விவசாயியை அல்லது தொழிலாளியை தயவு செய்து அரிவாள், சுத்தியலுடன் இதை ஒப்பிட வேண்டாம். நாம் காண முடியாது. நாம் காண்பதெல்லாம் ஞானிகளையும், சாமியார்களையும், தாசிகளையும், சிற்பிகளையும், அரசர்களையும், தளபதிகளையும், ஆழ்வார்களையும் தான். இவர்கள் தமது வீரத்தையும், கலா நேர்த்தியையும், ஞானத்தையும், பக்திப் பெருக்கையும் எவர் மீது பிரயோகிக்கின்றார்கள்? இவர்களுக்கு உணவளித்தவர் யார்? இதைப்பற்றி வாசகர்கள் தான் தீர்மானித்து விஷ்ணுபுரத்தின் பாதாள உலகையும் தாமே காண வேண்டும் சிலவேளைகளில் விசவாயிகளும், தொழிலாளர்களும் விஷ்ணுபுரத்தில் வாழ்ந்திருப்பின் அவர்களைப் பற்றியும் ஜெயமோகன் எழுதித் தொலைத்திருக்க வேண்டியிருக்கும் அது. அரசியல் கோட்பாடுகள் சார்ந்த எளிமைப்படுத்தல்களாக கருதப்பட்டிருக்கும். ஆனால் இவர்களைப் பற்றிய விசாரணைகள் இதுவரை காலமும் இவ் எளிமைப் படுத்திய வடிவங்களிலேயே நமக்குக் கிடைத்து நம்மைச் சோர்வுறச் செய்திருக்கின்றன என்ற உண்மையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனால் அம்மக்களையே ஜெயமோகன் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டார் போலும். ஆனால் உலகின் இயக்கு சக்தியின் மூலம் அவர்களே. ஞானம் முக்கியமாக வேண்டப்படுவதும் அவர்களுக்கே. ஜெயமோகனுக்கு நாம் கூற விரும்புவது இதைத்தான்.

மொத்தத்தில் உழைக்கும் மக்கள் தவிர்ந்த எனையோரின் வாழ்வின் அடிப்படைகளைப் பற்றிய விசாரணையை பல்வேறு கோணங்களிலிருந்தும் தொடக்கி வைத்துள்ளது விஷ்ணுபுரம். அந்த அளவில் வெற்றியும் அடைகின்றது. ஜெயமோகன் அவ்வகையில் பாராட்டுக்குரியவர் தான். மறுப்பதற்கில்லை.

சில நண்பர்களைக் கேட்டேன். வாசித்து விட்டீர் களா என்று. இல்லை என்கி றார்கள். ஆனால் என்னையோ திரும்பத் திரும்ப வாசிக்குமாறு கோருகின்றது இந்நூல். வாழ்வின் பல்வேறு சிடுக்குகளைப் பற்றியும் உரையாட விஷ்ணுபுரம் தயாராக இருக்கின்றது. ஜெயமோகனின் அரசியலையும் மீறி அவர்மீது மதிப்பும், உள்ளார்ந்த நட்பும் கொள்ள வைக்கின்றன அவரது எழுத்துக்கள்.

O

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இது ஒரு தனிப்பட்ட பிரச்சினைதானா?



ரத்னா

பெண்கள் உரிமைக்காக குரல் கொடுத்துவருபவரும், சிங்களப் பத்திரிகைகளில் விவாதத்திற்குரிய பல்வேறு கட்டுரைகளை எழுதிவருபவரும், பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டு வந்தவருமான சிங்கள நண்பி ஒருவர் விவாகரத்து கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தார். கருத்து வேற்றுமைகள் காரணமாக பிரிந்து சென்ற இவரது கணவன், வேறொரு பெண்ணுடனும், குழந்தையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். சம்பந்தப்பட்ட இந்நபர், பெண்கள் அமைப்புகளுடன் நெருங்கித் தொழிற்பட்டவர். வழக்கறிஞரின் அபிப்பிராயத்தின் படி, கணவனின் சட்டவிரோத உறவினை அம்பலப்படுத்த, உறவினரல்லாதோரின் சாட்சிகள் தேவையென இப்பெண்ணுக்கு அறிவுறுத்தல் கூறப்பட, இவரும் சில பெண்களை (அனைவரும் பெண் விடுதலை, பெண்ணியம் தொடர்பாக கோஷம் போடுபவர்கள்.) அணுகிய போது அவருக்குப் பெருத்த ஏமாற்றமே கிடைத்தது. இவர் அணுகிய சில பெண்களின் அபிப்பிராயத்தின் படி இது தம்பதியர் தனிப்பட்ட பிரச்சினை என கருதப்பட்டதனால், இப்பிரச்சினையில் பெண்ணிலைவாதிகள் தலையிட மறுத்தத் தெரிகிறது. அத்துடன் இவர் ஒரு பெண்ணிலைவாதியெனவும், அதனால் தமக்கு இப்பெண்ணுடன் வாழமுடியாது. இவர் குடும்ப அமைப்புக்கு ஒத்து வரமாட்டார் எனவும், இப்பெண்ணின் கணவர் தமது வாதங்களை முன்வைத்திருக்கிறார். அதனை நிரூபிப்பதற்காக அவர் பத்திரிகைகளில் எழுதிய பெண்ணிய கட்டுரைகளை ஆதாரமாகக் காட்டியுள்ளார். இந்தச் சம்பவத்தின் அடிப்படையில் இவர், தான் இனி எந்த பெண்கள் அமைப்புகளுடனும் இணைந்து செயற்பட போவதில்லையெனவும், பத்திரிகைகளுக்கு எந்த விதமான பங்களிப்பினையும் வழங்கப் போவதில்லையெனவும் முடிவெடுத்துள்ளார்.

கடந்த வாரம் பெண்கள் அமைப்புகள் அனைத்தும் கையொப்பமிட்டு பிலிப்ஸ் நிறுவனத்துக்கு எதிர்ப்புக் கடிதமொன்றை எழுதியிருந்தன. திவயின, டெய்லிநியூஸ் பத்திரிகைகளில் பிலிப்ஸ் மின்குமிழை விளம்பரப்படுத்த பெண்ணின் உருவத்தை பயன்படுத்தியிருந்தமை இவ் எதிர்ப்புக்கு காரணமாகியது. இவ் எதிர்ப்புக் கடிதத்தில், பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு, மகளிர் ஆய்வு நிலையம், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், அக்ரோமார்ட், பெண்கள் சூழலியல் கேந்திரம், காந்தாசக்தி, பெண்ணின் குரல், சூரியா மகளிர் மேம்பாட்டு நிலையம், முஸ்லிம் மகளிர் ஆராய்ச்சி செயற்பாட்டு முன்னணி, கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம், பெண் விமோசன ஞானோதயம், கண்டி பெண்கள் அபிவிருத்தி நிலையம், தாபிந்து கூட்டுறவு, சிங்கள பெண்கள் அபிவிருத்தி நிலையம், சிங்கள தமிழ் கிராமியப் பெண்கள் ஒன்றியம், குருணாகலை பெண்கள் அபிவிருத்தி நிலையம், சமாதானத்துக்கான பெண்கள், மல்வானை பெண்கள் கல்வி பயிற்சி நிறுவனம், தேவசரண பெண்கள் பிரிவு, கண்டி சத்யோதயா, சமூக சமய அமைப்பு, நிர்மாணிகாவய, கட்டுநாயக்கா பெண்கள் அமைப்பு, இலங்கை அரச சார்பற்ற பெண்கள் கூட்டமைப்பு, இலங்கை பெண்கள் ஒன்றியம், கிராமியப் பெண்கள் முன்னணி, இலங்கை பல்கலைக்கழக பெண்கள் அமைப்பு, இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம், 'செடக்' - பெண்கள் பிரிவு, சமூக விஞ்ஞானிகள் சங்க பெண்கள் கற்கைப் பிரிவு, களுத்துறை மக்கள் கூட்டமைப்பு, சிங்கள பெண்கள் விடுதலை அமைப்பு, ரஜரட்ட சமூக நலன் சேவை, நீர்கொழும்பு ஜனாவபோதய அமைப்பு என்பன கைச்சாத்திட்டிருந்தன.

இவ்விரு விடயங்களையும் ஆழ யோசித்துப் பார்க்கும் போது பெண்ணிலைவாதம் வெறும் பிழைப்புக்குரிய விவகாரமாகப் போய் விட்டதா என்ற கேள்வியே எழும்புகின்றது. பெண்ணிலைவாதத்தை உரத்துப் பேசுபவர்கள் தொடர்பான சந்தேகத்தை இந்நிகழ்வுகள் ஏற்படுத்துகின்றன.

பெண்கள், பெண்களாக இருப்பதால் அனுபவித்துணரும் பிரச்சினைகளை சுலபமாக பட்டியலிட்டுவிட முடியாது. இப்பிரச்சினைகளை உணர்ந்து, அவற்றிலிருந்து விடுபட, குரல் கொடுக்க முன்வரும் பெண்கள் மிகவும் மோசமானவர்களாகவே இச்சமூகத்தினால் கருதப்படுகின்றனர். கணவன்மார்களால் வெறுக்கப்படுபவர்களாகவும், குடும்பத்தினரால் நிந்திக்கப்படுபவர்களாகவும் உள்ளனர். மறுபுறம் பெண் விடுலை, சமத்துவம் உரிமை தொடர்பாக கதைக்கும் பொழுதும், செயலாற்றும் பொழுதும், அப் பெண் பாலியல் சுதந்திரம் பெறப் போராடுபவள், அடங்காதவள் என சக ஆண்களால் கருதப்படுகின்ற தன்மையையும் காணலாம். ஆனால், இவ்வாறான பிணக்குகளில் சிக்கியிருக்கும் பெண்களை ஆறுதல்ப்படுத்த, உதவி புரிய பெண்கள் அமைப்புகள், பெண்ணிலைவாதம் பேசுவோர் முன்வருகின்றார்களா என்று கேட்கத் தோன்றுகிறது.

மேற்கூறப்பட்ட சம்பவத்தில், பெண்கள் அமைப்புகளுடன் சம்பந்தப்பட்டோர், இது தனிப்பட்ட பிரச்சினை எனக் கூறி தலையிட மறுத்துவிட்டனர். அவ்வாறாயின், பெண்கள் கணவன்மார்களால் துன்புறுத்தப்படுவதும், பாலியல் வல்லுறவுக்குள்ளாகுவதும் தனிப்பட்ட விடயங்கள் தாம் எனக்கருத இடமுண்டு அல்லவா? அவ்வாறாயின், பெண்கள் பிரச்சினைகள் பற்றிக் கதைக்க யாருக்குத் தான் உரிமையுண்டு?

அதேபோல், பெண்களை இழிவுபடுத்தும் போகப்பொருளாக, இன்பம் தரக் கூடியவளாக காட்டும் விளம்பரப் படங்கள் அநேகம். இவை பத்திரிகைகளிலும் விதிவிலக்கின்றி வெளிவருகின்றன. முறையான, சுயமான ஆக்ரோஷமான எதிர் நடவடிக்கைகள் இதன் பெருக்கத்தினை ஓரளவு குறைத்திருக்கும். மாறாக பிலிப்ஸ் விளம்பரம் போன்ற ஓரிரு விடயங்களை கண்டு கொதிப்புறுவது சரியானதல்ல. உதாரணத்துக்கு, Elephant House Club Sodaவுக்கான மிகச்சமீப கால விளம்பரத்தைக் கூறலாம். இந்த விளம்பரம் தொடர்பாக பெண்கள் அமைப்புக்கள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ் அடிப்படையில் தான் பெண் விடுதலை எப்பொழுது எவ்வண்ணம் சாத்தியப்படும். அதற்கான பிரயோக ரீதியான நடவடிக்கைகள் என்ன என்ற கேள்விகள் எழும்புகின்றன. பெண்களது பிரச்சினைகள், அடக்குமுறைகள், தரக்குறைவுகள் பற்றி ஒப்பாரி வைப்பதை விடுத்து அத்திவாரங்களை அசைப்பது தான் சரியான காரியம்.

பெண்களது சம உரிமை, சுதந்திரம், விடுதலை, விழிப்புணர்வு என்பவற்றுக்கான வாய்ப்பைத் தரும் தொடர்பூடகங்களின் சிறந்த தொழிற்பாடு இதற்கு துணைபோகும். எனினும், துரதிருஷ்டவசமாக நமது தொடர்பூடகங்களில் தொழில்புரிவோர்-பெண்களுட்பட நவீன டிசைன்களை அறிமுகப்படுத்தவும், கண்மை தயாரிக்கவும், கணவன்மாருக்கு பணிவிடை செய்வது எப்படி என்று அறிந்து கொள்ளவும் தான் கற்றுத் தருகிறார்கள்.

கடந்த மே தினத்தில், ஜே.வி.பி. மேடையைத் தவிர பிற அரசியல் மேடைகளில் பெண்களின் உரையை செவிமடுக்க முடியவில்லை. எனினும், பெண்கள் சுலோகம் தாங்கி, அட்டைகளை பிடித்துக் கொண்டு அரசியல் கட்சிகளின் ஊர்வலத்தில் பங்கெடுத்திருந்தனர். ஆனால், பெண்கள் அமைப்புகள் என்ற அமைப்பின் கீழ் எத்தனை பெண்கள் ஒன்றிணைகின்றனர். சுலோகம் தூக்குகின்றனர். கோஷமிடுகின்றனர்.

இறுதியாக எனது நண்பியின் விரக்தியோடு கூடிய கூற்றுத் தான் ஞாபகம் வருகின்றது. ''பிணக்கில் மாட்டிக் கொண்டிருக்கும் பெண்களுக்கு உதவி செய்யாதவர்கள் தான், நாளை பெண் விடுதலைக்கு வழிகாட்டப் போகின்றார்கள். பார்த்துக் கொண்டிரு'!



# படையினரின் பாலியல் வல்லுறவுகள் நீதி விசாரணை எங்கே?

நீண்டகாலமாக இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் பல அழிவுகளை மாத்திரமல்ல, பாலியல் வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. எத்தரப்பினராக இருந்தாலும் 'வன்முறை' என்பது கண்டிக்கப்பட வேண்டியது அவசியமாகும். வன்முறை என்பதற்குள் பெண்கள் பாலியல் ரீதியான இம்சைக்கு ஆளாவது அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. இது தொடர்பான சில தரவுகள் எமது பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்திற்கு கிடைத்துள்ளன. இருப்பினும் தரவுக்கு எட்டாத பாலியல் வன்முறை சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு 1996ம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து இன்று வரை நடைபெற்ற பாலியல் இம்சைகளையும் அவை நிகழ்ந்துள்ள முறைகளையும் நோக்கும்போது இவை அனைத்தும் பெண்களுக்கெதிரான ஒரு இன வன்முறையென்பதையே கோடிட்டுக் காட்டுகிறது.

1996ம் ஆண்டு யாழ்ப்பாணம் கைதடியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் சுண்டிக்குழி மகளிர் கல்லூரியில் கல்வி பயின்ற மாணவி கிருஷாந்தி குமாரசாமி என்ற மாணவி க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு திரும்புகையில் கைதடி இராணுவ சோதனை முகாமில் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனை என்ற பெயரில் ஒன்பது இராணுவத்தினர் அவளை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினர். மகளை காணவில்லையென தேடிச்சென்ற அவளின் தாயாரும் சகோதரனும் அயலவரும் அதே இராணுவ முகாமில் வைத்து கொலை செய்யப்பட்டனர். பாலியல் இம்சையை மறைப்பதற்கான கொலைகள் தான் அவை என்பது வெளிப்படை உண்மை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைகள் நடைபெறுவது திருப்தியடையக் கூடியதாக இருந்தாலும் விசாரணைகளின் இழுபறியும், எதிரி தப்பி ஓடுவதும் பின்னர் அவனை கைது செய்வதும், ஓர் கேலிக் கூத்தாகவும், அரசியல் நாடகமாகவும் கருதப்படுகிறது.

இவ்விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே 1996ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ம்திகதி ரஜனி வேலாயுதப்பிள்ளை என்ற 23வயது பெண் தனது உரும்பிராய் வீட்டில் இருந்து மானிப்பாயில் உள்ள தனது மாமியார் வீட்டுக்கு போய்விட்டு திரும்புகையில் பலாலி - யாழ்ப்பாணம் பிரதான வீதியின் மேற்குப் பக்கமாக உள்ள வீதியின் இராணுவ சோதனை முகாமில் தடுத்து நிறுத்தப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு பின்னர் அவரது உடல் பாழடைந்த கிணற்றில் வீசப்பட்டுக் கிடந்தது. இவரின் தந்தையாரின் முயற்சியினால் இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்...!

இதையடுத்து யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனியில் ரேணுகா செல்வராசா என்ற 10வயது மாணவி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது 12.11.96 அன்று இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு பாலியல் இம்சைக்கு உள்ளாக்கப்பட்டாள். பின்னர் விடுவிக்கப்பட்ட சிறுமி தனது பாடசாலை அதிபரிடம் நிலைமையை சொன்னதும், அதிபர் உடனடியாக மாணவியை அழைத்துக் கொண்டு சம்பந்தப்பட்ட இராணுவ முகாமிற்கு போய் நீதி கேட்டபோது, இராணுவ வீரர்கள் தாங்கள் எதுவும் செய்யவில்லையென மறுத்துவிட்டனர். இது சில அரசியல்வாதிகளின் கண்டனங்களோடும், பத்திரிகை அறிக்கைகளோடு மட்டும் நின்றுவிட்டது.

இதையடுத்து மட்டக்களப்பு மைலம்பாவெளியில் கணவனை இழந்த பெண்ணும் அவளது சகோதரியும் (34,28) வீட்டில் இருந்த வேளை இராணுவத்தினரால் சோதனை என்ற பெயரில் பாலியல் இம்சைக்குள்ளாக்கப்பட்டு, பின்னர் அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இது தொடர்பான விசாரணைகள் முடுக்கி விடப்படவில்லை.

அதனையடுத்து கோணேஸ்வரி முருகேசப்பிள்ளை 17.05.97 அன்று மட்டக்களப்பு - அம்பாறைக் கிடையிலான சென்ரல் காம்ப் 11ம் கொலனி என்ற இடத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து பாலியல் இம்சைக்குள்ளாக்கப்பட்டு பின்னர் அவரது அந்தரங்க உறுப்பில் கிறனைட் வெடிக்க வைத்து கொலை செய்யப்பட்டுள்ளார். சோதனைக்குச் சென்ற பொலிசாரே இவ்வேலையைச் செய்துள்ளனர். சம்பந்தப்பட்ட பொலிசார் கைது செய்யப்பட்டனர். ஆனால் நீதி விசாரணை...?

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் தியாவட்டவானில் மூன்று பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டனர். பின்னர் இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டனர். அதையடுத்து மண்டூர் யுவதி (30) ஒருவர் 01.01.98 பாலியல் வன்முறைக்கு உள்ளானார். மேலும் யாழ்ப்பாணம் மீசாலையில் நாயுருவி எனும் இடத்தில் ஓர் உமைப்பெண் 03.03.98ம் ஆண்டு பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டாள்.

இவ்வாறு பத்திரிகைக் குறிப்புகளை

→ 18

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கிரிக்கிரிக்கட் : மாயச் சொக்குப் பொடி !

விளையாட்டு என்பது வெறுமனே ஒரு பொழுது போக்கு அம்சம் மட்டு மல்ல. அது உடல் ஆரோக்கியம், சமூகத்தின் ஐக்கியம், வெற்றி தோல்விகளை சமமாக ஏற்றுக் கொள்ளும் மனோபாவம் முதலான செழுமைகளையும் உள்ளடக்கி யுள்ளது. ஒருவருள் தேங்கிக்கிடக் கின்ற ஆற்றல்கள் அவிழ்ந்து பிரகாசிக்கும் போது அவர் குதூகலிக் கின்றார். தோல்வியடைந்தவர் வெற்றிப்பெற்றவரை தழுவி, தனது வாழ்த்தைத் தெரிவிக்கின்றார். இந்த உன்னதம் குழுமி இருக்கும் ஜனத்திரளுக்கு பூரிப்பினையும், படிப்பினையையும் ஊட்டுகின்றது. ஆனால் இன்று விளையாட்டுகள் போட்டிக்கு வரும்போது வணிக வடிவத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன. வீரர்களால்/ வீராங்கனைகளால் தோல்விகளை ஜீரணித்துக்கொள்ள முடிவதில்லை. ஒரு வீரனுக்குள்/ வீராங்கனைக்குள் செறிந்திருக்க வேண்டிய வெற்றி தோல்வியை சமமாக ஏற்றுக்கொள்ளுகின்ற மனோ பாவத்தை வணிக சிந்தனை சிதைத்துவிட்டிருக்கிறது. இந்தத்தடம் புரண்ட வணிகத்திற்கு கேள்வியை ஏற்படுத்தி பார்வையாளர்களை முட் டாள்களாக்குகின்ற கைங்கரியத்தை தான் அநேகமான இன்றைய விளையாட்டுப் போட்டிகள் செய்து முடிக்கின்றன. புகழ்பெற்ற ஒலிம்பிக் விளையாட்டும் இவ்வாறானதே. இந்த துரதிர்ஷ்டமான பின்னணியில் நின்று இலங்கை மக்களை ஆட்டிப் படைக்கும் கிரிக்கெட் விளையாட்டு நமது சமூகத்தின் மீது செலுத்தும் ஆதிக்கத்தை, அந்த ஆதிக்கத்தினை வளர்க்கும் சக்திகளின் நோக்கத்தை இதனால் விரயமாகும் சக்திகளை - வளங்களைப் பற்றி விளக்கவே இந்த குறிப்பினை எழுதுகிறேன்.

ஒரு விளையாட்டுக்குரிய உள்ளகத் தகுதியை / பண்பை கிரிக்கெட் எந்தள வுக்கு கொண்டுள்ளது என்பதனை கேள்விக்கு உட்படுத்தினால் விடை வெட்கக்கேடு. ஒரு குழு விளையாட்டு என்றால் அக்குழுவில் இடம்பெறும் அனைத்து உறுப்பினர்களின் உழை ப்பை அது ஏறக்குறைய பெற்றிருக்க வேண்டும். கிரிக்கெட்டை பொறுத்த வரையில் இந்தப் பண்பு அரிதாகவே உள்ளது. தவிர 11 சோம்பேறிகள் விளையாடுவதை 11,000 சோம்பேறி கள் பார்த்து மகிழ்வது எனும் உண்மையையும் இது வலிமைப் படுத்திக்கொண்டுதான் செல்கின்றது.

ஏகாதிபத்திய ஆங்கிலேயர்களின் முட்டாள்தனமான, சோம்பேறித்த னமான உற்பத்தியான கிரிக்கெட், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் வேறூன்றி முதலாளித்துவச் சக்திகளின் ஆதரவு டன் மனித உழைப்பை, சிந்தனையை, இறைமையை, கல்வியை என்று அவர்களின் ஜீவியங்களை தேய்வ டையச் செய்துகொண்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

இன்று, உலகின் பிரதான வியாபார முயற்சிகளில் ஒன்றாக கிரிக்கெட் போட்டிகள் விளங்குகின்றன. ஒரு நாள் போட்டிக்கு ஒரு ஆசன டிக்கற் 100 ரூபா முதல் 50,000ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. இந்தளவில் பணத்தைச் செலுத்தி பார்ப்பதற்கு மக்களைத் தூண்டியது விளம்பரந்தான். ஆள்பவர்களின் அனுசரணையுடன் முதலாளித்துவ வர்க்கம் இந்த போதையை தகவல் தொடர்பு ஊடகங்களின் வழியாக வலிந்து புகுத்தியுள்ளது.

தொலைக்காட்சி, வானொலிப் பெட்டி களின் முன்பாக கத்திக் குமுறிக் கொண்டு அமர்ந்திருக்கும் விவசா யிகள், அரச ஊழியர்கள், அதிகாரி கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சிறுவர்கள், புத்திஜீவிகள்.. ஒரு குடிகாரனைப்போல.. சதா இதைப் பற்றியே உளறிக்கொண்டும், கத்திக் கொண்டும், சிலவேளைகளில் சண்டை யிட்டுக்கொண்டும் இருக்கின்ற காட்சிகள் நெஞ்சை பிளக்கின்றன.

இவ்வாறு உழைக்கும் சக்திகள் தமது உழைப்பை உதறிவிட்டு இருப்பதும் அரச அலுவலர்கள், ஏனைய அதிகா ரிகள் தொலைக்காட்சி/ வானொலிப் பெட்டிகளின் முன்பாக மண்டியிட்டுக் கொண்டிருப்பதும், வளர்ந்து வரும் நமது நாட்டுக்கு ஆரோக்கியமான ல. இதனை ஆளும் வர்க்கம் நன்கு றியும். இன்றைய ஆளும் வர்க்கம் நாட்டு நலன், மக்கள் நலன் கருதாத உலக ஏகாதிபத்திய, சுரண்டும் கூட்டத்துடன் உறவு கொண்ட முதலாளித்துவ வர்க்கம் என்பதால் இந்த மாதிரியான ''போதை காட்சிகள்'' அவர்களின் சுரண்டலை, நாடகங்களை மறைக்கும் நல்ல திரையாக அமைந்து விடுகின்றன. வேண்டிய தேவைகளை, சட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள கிரிக்கெட் போட்டி உதவுகின்றது. இதற்கு நல்ல உதாரணம் மா, பாண் விலையேற் றங்கள். (கிரிக்கெட் 'பிஸி'யில் இதனைக் கேட்பதற்கு நம்மவர்க ளுக்கு நேரம் இல்லை.)

மக்களை குறிப்பாக இளைஞர்களை இந்த மாய விளையாட்டில் மயக்க மூட்டி வைப்பதினூடாக அவர்களின் வீரிய சிந்தனையை முழுங்கடிக்கவும், ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறைக்கு எதிரான போராட்ட உணர்வுகளை அழிக்கவும், சமூகங்களிடையே பிளவை ஏற்படுத்தவும் ஆளும் வர்க்கத்திற்கு கிரிக்கெட் உதவுகின் றது. இதற்காகவே இந்த மயக்கும் கோரப்போதை தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் மூலமாக புகுத்தப்படுகின்றது. தகவல் தொடர்பு ஊடகங்கள் ஆளும் வர்க்கத்தின ருக்கும் முதலாளித்துவ வர்க்கத் திற்கும் சொந்தமாக்கப்பட்டதால் இந்த தேவைகள் எளிதில் நிறைவேற்றப் படுகின்றன.

கிரிக்கெட் வருணனையாளர்கள் பாராட்டு விழாவில், ஜினதாஸ பீரிசினால் கூறப்பட்ட ''கிராம புறங்களிலும் கிரிக்கெட் பிரபல்யம் அடைவதற்கு வழி ஏற்படுத்தியது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தா பனம்'' என்ற கூற்று தகவல் தொடர்பு சாதனங்களின் போக்கினையும், அதன் பணியையும் தெளிவுப்படுத் துகின்றது.

கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்படும் அதீதமான வரவேற்புகள் முட்டாள் தனமானவை. நாட்டின் வளம் அழிந்து கொண்டிருக்கிறது. உற்பத்தி தடை பட்டுள்ளது. மனித உயிர்க ளுக்கான மதிப்பு அற்றுப்போய்க் கொண்டிருக்கிறது. ஏழைகளின் பணம் - உழைப்பு எரிக்கப்படுகின் றது. இந்த நிலையில் ஜெயசூரியாவின் சாதனை பெருமை தேடித்தரவல்லதா? ஜனாதிபதி கேக் வெட்டித் தரத்தான் வேண்டுமா? ஆயிரக்கணக்கான ரூபாய்ப்பெறுமதியான உழைப்புகள் நிறுத்தப்பட்டு, ஒரு வீரியமிக்க இளைஞர் படையின் சிந்தனை, உழைப்பு முடமாக்கப்பட்டு நிகழ்ந்த சருகுச் சாதனையாளருக்கு கேக், லட்சக்கணக்கான பெறுமதியான வீடு, புகழ்.... தலைவர்கள்தான் முதலாளிக ளாக உயர்ந்தனர். இனி கிரிக்கெட் வீரர்களுக்கு பணம்... பணம்... பணம். உழைப்பவனுக்கு?

கிரிக்கெட் போட்டிகளின் ஆதிக்கம் அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்து வருவதனையும், குறிப்பிட்ட வர்க்கம் பணத்தை பெருப்பித்துக்கொள் வதனையும் தடுத்து நிறுத்துவதற்கான தேவையை நமது தேசம் எதிர்பார்த் திருக்கிறது.

வீதிகளின் ஒழுங்குகள் பேணப்படு வது இல்லை. சந்து பொந்துகளில் கிரிக்கெட்! தொலைக்காட்சிகளை வேடிக்கை பார்க்கும் கூட்டம்.

ஒரு ஜனநாயக நாட்டில் வேண்டிய மனிதனை, குழுவை ஆதரிக்க ஒருவனுக்கு உரிமையுண்டு. ஆனால் கிரிக்கெட் போட்டியின் போது பாகிஸ்தான் அணிக்காக தனது விருப்பத்தை தெரிவித்த முஸ்லிம் இளைஞர் பொலிசாரினால் அடிக்கப் பட்டதும், வட்டவளையில் ஒரு தமிழ்வாலிபர் இந்திய அணிக்காக தனது ஆதரவை வழங்கியமைக்காக சிங்கள வாலிபரால் நையபுடைக்கப் பட்டதும் அடிப்படை உரிமை மீறல்க ளைக்காட்டுகின்றன. தவிர சமூகங் களிடையே காணப்படும் விரிசலை மேலும் விரிவுபடுத்தும் பணியை இந்தக் கிரிக்கெட் செய்து வருகின்றது.

இவ்வாறாக மனிதர்களை மூர்க்கத்த னமாக்கிய, வெறியர்களாக்கிய சோம் பேறிகளாக்கிய, சமூக உணர்வை; சிந்தனையை அழித்த கிரிக்கெட்டை வேரோடு சாய்ப்போம். முடியாது எனின் குறைந்த பட்சமாக,

✱ வானொலி, தொலைக்காட்சிகளில் நேரடி ஒலி/ஒளிபரப்பை தடைசெய்ய கோருவோம். அல்லது இரவு வேளை யில் மட்டுப்படுத்தப்பட்ட 2-3 மணித்தியாலங்களுக்கு தொகுப்பை ஒலி/ஒளிபரப்புதல்.

✱ பத்திரிகைகளில் கிரிக்கெட் போட் டிக்காகவும், வீரர்களுக்காகவும் வழங் கப்படும் பக்கங்களின் அளவைக் குறைப்போம்.

✱ எவ்விதமான தனிமனித குழு, கூட்டத்தின் வளர்ச்சிக்காக புகழுக்காக எங்களை உரமாக்கும் பேதமையை அழிப்போம்.

**எம்.எச்.எம்.ஜவ்பர்**
**டிக்கோயா**

---

''என்ன பெரிய சிந்தனையில் மூழ்கியிருக்கிற மாதிரி இருக்கே?'' என்று கேட்டவனாய் என் நண்பன் வந்தான்.

''ஓ, பெரிய சிந்தனைதான்'' என்றேன் நான்.

''அப்படியென்ன பெரிய சிந்தனை, நான் அறியலாமா?'' - நண்பன் கிண்டினான்.

''அதுதான் பிரச்சினை. நான் இரண்டுவிதமான சிந்தனை ஊடகங்கள்ப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். இதில் எந்த ஊடகம் மூலம் சிந்திப்பது பலமானது என்ற கேள்வி எனக்கு'' என்றேன் நான்.

''முதலில் நீ சொல்லும் சிந்தனைக்குரிய ஊடகங்கள் எவையென்று எனக்கு சொல்லு. அதன் பின்தான் எனக்கு உன் பிரச்சினைக்கு உதவமுடியுமா என்று சொல்லலாம்'' - நண்பன் கூறினான்.

''இரண்டுவிதமான சிந்தனை ஊடகங்கள் உண்டு. ஒன்று வார்த்தை என்னும் ஊடகத்தின் மூலம் சிந்திப்பது. அடுத்தது கணிதம் என்னும் ஊடகத்தின் மூலம் சிந்திப்பது. இந்த இரண்டு ஊடகங்களில் தனது சிந்தனையை ஒரு ஊடகத்தின் மூலமே வழிப்படுத்தத் தெரிந்தவன் அரைமனிதன். இப்படி நான் சொல்லவில்லை, பேட்ரண் றஸல் சொல்லியிருக்கிறார். இனி வரவரக் கணிதம் மூலம் சிந்திப்பது தான் அதிக தேவைக்குரியதாக மாறும் என்றும் சொல்லப்படுகிறது''

''காரணம்?''

''இன்றைய விஞ்ஞானத்தின் நவீனகண்டுபிடிப்புகள் யாவும் அன்றாட வாழ்க்கையிலேயே கணித சிந்தனையை மேலோங்கச் செய்வதாகவே உள்ளன. இதற்கு நமது வாழ்க்கையில் கணனி (Computer) எல்லா இடங்களிலும் புகுந்துள்ளதை உதாரணமாகக் காட்டலாம். இதையும் விடமுக்கியமான எதிர்கால விஷயங்களுக்கும் கணித சிந்தனையே உதவப்போவதாகச் சொல்லப்படுகிறது.'' - நான் விளக்கினேன்.

''என்ன மாதிரியான விஷயங்கள்?'' - அவன் தொடர்ந்து துழாவினான்.

''வேற்றுலகவாசிகள் பூமிக்கு வந்தால், அவர்கள் பாஷை எங்களுக்கும், எங்கள் பாஷை அவர்களுக்கும் தெரியாத பட்சத்தில் அவர்களோடு கதைப்பதற்கு உதவப்போவது கணித சிந்தனைதான் என்று சொல்லப்படுகிறது'' நான் கூறினேன்.

''ஆனால் ஒரு பிரச்சினை?'' நண்பன் குறுக்கிட்டான்.

''என்ன?''

''ஊனக் கண்ணுக்குத் தெரிகிற நம்மைப்போல் ஸ்தூல நிலையில் வாழ்கிற வேற் றுலகவாசிகளோடு கதைப்பதற்கு கணித சங்கேதக் குறியீட்டுச் சிந்தனைகள் உதவ லாம். ஆனால் ஊனக் கண்ணால் பார்க்க முடியாத வேற்றுலக வாசிகளோடு தொடர் புகொள்ள கணிதம் மூலம் சிந்திப்பதற்கு பதில் வார்த்தைகள் மூலம் சிந்திப்பதுதான் உதவும் என்பது என் கருத்து'' - நண்பன் ஒரு புதிய கருத்தை முன்வைத்தான்.

''ஊனக்கண்ணுக்குத் தெரியாத வேற்றுலக வாசிகள் என்று நீ யாரைச் சொல்கிறாய்?'' - நான் எதிர்க்கேள்வி போட்டேன்.

''ஆவிகள், தேவதைகள், தெய்வங்கள்; ஏன், எம்மை இயக்குகின்ற எமக்குள் இரு க்கின்ற எம் ஆத்மா என்று கூட அதைச் சொல்லலாம்'' - அவன் பதில் அளித்தான்.

''இதை நீ நம்புகிறாயா?'' - நான்.

''இதை நம்புவது இப்போ சர்வசாதாரணமாகி விட்ட ஒன்று. ஒரு எலியை சாகவைத்து, அது சாகும்போது அதன் உயிருக்கு என்ன நடக்கிறது என்ற ஆய்வுகள் நடத்தி, ஒளி போல வெளியேறும் எலியின் உயிர் பதிவு செய்யப்பட்டுள்ளது. கண் ணுக்குத் தெரிபவைதான் உண்மையென்ற காலம் போய் கண்ணுக்குத் தெரியாதவை பற்றிய ஆய்வுக்குள் விஞ்ஞானம் புகுந்துக் கொண்டிருக்கிறது. மனிதன் பலவித, சொல்ல முடியாத உணர்வுகளால் பாதிக்கப்படுவது, இத்தகைய கண்ணுக்கப்பாற் பட்டவற்றின் 'இருப்பினா'ல்தான். இத்தகைய வற்றினோடு தொடர்புகொள்வதற்கு கணிதம் சரிவராது. வார்த்தைதான் சரிவரும்'' அவன் அழுத்தமாகக் கூறினான்.

''வார்த்தைகள் என்றால்?'' - நான் விளக்கம் கோரினேன்.

''மிக நுண்ணிய, உச்சக் கவித்துவப் பாங்கான வார்த்தைகள். இத்தகைய நுண் ணிய கவித்துவ வார்த்தைகளே நமது இருப்பின் மர்மத்தை, தர்க்கத்துக்கப்பாலான நம் இருப்பை ஊருரிவிக்காட்ட முயல்பவை. ஆகவே, ஊனக்கண்களுக்கு அப்பாற்பட்ட 'நுண்ணிய தொடர்பு'களுக்கு வார்த்தை வழிவந்த ஊடகமே சிறந்தது'' அவன் பதில் அளித்தான்.

''ஆனால் ஒரு பிரச்சினை''. - நான் குறுக்கிட்டேன்.

''என்ன?'' - அவன்.

''நீ குறிப்பிடும் தர்க்கத்துக்கு அப்பாலான நம் இருப்பின் மர்மத்தோடு தொடர்பு கொள்வதற்கு வார்த்தைகளே இல்லாத மூன்றாவது சிந்தனை ஊடகமே சிறந்தது என்று நினைக்கிறேன். கணிதக்குறியீடுகளும் சரி, கவிதையும் சரி வார்த்தைகளே. அதனால் இவை ஸ்தூலமானவையே. எப்பொழுதும் ஸ்தூலமானவை சூக்குமத்தளங்களை ஒரு கட்டத்துக்குமேல் துளைக்க முடியாது பின்னடைவு கொள்கின்றன. ஆகவே, வார்த் தைகளே இல்லாத மூன்றாவது சிந்தனை ஊடகமே இதற்கு முற்றிலும் சரியானது'' நான்.

''அந்தச் சிந்தனை ஊடகம் எது?'' -அவன்

''இசை'' என்று கூறிய நான் தொடர்ந்து சொன்னேன். ''வார்த்தைகள் தரும் கருத்து எதுவுமற்ற தனி இசை மீட்டல் (வாத்தியங்கள் மூலமோ வாய்மூலமோ) எம்மை வெகு எளிதாக ஸ்தூத்லதளங்களில் இருந்து சூக்குமத் தளங்களுக்கு இட்டுச் செல்கிறது. அதனால் தான் சிறந்த இசையை ரசித்துவிட்டு ''மெய்மறந்து போனேன்'' என்று ஒருவன் சொல்கிறான்.''

''அப்போ இசை ஒரு சிந்தனையா?'' அவன் திருப்பிக் கேட்டான்.

''அப்படித்தான் நான் சொல்லுவேன்'' - நான்

''அதனால்தானா அனேக கணிதமேதைகளும், சிந்தனையாளர்களும் தத்துவ ஞானிகளும் சிறந்த இசை ரசிகர்களாக, இசை ஞானமுடையவர்களாக, தமது ஓய்வு நேரத்தை இசையில் கழிப்பவர்களாக உள்ளார்கள்?'' - அவன்

''நிச்சயமாக'' என்று கூறிய நான், ''இந்த விவாதத்தின் படி பார்த்தால் சிந்தனை யின் அதி உயர்ந்த ஊடகமா இதுவரை சொல்லப்பட்டவற்றின் அனைத்திற்கும் மே லான ஊடகமாக இன்னொன்றைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்'' என்றேன்.

''அது என்ன ஊடகம்?'' அவன் ஆவலோடு கேட்டான்.

''சும்மா இருத்தல்!''

''சும்மா இருத்தலா? எப்படி''- அவன்

''சும்மா இருத்தலின் போது மனிதன் தூய சிந்தனை (பிரக்ஞை) வடிவமாகவே இருக்கிறான். இந்நிலையில் அவனுக்கு ஸ்தூல -சூக்கும என்ற தளநிலைத் தடைகள் ஏற்படப் போவதில்லை. காரணம், அவன் எப்பொழுதும் சூக்குமமான தன் சொந்த இரு ப்பில் இருக்கிறான். அப்படி இருக்கும்போது அவன் இப்பிரபஞ்சத்தின் சகலவற்றோடும் தொடர்பு கொள்கிறான். அந்தத் தொடர்பானது இப்பிரபஞ்சத்தின் சகலவற்றையும் அவன் சிந்தனையில் கரைத்துவிட எஞ்சுவது அவன் ஏக சிந்தனை இருப்பு மட்டுமே!

''பிறகு?''

'பிறகு' என்று நீ குறிப்பிடுகிற நேரம், இடம் தொடர்பு கொள்ள ஆட்கள், பொருள் என்று எதுவுமே அந்நிலையில் அவனுக்கு இல்லை. அவன் ஏக சிந்தனை இருப்பு மட்டுமே!''

''அப்போ?''

''சும்மா இரு!''

**- சங்கமன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அங்கு எல்லாமே தலைகீழ் தான்!

வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கென உருவாக்கப்பட்டது வட கிழக்கு மாகாண சபை. ஆனால், வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கு பயன்கிடைத்ததோ இல்லையோ, இதனால் பயன் அடைந்தவர்கள் வயோதிப ஒப்பந்த உத்தியோகஸ்தர்களும், சேவை நீடிப்பு பெற்ற உத்தியோகஸ்தர்களும் என்றால் அது மிகையில்லை!

வடக்கு கிழக்கு மாகாண சபை உருவானபோது அதற்காக தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இருந்தார்கள். சரியோ பிழையோ அவர்கள் மாகாண சபையை கட்டி ஆண்டார்கள்! அது கலைக்கப்பட்ட பின் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் இதுவரையும் நடைபெறவேயில்லை! அதாவது மாகாண சபைக்கு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் கட்டி ஆளுகின்ற நிலைமை ஏற்படவேயில்லை. இதனால் அங்கு ஒரு சில அதிகாரிகள் இட்டதே சட்டம் என்ற நிலை! அதுவும் சேவை நீடிப்பு பெற்றவர், வயோதிப ஒப்பந்தக்காரர் என அவர்களின் கொண்டாட்டம் தான் போங்கள்!

இதோ ஒரு சோற்றுப்பானைக்கு ஒரு சோறு பதம்.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சின் கீழ் மாகாண ஆயுள்வேதத்திணைக்களம் இயங்குகின்றது. அது தொடங்கப்பட்டதில் இருந்தே சுத்துமாத்து ஊழல் திணைக்களம்தான்! முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போல், பிறக்கும் போதே முறைகேடு, ஊழல்கள், உடன் பிறந்தவை தான் மாகாண ஆயுள் வேதத்திணைக்களம். அங்கு ஆரம்பத்தில் இருவர் மாத்திரமே இருந்தனர். சாடியும் மூடியும் போல ஒருவர், கல்வித் தகைமை இன்றி எப்படியோ லிகிதர் ஆக புகுந்து ஆட்சி நடத்தினார் என்றால், மற்றவர் வயோதிபத்திலும் அரச உத்தியோகமே புருஷ இலட்சணம் என பவனி வந்தார்! ஒத்துப் பாடும் அரசனும் மந்திரியுமாக மாகாண ஆயுள் வேதத் திணைக் களத்தை ஆட்சி செய்தனர் இவர்கள்!

இடையில் அரசனுக்கும், மந்திரிக்கும் யார் அரசனாக இருப்பது என்ற முரண்பாடு வந்துவிட்டது. மந்திரியே சூழ்ச்சியில் வென்று கொண்டார். போதிய கல்வித்தகைமை அற்ற லிகிதரின் ஞானோதயத்தில் தலையும் அற்ற காலும் அற்ற ஒரு புதிய பத்திரிகை விளம்பரம் வந்து தொலைத்தது புதிய ஆயுள் வேத பணிப்பாளரை தேர்வு செய்ய விண்ணப்பிக்கும் படி! எப்படி இருக்கும்? மந்திரி தன்னைப்போல் கல்வித் தகைமை அற்றவர்களை உட்புகுத்த செய்த கூத்தே அவ்விளம்பரம். அந்தக் காலும், தலையும் அற்ற விளம்பரம்; புதிய ஆயுள் வேத மருத்துவ யாப்பு எதை எதை வேண்டாம் என்று கூறியதோ அதை எல்லாம் உட்புகுத்த வேண்டும் என மறைமுகமாக கூறிவிட்டது. லிகிதரின் யுக்தியும் அதுதான் அவரின் யுக்தியும் பலித்தது! திண்டாடுவதோ ஐந்து வருடம் மினக்கெட்டு படித்துப்பட்டம் பெற்ற வைத்தியர்கள்! இதுவும் வட-கிழக்கு மாகாண சபையின் கண்டுபிடிப்பில் ஒன்று!

அந்த விளம்பரத்தில் கல்வித்தகைமை பற்றிய கதையே இல்லை. மொட்டையாக பட்டமேற்படிப்பு பெற்றவர்க்கு முன்னுரிமை என்று கூறப்படுகின்றது. ஆனால் யார் பட்டமேற்படிப்பு பெற முடியும்? எல்லோரும் பெற முடியுமா? அதுதான் இல்லை. அதற்கு அதற்கு என சில கல்வித்தகைமைகள் உண்டு. அந்தக் கல்வித்தகைமைகள் பற்றி ஏன் குறிப்பிடவில்லை என்ற வினா எழுகின்றது.

இதற்கு புதிய ஆயுள் வேத மருத்துவ யாப்பு கல்வித்தகைமை பற்றித் தெளிவாக கூறுகின்றது. ஆனால், அது விளம்பரத்தில் கூறப்படவில்லை என்ற போதிலும் பல வித அழுத்தங்கள் காரணமாக நேர்முகப்பரீட்சை நடந்து நேர்மையாக ஒரு பட்ட மேற்படிப்பு பெற்ற (M.D.) வைத்தியர் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகையிலும் பெயர் வந்தது. நியமனமும் கிடைத்தது என்ற போதிலும் லிகிதர் விடவில்லை. அவரின் நெஞ்சம் குமுறியது! ஏதோ ஏதோ நொண்டிச் சாட்டுக்களைக்கூறி அவரின் நியமனத்தை ரத்துச் செய்ய வைத்து விட்டார்! அவரின் ஆட்சி அப்படியே கொடிகட்டிப் பறக்கின்றது.

அதன் பின் அவரின் எண்ணத்துக்கு ஏற்பட கல்விகற்றவர்களை விட்டு விட்டு (அவர்களுக்கு என்ன என்ன பொய்களை கூறிக்காய் வெட்டினாரோ?) ஒருவரைத் தெரிவு செய்தார்கள். இதில் வினோதம் என்ன வென்றால் தெரிவு செய்யப்பட்டவர் மாகாணசபை ஆரம்பத்தில் தொடங்கியபோது நடத்திய நேர்முகப் பரீட்சையில், போதிய கல்வித் தகைமை இல்லாதவர் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டு ஒதுக்கிவிடப்பட்டவர் ஆவார்! அப்போது போதிய கல்வித்தகைமை இல்லாதவர் என ஒதுக்கப்பட்டவர் இப்போ தகுதியானவர் என தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார். கல்வித்தகைமை உள்ளவர்கள் தகுதி இல்லாதவர்கள் என ஒதுக்கப்பட்டுள்ளனர். இந்த விந்தையும் இந்த வட- கிழக்கு மாகாண சபையில் தான் நடந்துள்ளது!

ஒ சில பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் போது சில சட்டதிட்டங்கள் கவனத்திலெடுக்கப்பட வேணும். அவற்றை விண்ணப்பதாரிகள் பின்பற்ற வேண்டும். அதனை பின்பற்றா விட்டால் அந்தப்பதவியை அவர் பெற்றுக்கொள்ள முடியாது. இங்கேயும் அப்படியான முறை கேடு நடந்திருப்பதாக அறியவருகின்றது. விண்ணப்பத்தை அனுப்பும் போது மேலதிகாரிகளினூடாக அனுப்ப வேண்டும் என்பது விதிமுறை. விளம்பரத்திலும் கூட அப்படி கேட்கப்பட்டுள்ளது. ஆனால், இங்கு அந்த விதிமுறை பேணப்படவில்லை. விளம்பரத்தில் கேட்கப்பட்டிருந்தும் விண்ணப்பம் மேலதிகாரிகளினூடாக அனுப்பப்படவில்லையென அறியப்படுகின்றது. அப்படியானால் அவ் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை.

இன்னுமொரு விடயம். போதிய கல்வித்தகைமை உடைய விண்ணப்பதாரிகள் இருந்தும், கல்வித்தகைமை இல்லாதவர் எப்படி எடுக்கப்பட்டார் என்பதும் புரியாத புதிர் ஆகும்! சேவைக்காலங்களை மதிப்பிடுவதாயினும், கல்வித்தகைமை மிக முக்கியம் ஆகின்றது. இதனை புதிய ஆயுள் வேத மருத்துவ யாப்பும் தெளிவாகக் கூறுகின்றது. அப்படி சேவைக்காலங்களை கணக்கிடுவதாயினும் கூட ஒரு M.B.B.S. தகைமை உடைய மாகாணப் பணிப்பாளர் பதவிக்கு சேவைக்காலம் கூடிய A.M.P. கல்வித்தகைமை உடைய வைத்தியர்களை நியமிப்பார்களா? முடியாது. ஆயின் இங்கேயும் அப்படியான உயர் கல்வித்தகைமையை பேணவேண்டியது முக்கியம் ஆகின்றது. ஆனாலும் அது நடக்கவில்லை!

இந்த குழறுபடிக்கெல்லாம் அந்த லிகிதரே காரணகர்த்தா என்றும் கூறப்படுகின்றது. நெருப்பு வைக்கின்ற ராசாவுக்கு எண்ணெய் ஊற்றுகின்ற மந்திரிபோல் நல்ல ராசா - மந்திரி திணைக்களம். மற்றவர்கள் பாடுதான் திண்டாட்டம்.

முன்பு குறிப்பிட்டது போல் வடக்கு - கிழக்கு மாகாண சபையில் எல்லாம் தலைகீழாகத்தான் நடைபெறுகின்றது இவற்றை யாரிடம் போய் முறையிட முடியும்? இங்கு யாருக்குத் தான் அதிகாரம் உள்ளது? ஆளுநர் ஒரு பக்கம் பார்க்கின்றார்... தலைமைச் செயலாளர் ஒரு பக்கம் பார்க்கின்றார்... பிரதிப்பிரதம செயலாளர் என்று எத்தனையோ அரசப் பிரதிநிதிகள்.... உண்மையில் யாரிடம் அதிகாரம் உள்ளது? தலைமைச் செயலாளர் இவற்றை அறிவாரா? அல்லது ஆளுநர் தான் இவற்றை அறிவாரா? சுதேச மருத்துவர்கள் இது பற்றி பல மகஜர்களை அனுப்பி விட்டார்கள்.

வட- கிழக்கு மாகாண சபை இவற்றையெல்லாம் கவனிக்குமா?

செயலாளர்
**வட- கிழக்கு மாகாண சுதந்திர சுதேச மருந்துவச்சங்கம், கைதடி**

## கிரகமாற்ற...

நடத்தும் கொள்கை காரணமாக இவ்வருடத்தினுள் பாரிய வேலை நிறுத்தங்கள் ஏற்படும். யுத்தம் மென்மேலும் சுமையாக மாறத் தொடங்கியுள்ளது. பலவந்தமாக இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வதைப் போலவே, பலவந்தமாகப் பாதுகாப்பு நிதிக்கு காசு தேடவும் வேண்டி வரும். இந்தியா மட்டுமல்ல வேறு நாடுகளும் கூடவே தமிழ்த் தேசியப் பிரச்சினையை தமது வேட்டைக்குரிய பொருளாகப் பயன்படுத்திக் கொண்டு இலங்கைக்குள் நுழையும். இப்பொழுது ஐக்கிய நாடுகள் சபையினூடாக அமெரிக்கா எமது நாட்டினுள் புகுந்து விட்டது. ஒலாரா ஒட்டுனு அவர்கள் இலங்கைக்கு வந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கதைத்து விட்டு அறிக்கை எடுத்துப் போனது எமது நாட்டின் சுயாதிபத்தியத்திற்கு விழுந்த பேரிடியாகும்.

ஏனெனில், ஐ.நா.சபையின் பின்னணியில் மேற்கத்தேய ஏகாதிபத்தியங்களே உள்ளன என்பது புதுக்கதை அல்ல. பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி பீடத்தில் உள்ளவரை இந்தியாவின் தலையீடுகள் அதிகரிக்கும். அவர்கள் அதிகாரத்தில் இருந்து இறங்கினாலும் தென் இந்தியாவின் நிர்ப்பந்தம் குறைவடைவதாக இல்லை. இதனால் அரசாங்கம் மென்மேலும் பிற்போக்கு அணிகளின் அணைப்புக் குள்ளாகும்.

இந்நிலைமையைப் பயன்படுத்த இப்போது ஐக்கிய தேசியக் கட்சி இடதுசாரி முகச்சாயலை வெளிக் காட்டியுள்ளது. அவர்களின் சுலோகங்கள் அநேகமானவை இடதுசாரிகளின் சுலோகங்களே ஆகும். அமெரிக்காவையும் கூட கடந்த காலங்களில் குழப்பத்துக்குள்ளாகும் அளவுக்கு இடதுசாரித்துவம் வாய்ந்தவை அவை. ராஜித சேனாரத்ன, சரத் அமுனுகம, தினேஷ் தொடங்கொட போன்ற புரட்சிகர முகங்களை ஆதாரமாகக் கொண்டு இப்போது இடதுசாரி கருத்துக்களை வெளிவிட்டுள்ளது. அவிந்த, பிரயோசனமற்ற பழைய பிற்போக்கு அதிகாரத் தரப்பினரை இப்போது குளிர் அறைகளினுள் அனுப்பிவிட்டனர்.

ரணில் ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு வித்தியாசமான சுலோகங்களை முன்வைக்கிறார். ஒரு வேளை யுத்தத்தை நன்றாகச் செய்கிறார்கள் இல்லை என்று கூறிக் கூச்சலிடுகிறார். இன்னொரு வேளை, யுத்தம் மாபெரும் அழிவாகும் என்று மரண ஓலமிடுகின்றார். நிறுவனங்களுக்குச் சுதந்திரம் கொடுக்கவில்லை எனச்சில நேரம் கத்துகிறார். வெளிநாட்டு கம்பனிகளுக்கு நாட்டை விற்கிறார்கள் என இன்னொரு வேளை கத்துகிறார். வேறு ஏற்றுக் கொள்ளக் கூடிய மாற்று ஒன்றை விரைவாக முன் வைக்காவிட்டால் இந்த ஏமாற்று விகட நாடகத்தை நோக்கியும் மக்கள் இழுபட்டுச் செல்லக் கூடும்.

இப்போது தொழிலாளர் மத்தியில் சீர்திருத்த வாதம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் உறுதிப்பாட்டை இப்போது வெளிக் காட்டுபவர்கள் பண்டார, பாலா தம்பு, ஹெட்டியாரச்சி ஆகிய மும்மூர்த்திகளாவர். ஆனாலும், இச் சீர்திருத்தவாதக் கூடாரம் கழன்று செல்லக்கூடிய வகையிலான மக்கள் அலையொன்று இவ் வருடம் ஏற்படும் போலுள்ளது.

தமிழில்: சி.கெ.ராஜா

## கொழும்பு வாழ்...

பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் எனக்கூறலாம்.

1. அமைப்பின் தலைமைக்குழு நான்கு சமூகத்தவரையும் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய வகையில் கூட்டுத் தலைமையாக இருத்தல் வேண்டும்.
2. அமைப்பின் தலைவர்பதவி குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை சுழற்சி முறையில் நான்கு சமூகத்தவர்களும் வரக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.
3. நான்கு சமூகங்களும் தத்தமது சொந்த நிறுவனங்களின் ஊடாக சொந்த அடையாளங்களைப் பேணலாம். ஆனால், அரசியலில் கொழும்புத் தமிழர் என்ற பொது அடையாளத்தினை பேணுதல் வேண்டும்.
4. அமைப்பின் கொள்கைகளிலும், பொது வேலைத் திட்டங்களிலும் நான்கு சமூகத்தினரதும் நலன்களுக்கும் உத்தரவாதம் அளித்தல் வேண்டும்.
5. பொதுத்தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் போது நான்கு சமூகத்தில் இருந்தும் சம அளவில் தெரிவு செய்யப்படல் வேண்டும்.
6. அமைப்பின் பொதுச்சபையிலும் நான்கு சமூகத்தவர்களும் சமமாக இருத்தல் வேண்டும்.

முடிவாக, கொழும்புத் தமிழ்ச் சமூகப்பிரிவுகள் பற்றியும் அதனை ஐக்கியப்படுத்துவது தொடர்பாகவும் மேலே என்னால் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் முடிந்த முடிவானவையல்ல. இது தொடர்பான விவாதத்தின் தொடக்கப் புள்ளிகளாக சில அம்சங்கள் மாத்திரமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. ஒரு மனம் திறந்த கலந்துரையாடலை கொழும்புத் தமிழர்களில் முன்னேறிய பிரிவினர் மத்தியில் நடாத்துவதன் மூலம் இவ்விடயத்தினை நாம் மேலும் முன்னோக்கிநகர்த்தலாம்.

## படையினரின் . . .

வைத்து நோக்கும்போது பெண்களுக்கு எதிராக இராணுவம் / பொலிஸ் போன்றவர்களால் மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைகள் செய்திகளாக வெளிவருகின்றனவே தவிர அந்தச் செய்திகளுக்கு முற்றுப்புள்ளி யாரும் வைப்பதாகத் தெரியவில்லை. இது தொடர்பான செய்திகளுக்கு அரசியல் கட்சிகள் முண்டியடித்துக் கொண்டு பத்திரிகைகளுக்கு கண்டன அறிக்கை விடுவதில் கவனம் செலுத்துவதோடு நின்று விடுகின்றன. மேலும் இது தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தி அவற்றிற்கான நீதிகளை கேட்பதற்கு யாரும் முன்வருவதில்லை.

யுத்தங்களின் போது பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்படுவது வரலாறாகி விட்டது. சீனப்புரட்சி, வியட்நாம் போர், பங்களாதேஷ் யுத்தம்... என்ற வரிசையில் இலங்கையின் உள்நாட்டு யுத்தம். இவை அனைத்திலும் பாலியல் துஷ்பிரயோகம் முதலிடம் வகிக்கின்றது. யுத்தம் என்பது சர்வதேச உடன்படிக்கைகளுக்கு ஏற்ப அதன் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப நடைபெறவேண்டும்.

கட்டுப்பாடுகள் என்பதற்குள் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை என்பதை மென்மேலும் வலியுறுத்த வேண்டும். ஏனெனில் யுத்தத்தில் ஈடுபடும் தரப்பினர் அதை மறந்த நிலையில் செயற்படுகின்றனர். யுத்தத்தில் பாலியல் பலாத்காரம் என்பது தொடர்கதையாகவே வருகின்றது. பாலியல் பலாத்காரம் செய்யும் இராணுவ வீரர்கள் கைது செய்யப்படுவதும், விசாரிக்கப்படுவதும் வெறும் வெளிப்பூச்சுக்களாக இருக்காமல் உண்மையான விசுவாசத்துடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவை முற்றுமுழுதாக நீங்க வழிவகை செய்யவேண்டும். அதுவே உண்மையான ஆரோக்கியமாகும்.

**செல்வி திருச்சந்திரன்**
**பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## அதுவும் இனவாதமல்லவா ?

உண்மையை விட உயர்ந்த மதம் வேறு ஒன்றும் கிடையாது என்ற தலைப்பின் கீழ் சரிநிகர் பெப்ரவரி 12ல் வெளிவந்த சாந்தியின் கட்டுரையில் தரப்பட்ட ஒரு விடயம் எனது சிந்தனையைச் சற்று கிளறியது. இயேசுநாதர் ''ஏழைகள் பாக்கிய வான்கள்'' என்று ஏன் கூறினார் என்பதற்கு தரப்பட்ட விளக்கம் எனக்குப் பல சந்தேகங்களைக் கிளப்பிவிட்டது. மத விளக்கங்கள் பல நிலப் பிரபுத்துவக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டன என்பது எனது எண்ணம். அதிகாரம் பறிக்கப்பட்டு ஒடுக்கு முறைக்குள்ளானதினால் மட்டுமே வாழ்வின் நீதி, அநீதிகளை மற்றவர்களை விடத் துல்லியமாக உய்த்துணரக் கூடிய பாக்கியத்தினைப் பெறலாம் என்று நிறுவ முற்பட்டால் வறுமையை நிரந்தரமாக ஒரு கூட்டம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒரு வாதம் எழும்பலாம். பௌத்த சிங்களவர் அல்லாத ஏனையோருக்கு அந்தப் பாக்கியம் நிரந்தரமாக இருந்தால் தான் உண்மைகளை உய்த்துணர்வார்களா? அப்படியாயின் அவர்களுக்கு விடுதலை கிட்டினால் அவர்களும் ஏனையோரை வர்க்கநிலையில், பால் நிலை ரீதியில், இன ரீதியில் ஒடுக்க முயல்வார்களா? அப்படி அல்ல என்பது என் கருத்து. வறுமையும், ஏழ்மையும் மாத்திரம் ஒருவருக்கு உய்த்துணரும் தன்மையைக் கொடுக்காது. வறுமையையும் ஏழ்மையும் பாக்கியம் என்று வறியோரும் ஏழைகளும் கருதமாட்டார்கள். அவர்கள் பாக்கியவான்கள் என்பதை மேல் தட்டு வர்க்கம் தான் கூறுகிறது. அவர்களது சிந்தனை அல்ல இது. அவர்களுக்காக ஏனையோர் சிந்திக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக அந்நிலையில் வைக்க விரும்பும் ஒரு கூட்டத்தாரது கருத்தே இது. நிலப்பிரபுத்துவத்திற்கு இதில் லாபம் உண்டு. இயேசுநாதர் அப்படிக் கூறியிருந்தால் அதை திரும்பத் திரும்பக் கூறி அதற்கு நியாயம் தேடுவது சரியல்ல.

சாந்தியின் சிங்கள நண்பர்கள் எல்லோரும் ஜனாதிபதியின் சிங்கள பௌத்த வாதத்தை நன்றாக இருந்தது என்று கூறியது துர்பாக்கியமே. அதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஒடுக்கு முறைகளுக்குட்படாத சிங்கள பௌத்தர்களில் எத்தனையோ பேர் இதைப் பற்றிப் பேசினார்களே, எழுதியுள்ளார்களே, உய்த்துணர்ந்தார்களே, கண்டித்தார்களே. இதை நாம் எப்படி மறுக்க முடியும்? மறைக்க முடியும். ஒட்டு மொத்தமாக சிங்கள மக்கள் எல்லோரையும் உய்த்துணரும் ''பாக்கியவான்கள்'' அல்ல என்று கூறுவதும் இனவாதமாகிவிடும். ''பாக்கியவான்கள்'' இந்த இனவாதப் படுகுழியிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வறுமை தரும் ''பாக்கியத்தை'' ஏனையோருக்கும் கொடுத்து வறுமையை நாம் ஒழிக்க முயல வேண்டும்.

**பத்மசிறி யோகநாதன்,**
கொழும்பு 06

## அதற்கு ஒரு பெண்ணிலைவாத நியாயமுமுண்டு !

சரிநிகர் 145ம் இதழில் அரவிந்தன் என்பார் டானியலின் எழுத்துத் தொடர்பாகச் சிறிது எழுதியுள்ளார். இங்கு, டானியல் பற்றிய விமர்சனங்கள் எந்தக்கோணத்தில் முன்வைக்கப்படுகின்றன என்பதையொட்டியே சில மதிப்பீடுகள் அமைகின்றன என்பது பற்றிய மயக்கங்கட்கு இடமில்லை.

டானியலின் எழுத்தில் 'உயர்சாதிப்' பெண்கள் பற்றி உள்ள பார்வையை பாரதியின் ''தனியொருவனுக்கு உணவில்லையெனின் சகத்தினை அழித்திடுவோம்'' என்ற கூற்றுடன் ஒப்பிடும்போதும் ராமாயணத்தின், லங்கா தகனத்துடன் உவமை தேடும் போதும் சில சிந்தனைக் குழப்பங்கள் தென்படுகின்றன. இதே விதமான அபத்தமே கணேசலிங்கன் காதல் பற்றி வைத்திருக்கும் பார்வையை தொல்ஸ்தாயின் மனித விடுதலை பற்றிய பார்வையுடன் ஒப்பிடுகையில் நிகழுகிறது.

டானியலுடைய எழுத்தில் 'உயர்சாதிப்'பெண்கள் தாழ்த்தப்பட்ட சாதி ஆண்களுடன் கொள்ளும் பாலுறவில் ஒரு வகையான பழிவாங்கல் உணர்வு காணப்படுவது பற்றிய முக்கிய ஆட்சேபனை, பெண்ணுரிமையும் பெண்ணிய நியாயமும் சார்ந்தது. டானியலின்பின்னைக்காலப் படைப்புக்களில் இவ் விடயத்தில் சில மாற்றங்கள் தென்பட்டதாக நான் எண்ணுகிறேன்.

சாதியத்துக்கு எதிரான போராட்டம், ஈழத்தின் வர்க்கப் போராட்டத்தின் ஒரு அம்சமாகவே, கருதப்பட்டு தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தாரால் முன்னெடுக்கப்பட்டது. இதற்கு இலங்கையின் மார்க்சிய - லெனினியர்களுடைய தயக்கமற்ற ஆதரவும் தலைமைப்பங்கும் பற்றியும் நாம் அறிவோம். டானியலின் நாவல்களில் இந்தப் பார்வையுடனான முரண்பாடுகளை நாம் அடையாளங்காணலாம். எனவே தான் டானியலது பார்வை ஒரு மார்க்சியப் பார்வையாகத் தவறுகிறது என்ற விமர்சனமும் எழுகிறது. இந்தக் குறைபாட்டை மட்டும், காரணமாக்கி டானியலது எழுத்தின் முக்கியத்துத்தையும் அதன் அடிப்படையான நியாயத்தையும் எவரும் மறுப்பது முறையாகாது.

அதேசமயம், தேசிய விடுதலைப் போராட்டத்தின் சார்பாயும் பிற மனித ஒடுக்குமுறைகட்கு எதிரான வலிய போராட்டங்கள் சார்பாயும் எழுதுவோரின் கவனத்துக்குரிய ஒரு விடயத்தை இங்கு குறிப்பிடலாம். இஸ்ரேலியர் மேற்கொண்டுள்ள இன ஒடுக்கலுக்கு எதிரான உன்னதமான பலஸ்தீன விடுதலை இயக்கப் படைப்புக்கள் பலவற்றைக் கண்டுள்ளேன். எந்த ஒரு நல்ல படைப்பாளியும் யூதர்களை நிந்தித்து எழுதிய ஒரு சொல்லையும் இதுவரை நான் வாசித்ததில்லை. இவ்வாறே தென்னாபிரிக்க கறுப்பு இன மக்களது உன்னதமான விடுதலைப் போராட்ட இலக்கியங்கள் வெள்ளை நிறத்தவர்கட்கும் வெள்ளைநிற வெறியர்கட்கும் தெளிவாகவே வேறுபாடு காட்டுகின்றன.

வெறுமனே வக்கிரம் என்ற சொல்லைப்பயன்படுத்தி டானியலைத் தட்டிக்கழிக்கும் முயற்சிகள் டானியல் பற்றிய நியாயமான மதிப்பீட்டுக்கு உதவமாட்டா. அதேவேளை, நமது விவாதங்கள் கற்பு, சோரம் போதல் போன்ற பல்வேறு விடயங்களில் பெண்களது சமத்துவமும் உரிமைகளும் பற்றிக் கூடிய அழுத்தம் செலுத்துவதும் நல்லது.

லயனல் போபகேயின் நேர்காணல் ஒரு சில விடயங்கள் பற்றிய ஐயங்களை இன்னமும்மிச்சம் விட்டுள்ளது. உதாரணமாக, மலையகத் தமிழர்கட்கு விரோதமாக ஜே.வி.பி. ஏடுகள் பலதையும் எழுதிவந்த போது அது பற்றிய கண்டனங்களும் பிறரால் முன்வைக்கப்பட்டன. ஜே.வி.பி தலைமை இது பற்றி மறுப்பாக ஏதாவது அறிக்கை விட்டதா? 1982 அளவில் விஜேவீர யாழ்ப்பாணம் போனபோது ஈழப் பிரிவினைக் கோரிக்கைக்கு ஆதரவான தொனியில் பேசியதும் மறுவாரமே தெற்கில் நாட்டின் பிரிவினைக்கு என்றும் உடன்படமாட்டேன் என்று வீராவேசத்துடன் பேசியதும் பற்றிய சில நினைவுகள் எனக்கு உள்ளன.

1976முதல் 1980 வரையிலும் ஐ.தே.க.வுக்கும் ஜே.வி.பி.க்கும் இடையே ஒரு முக்கியமான புரிந்துணர்வு இருந்தது என்பதும் ஒரு முக்கியமான கேள்வி. எதிர்க்கட்சிக் கூட்டங்களைக் குழப்புவதில் ஜே.வி.பி.யின் அன்றைய பங்கு என்ன?

தொழிலாளி வர்க்கத்தை 1970 - 71ல் ஜே.வி.பி. நிராகரித்து, நிந்தித்துரைத்த பல கூற்றுக்கள் இன்னமும் பலருக்கு நினைவில் இருக்கலாம்.

வீஜேவீர சண்முகதாசனின் தலைமையை நிராகரிப்பதற்கு இனவாத அடிப்படையிலான வாதங்கள் எதையுமே பயன்படுத்தவில்லையா?

**சிவசேகரம்,** கொழும்பு

## ஜூன்-19 ...

பசயயுமாறு கோரியிருந்தது. இதன் நிமித்தம் 19.6.1968ல் மு. திருச்செல்வம் தமது பதவியைத் துறந்தார். ஆனால் தமிழரசுக் கட்சி ஐ.தே.கவுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவதை விலத்திக் கொள்ளவில்லை.

இன்று 1998 ஜூன் 19.

இந்த 68-98க்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் அரசியல் நிலைமைகள் எவ்வளவோ படுமோசமாக மாறிவிட்டன. தமிழர்களுக்கான அரசியல் போராட்டம் ஆயுதம் தாங்கிய ஒன்றாகவே பரிணமித்து விட்டது. தமிழர்களுக்கான பல்வேறு அரசியல் தலைமைத்துவங்கள்.

தமிழரசுக்கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணியாக மாறிவிட்டது.

பல்வேறு விடுதலை இயக்கங்களாக செயற்பட்டவை. பின்னர் அவை ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைகள் தீர்க்கப்படலாம் என்ற உறுதியான நம்பிக்கையில் இலங்கைத் தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டுள்ளன.

தமிழர்களது வாழ்வியலிலும் எவ்வளவோ நெருக்குவாரங்கள்... அகதி முகாம்களிலும், சோதனைச்சாவடிகளிலும்... வகைதொகையின்றி கைதுகள் செய்யப்பட்டு சிறைச்சாலைகளிலும்.. இப்படி இன்னோரன்னவை அதிகம்... அதிகம்...

தமிழர்களாக இருப்பது என்பதைவிட வேறு காரணம் ஏதும் இதற்குத் தேவையில்லை. நிற்க,

இன்று திருமலை முன்னைய கோணேசர் புனித பிரதேசமாக்கல் என்பதையும் கடந்து திருமலைப் பிரதேசமே சிங்கள மயப்படுத்தப்பட்ட பிரதேசமாக மாற்றப்பட்டு வருகின்றன.

திருமலையில் 1921ல் 4.4 வீதமாக காணப்பட்ட சிங்களவர் தொகை 1981ல் 33.6வீதமாக அதிகரித்துள்ளன. இதே காலப்பகுதியில் தமிழ் மக்கள் 54.5 வீதத்திலிருந்து 36.4 வீதமாகவும், முஸ்லிம்கள் 37.7 வீதத்திலிருந்து 29 வீதமாகவும் குறைந்து கொண்டே செல்கின்றன. 1998க்குள் இது மேலும் குறைந்து கொண்டே இருக்க வேண்டும். இன்று திருமலை முழுச்சிங்கள மயப்படுத்தப்பட்ட பிரதேசமாகவே மாறிவிட்டது

அன்று தமிழரசுக் கட்சி தனது எதிர்ப்பை தெரிவிக்குமுகமாக அமைச்சர் பதவியை துறந்து எதிர்ப்பை தெரியப்படுத்தியது.

ஆனால் இன்றைய அனைத்துக்கும் பின்னர் வந்த தமிழ்க்கட்சிகள் யாவும் எதைத்துறந்து தமது எதிர்ப்பைக்காட்டுவர்... நாம் பதிலுக்கு கண்ணை மூடிச் சிந்திப்போம்.

## மோர்ஜ் தலைவருக்கு
## ஆனந்தசங்கரியின் கடிதம் !

சரிநிகர் 142வது இதழில் வாசகர் சொல்லடி பகுதியில் வெளிவந்த கடிதம் ஒன்று தொடர்பாக தமது அதிருப்தியை ஆனந்த சங்கரி அவர்கள், மோர்ஜ் பிரதித் தலைவர் நிமால்கா பெர்ணாண்டோ அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அவரது கடிதத்தின் முழுமையான மொழி பெயர்ப்பினை எத்தகைய அபிப்பிராயமுமின்றி கீழே தருகிறோம்.

''சரிநிகர் 142வது இதழின் 19வது பக்கத்தில் வெளியான கடிதம் ஒன்று தொடர்பாக உங்கள் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் இக்கடிதத்தை எழுதுகிறேன். இக்கடிதத்தை எழுதிய யாழ்ப்பாணம் தென்மராட்சியிலுள்ள மிருசுவிலைச் சேர்ந்த கே. செந்தில்நாதன் என்பவர் கடந்த 10 ஆண்டு காலமாக யாழ்ப்பாணத்தில் மக்கள் பெரும் துன்பங்களுக்குள்ளாகியிருக்கும்போது இந்திய தமிழ் நாட்டு அரசாங்கத்தின் விருந்தினராக நான் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வந்ததாக குற்றம் சாட்டியுள்ளார். தவிரவும், மக்கள் விரும்பாத ஒரு தேர்தலில் பங்கு கொள்வதற்காக நான் அரச பாதுகாப்புப் படைகளுடைய பாதுகாப்பில் யாழ்ப்பாணம் வந்ததாகவும், அதில் பங்குபற்றியதாகவும் தெரிவித்துள்ளார்.

''அவர் இன்னொரு அரசியல் கட்சியை சேர்ந்த சில சட்டத்தரணிகளை, அவர்கள் கைதடி பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலை தொடர்பான வழக்கில் வாதாடியதற்காகவும் படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்காக ஆஜரானதற்காகவும் மிகவும் உயர்ந்த கௌரவத்தைக் கொடுத்திருக்கும் அதே வேளை நான் அதைச் செய்யவில்லை என்று என்னை குற்றம் சாட்டியிருக்கின்றார். நான் 1969இலேயே எனது சட்டத்தரணித் தொழிலை கைவிட்டு விட்டேன். தவிரவும் இவர் குறிப்பிடும் சட்டத்தரணிகள் இந்த வழக்குகளில் எல்லாம் ஆஜரானார்கள் என்று நான் நினைக்கவில்லை.

நான் தமிழ் நாடு அரசாங்கத்தின் விருந்தாளியாக 1983ல் ஒரு நான்கு மாத காலம் மட்டுமே இருந்திருக்கிறேன் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த 10 ஆண்டுகளாக நான் எந்த சொகுசு வசதிகளுமற்ற நிலையில், ஆபத்தான ஒரு வாழ்க்கையையே வாழ்ந்து வருகிறேன். உள்ளூராட்சி சபைத்தேர்தல் நடாத்துவதை நாம் கண்டித்திருந்தோம். அதில் நாம் பங்குபற்றியதற்கான காரணம் யாழ் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை தாம் நடாத்துவதுதான் என்று அரசாங்கம் உறுதியாக தீர்மானித்தது தான்.

எனக்கோ அல்லது தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட காலம் சென்ற சரோஜினி உட்பட யாருக்குமோ எத்தகைய பாதுகாப்பும் இருக்கவில்லை. உண்மையில், ஜனவரி 22ம்திகதியிலிருந்து 60 நாட்களுக்கு மேலாக நான் யாழ்ப்பாணத்தில் எந்தவித பாதுகாப்பும் இன்றியே இருந்தேன். திருவாளர்கள் சேனாதிராசா, சிவபாலன் ஆகியோரும் எந்தவித பாதுகாப்பும் இன்றி நீண்ட நாட்களாக அங்கு தங்கியிருந்தார்கள்.

147வது இதழிலும் 5ம் பக்கத்தில் என்னைப்பற்றி சில நையாண்டியான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இது தேவையற்றதும் என்னை மாசுபடுத்தவுமே திட்டமிட்டு எழுதப்பட்டுள்ளது என்று நான் கருதுகிறேன்.

நாம் ஒரு ஆயுதமேந்தாத குழு. நிச்சயமாக நாம் எம்மைச்சுற்றி ஆயுதம் ஏந்திய காவலர்கள் இருப்பதை விரும்பவில்லை. அது எமது மக்களுடனான எமது ஊடாட்டத்தை பாதிக்கும் என்று கருதுகிறோம்.

உங்களது சரிநிகர் பத்திரிகை, த.வி.கூ. மீதும் அதன் தலைவர் மீதும் இத்தகைய மட்டுமீறிய வெறுப்பைக் காட்டுவது ஏன்? ஒரு அரச சார்பற்ற நிறுவனம் தனது விமர்சனங்களில் நியாயமாக இருக்க வேண்டுமென்பது உங்கள் கடப்பாடல்லவா?''

இவ்வாறு அவர் தன் கடிதத்தில் கேட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

## சுட்டது அவர்கள் தான்!

அண்மைக்காலமாக களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினரின் செயற்பாடுகள் இப்பகுதி மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டே வருகின்றன. கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடுத்தல் கண்மூடித்தனமான இளைஞர்கள் மீதான தாக்குதல் மாணவர்கள், மீது அரச ஊழியர்கள் என்ற பாகுபாடற்ற நிலையில் முகாமுக்கு அழைத்து கையொப்பமிட வைத்தல் என்பன இப்பகுதி மக்களை வதைத்துக் கொண்டே வருகின்றன.

இவ்வாறான ஒரு சம்பவம் கடந்த 2.6.98பெரிய நீலாவணை பகுதியில் இடம்பெற்றிருக்கிறது. சம்பவதினம் பெரியநீலாவணை 25 வீட்டுத் திட்டப் பகுதிக்கு ரோந்து சென்ற இவர்கள் செல்லையா ஆனந்தராசா (26), தங்கராசா புஸ்பராசா (21) என்ற இரு இளைஞர்களையும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு என்று கூறி சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். சம்பவம் நடைபெற்ற தினம் கடற்கரையில் கரைவலை இழுத்துக்கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த படையினர் இவர்கள் இருவரையும் அழைத்து இவர்களின் சேட்டுக்களை கழற்றி கைகளைக் கட்டியபின் மிகவும் மோசமான முறையில் தாக்கியிருக்கின்றனர். அதிரடிப்படையினர் அவ்விடத்தை விட்டு செல்லும் போது இவர்கள் இருவரையும் சுட்டு விட்டுச் சென்றார்கள் என்று அப்பகுதியில் இருந்தவர்கள் கூறுகின்றார்கள். இவர்களுடைய சடலங்கள் களுவாஞ்சிக்குடி பொலிசாரினால் கல்முனை பொலிசாருக்கு ஒப்படைக்கப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. ஆனந்தராசாவினுடைய சடலம் மாத்திரம் குடும்பத்தினரால் அடக்கம் செய்யப்பட்டது. புஸ்பராசாவினுடைய சடலம் வைத்தியசாலை செலவிலே அடக்கம் செய்யப்பட்டது. புஸ்பராசா திருமணம் முடித்தவர். ஒரு வயது குழந்தையும் இவருக்கு இருக்கின்றது. குடும்ப கஸ்ர நிலைமை காரணமாகவே இவரது சடலம் வீட்டுக்கு கொண்டு வரப்படவில்லை என இவரது உறவினர்கள் கூறுகின்றார்கள்.

## யார் அந்தப் பெண்?

மட்டக்களப்பு கிரானி துறையடி இராணுவ முகாமுக்கு கிட்டத்தட்ட 50 மீற்றர் தொலைவில் உள்ள கிண்ணியடி வாவியில் இருந்து 18வயது தொடக்கம் 20 வயது மதிக்கத்தக்க இளம்பெண்ணின் சடலம் கடந்த மாதம் 24ம்திகதி பொதுமக்களால் மீட்கப்பட்டுள்ளது. மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சந்திரபாலன் சமர்ப்பித்த பிரேத பரிசோதனை அறிக்கையில் இப்பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே கழுத்து நெரித்து கொல்லப்பட்டு வாவியில் வீசப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இப்பெண்ணின் சடலத்தை இதுவரை யாரும் உரிமை கோராததாலும், இப்பெண் அணிந்திருந்த நீளக் காற்சட்டையும், சேட்டையும், குட்டையாக வெட்டப்பட்ட தலைமுடியையும் வைத்து இப்பெண் புலியுறுப்பினராக இருக்கலாம் என்றும், இதை அவர்களே செய்திருக்கலாம் என்றும் இராணுவ தரப்பினர் கூறுகின்றனர். புலிகளின் முக்கிய உறுப்பினரிடம் இதுபற்றி கேட்ட போது தங்களின் போராளிக் குழுக்களிலுள்ள பெண் போராளிகள் யாரும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இராணுவத்திடம் சரணடையவும் இல்லை, பிடிபடவும் இல்லையெனவும், வேறு பிரதேசங்களில் கைது செய்யப்பட்ட பொது மக்களாக இருக்கலாம் எனவும் தெரிவித்தனர். இம்முகாமில் உள்ள இராணுவத்தினர் இரவு வேளையில் அருகில் உள்ள வீடுகளுக்குச் சென்று பெண்களை பாலியல் வல்லுறவுக்கு பலாத்காரப் படுத்துவதும் இச்சந்தர்ப்பங்களில் தடுக்கமுயலும் குடும்பஸ்தர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவங்களும் இப்பகுதியில் இடம்பெற்றுவது குறிப்பிடத்தக்கது.

## எதற்கும் அனுமதி வேண்டும்!

அண்மையில் வடமராட்சிப் பகுதிக்குப் பொறுப்பான இராணுவத்தளபதி லெரி விஜயரட்ன கொல்லப்பட்டதைத் தொடர்ந்து வடமராட்சிப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வடமராட்சிப்பகுதி மக்கள் அனுபவித்துவரும் துன்பங்கள் சொல்லிலடங்கா. ஒவ்வொரு 25 யார் தூரத்திற்கும் ஒவ்வொரு சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் வாகனங்களில் வருபவர்கள் ஒவ்வொரு 25 யார் தூரத்திலும் இறங்கி படையினருக்கு சல்யூட் அடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு நெல்லியடியை வந்தடைவதற்கிடையில் பதினைந்து இடங்களில் சல்யூட் அடிக்க வேண்டியுள்ளது. இதனால் வடமராட்சியிலிருந்து யாழ் நகருக்கு வரும் உத்தியோகத்தர்களும், பாடசாலை மாணவர்களும் உரிய நேரத்திற்கு பாடசாலைகளுக்கோ, அலுவலகங்களுக்கோ சமூகமளிக்க முடியாமல் உள்ளது. பருத்தித்துறையிலிருந்து புறப்படும் பஸ் வண்டிகள் யாழ்நகரை வந்தடைவதற்கு மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாகின்றன. முன்பு இராணுவப் பாதுகாப்புடன் பஸ் சேவை நடாத்தப்பட்டு வந்தது. இது தற்போது நிறுத்தப்பட்டு விட்டது.

சோதனை நடவடிக்கைகளும், தற்போது வடமராட்சிப்பகுதியில் அதிகரித்துள்ளன. நள்ளிரவு வேளைகளிலும், வீடுகள் சோதனையிடப்படுகின்றன. வடமராட்சிப்பகுதி மக்கள் வடமராட்சியை விட்டு எங்காவது செல்வதாயின் இராணுவத்தின் அனுமதிப்பெற்றே வெளியேற வேண்டியுள்ளது. பயம் காரணமாக அயல்வீடுகளில் சென்று தங்க முடியாது. காரணம் திடீரென படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டால் குடும்ப அங்கத்தவர்களை விட மேலதிகமாக யாராவது நின்றால், அவர்கள் கைது செய்யப்படுவர்கள். இந்தக் கெடுபிடிகளால் வடமராட்சி மக்களில் அநேகமானோர் தற்போது யாழ்நகரில் வீடு தேடித் திரிகின்றனர்.

**எழுவான்**

## எதிராளி இல்லாத யுத்தம்!

விடுதலைப் புலிகளைச் சந்திக்காமல் திருகோணமலையில் ஜயபூமி இராணுவ நடவடிக்கை பூர்த்தியாகியுள்ளதாக அரச தொடர்புச் சாதனங்கள் கூறுகின்றன. மே. 30ல் ஆரம்பிக்கப்பட்ட நான்கு நாள் நடவடிக்கை புலிகளற்ற மூன்று முகாம்களை அழித்ததோடு, கொக்கிளாய் வரையிலான கடற்பகுதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் மூலம் பூரண வெற்றியடைந்திருப்பதாக அத் தகவல்கள் கூறுகின்றன.

எதிரணி இல்லாமல் திருகோணமலையில் ஆடப்பட்ட இரண்டாவது இராணுவ ஆட்டம் இதுவாகும். ஏப்ரல் 29ம் திகதியும் இவ்வாறான ஆட்டமொன்று புலிவேட்டை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு மூதூர் கிழக்கில் புலிகள் துடைத்தெறியப்பட்டதாகப் பறைசாற்றி இரண்டாம் நாள் 64ம் கட்டை பொலிஸ் அரண் நிர்மூலமாக்கப்பட்டு பத்து பொலிசாரும், ஒரு இராணுவமும் கொல்லப்பட்டனர்.

ஜயபூமி நடவடிக்கையும் புலிகளுக்கு பாதிப்பு எதனையும் உண்டுபண்ணியதாகத் தெரியவில்லை. நகரிலிருந்து வடபுறம் நோக்கிய கரையோரக் கிராமங்களில் விடுதலைப் புலிகள் வழக்கம் போலவே வந்து போகிறார்கள். செல்ல வேண்டிய இடத்தையும் நேரத்தையும் தீர்மானிப்பதற்கு அவர்களுக்குத் தடையேதும் இருப்பதாகத் தெரியவில்லை.

கைவிடப்பட்ட புலிகள் முகாம்களே கண்டுபிடித்து அழிக்கப்பட்டதாகப் பொது மக்கள் கூறுகிறார்கள். முகாம்களிலிருந்து எந்தப் பொருளும் மீட்கப்படவோ, புலிகள் காயப்படுத்தப்படவோ இல்லை என்பதை நோக்கும் போது இக் கூற்று சரியாகவே படுகிறது. அத்துடன் ஜயபூமி நடவடிக்கையால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட கடற்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதியுமல்ல. அவர்களது போக்குவரத்துக்குக் கஷ்டமாக இருந்த பகுதியுமல்ல. ஜயபூமி நடவடிக்கைக்குப் பின்னரும் நிலைமையில் மாற்றமில்லை.

இது இவ்வாறிருக்க, மே. 23ம் திகதி காலை 7.15 மணியளவில் பஸ்ஸுக்காகக் காத்து நின்ற பொலிஸ்காரர் ஒருவர் சாம்பல்தீவுச் சந்தியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். ரத்நாயக்க என்ற இந்தப் பொலிஸ்காரர் பொலிஸ் முகாமுக்கு அருகில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்ட போதிலும், சுட்டவர்களைப் பொலிசாரால் பிடிக்க முடியவில்லை. ஆத்திரம் கொண்ட பொலிசார் சரமாரியாகத் திருப்பித் தாக்கியதில் ராசக்குட்டி என்றழைக்கப்படும் வேலுப்பிள்ளை தவராசா (31) கொல்லப்பட்டிருக்கிறார். இவர் வளவுக்குள் நின்ற வேளையிலேயே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

மே. 30ம்திகதி இரவு 8.45 மணிக்கு புகையிரத நிலையக் காவலரணில் கடமைக்கு நின்ற சமரசிங்க என்ற பொலிஸ்காரர் விடுதலை புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். கூட நின்ற செனரத் பண்டா என்பவர் காயமடைந்தார். காவல் நிலையம், காவற்கோபுரம், கண்காணிப்பரண்கள் இரண்டு என்பவற்றுக்கு நடுவே நகரில் அமைந்திருந்த இந்தக் காவலரணைப் புலிகள் தாக்கிவிட்டு பத்திரமாகத் திரும்பிச் சென்றது நகர்ப்புறக் காவலரண்களுக்கு ஓர் ஆபத்தான அறிகுறியாகும். புலிகள் கடல் மார்க்கமாக வந்து சென்றிருக்கக் கூடும் என்றே நம்பப்படுகிறது.

இதற்குப் பதிலடியாக இக்காவலரணுக்கு வடபுறத்தே ஆறு கிலோமீற்றர் தொலைவிலுள்ள சல்லிப்பொலிசார் திருப்பிச் சுட்டதில் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மா. குட்டிராசா என்ற நபர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் இரவு 9.30க்கு இடம்பெற்றிருக்கிறது.

அன்றைய தினம் 7.20 மணியளவில், அன்புவழிபுரம் பகுதியில் வைத்து யூசுப் என்றழைக்கப்படும் வியாபாரி பொருவர் விடுதலைப்புலிகள் என நம்பப்படுவோரால் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார். பாலையூற்றை இருப்பிடமாகக் கொண்ட இவர் அன்புவழிபுரத்தில் ஒரு வீட்டில் இருந்த வேளையிலேயே மிதி வண்டியில் ஏற்றிச் செல்லப்பட்டிருக்கிறார். இச்செய்தி எழுதும் வரை அவர் விடுதலை செய்யப்படவில்லை.

மே. 31ம்திகதி மூதூரில் நொக்ஸ் வீதியில் வைத்து விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார். இரவு 10.30 மணியளவில் இச்சம்பவம் நடந்திருக்கிறது. மூதூரை நோக்கி விடுதலைப்புலிகள் குழுவொன்று வந்தபோது எதிர்பாராத விதமாக அங்கு காவலில் நின்ற பொலிசார் தாக்கியதில் ஜனார்த்தன் என்றழைக்கப்படும் விடுதலைப்புலி கொல்லப்பட்டார். அவரது ஆயுதங்களும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன. பாதுகாப்பாகப் பின்வாங்கி விட்டதாக மூதூர்ச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த நாள், திங்கட்கிழமை பகல் 11.30 மணியளவில் நிலாவெளி இராணுவ முகாமுக்கு எதிரே கடைபோட்டிருந்த மன்னன் என்றழைக்கப்படும் நபரொருவர் கடைக்குள் வைத்தே விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். பொருட்கள் வாங்குபவர்கள் போல் வந்த இருவர் இக்கொலையைச் செய்து விட்டுத் திரும்பிப் போயிருக்கிறார்கள்.

திருகோணமலை நகரினுல் பாதுகாப்புப் பலவீனமடைந்திருப்பதைப் படைத்தரப்பு நடவடிக்கைகளே உறுதிய செய்துள்ளன. ஜுன் 4ம்திகதி பாதுகாப்பு மிகுந்த இடத்திலமைந்துள்ள கச்சேரியில் நடைபெறவிருந்த மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் திடீரெனக் கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்டது. செயலகம் கோட்டைக்குள் அமைந்துள்ளதென்பதும் அங்கு பெரிய நிரந்தர இராணுவத்தளம் உள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. திருகோணமலையில் மிக உயர்ந்த பாதுகாப்பு வலயங்களிலொன்றாக இந்த இடம் அமைந்துள்ளது.

நகர வீதிகளிலும் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. மெல்ல மெல்ல நிலைமை சீர்குலைந்து வருவதையே இவை புலப்படுத்துகின்றன.

**திரிபுரன்**
**(2.6.98)**

## இலேசான இலக்கு!

இப்போது நாடுமுழுவதும் இடம்பெற்றுவரும் டெலிகொம் மத்திய நிலைய மற்றும் மின்மாற்றிகள் குண்டு வைத்து தகர்க்கப்படும் சம்பவங்கள், புலிகளினால் மேற்கொள்ளப்பட்டவையென இரகசியப் பொலிசாரின் தேசிய தகவல் பிரிவு மேற்கொண்ட விசேட விசாரணைகளின் அறிக்கையில் அரசுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது எனத் தெரிய வருகின்றது.

வடக்கில் நிலவும் யுத்தத்திற்கு தடைவிதிக்கும் முகமாக புலிகள் நாட்டின் அமைதி நிலவும் பிரதேசங்களில் இவ்வாறான சம்பவங்களை மேற்கொள்வதன் மூலம், பாதுகாப்பு படையினரை பிற பிரதேசங்களுக்கு அனுப்ப நேர்வதால் வடக்கு - கிழக்கு நடவடிக்கையின் பலம் குறைவடையும் என அவர்கள் எண்ணியுள்ளனர் என்பதையும் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளனர் என மேலும் தெரிய வருகின்றது.

இக்குண்டு வெடிப்புகள், அரசின் உயர் மட்ட கூட்டத்தின் போதும், பாதுகாப்பு கூட்டத்தின் போதும், அதிகாரிகளுக்கிடையே விசனத்தை ஏற்படுத்தியதாகவும் இதன் காரணமாக இதன் உண்மை நிலைமைகளை அறிந்து கொள்ளுமாறு ஜனாதிபதி அவர்கள் தனிப்பட்ட முறையில் தேசிய தகவல், பிரிவிற்கு கோரிக்கை விடுத்துள்ளார் எனவும் தெரிய வருகின்றது.

மலையகத் தோட்டப்புறங்கள் போன்று, டெலிகொம் தகவல் பரிமாற்ற நிலையங்கள், மின்மாற்றி உள்ள இடங்கள் போன்ற பாதுகாப்பு குறைவான பிரதேசங்களை இலக்காகக் கொள்வதானது தாக்குதல் தொடுக்க இலகுவாக இருப்பதால் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் உள்ள டெலிகொம் தகவல் பரிவர்த்தனை நிலையங்கள் மற்றும் மின்மாற்றிகள் என்பனவை குண்டு வைத்து தகர்க்கப்பட்டதன் காரணமாக பல மில்லியன் ரூபாய்கள் நட்டம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது தகர்க்கப்பட்ட டெலிகொம் நிலையத்தின் பெறுமதி மட்டும் ரூ. 50 மில்லியன்களாகும்.

மேலும், இவ்வாறான பிரதேசங்களுக்கு பாதுகாப்பைப் பெற்றுத் தருமாறு தொடர்பு சாதனத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் பிரதி பாதுகாப்பமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் எனவும் தெரியவருகின்றது. எவ்வாறாயினும், களுத்துறை, குளியாப்பிட்டி, நொச்சியாகம, களுவாஞ்சிக்குடி போன்ற பிரதேசங்களின் டெலிகொம் தகவல் பரிமாற்ற நிலையங்களில் குண்டு வெடித்துள்ளதுடன், இதில் ரூ. 40 மில்லியனுக்கு அதிகமான நட்டம் களுத்துறை நிலைய வெடிப்பில் மட்டுமே ஏற்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ரூபவாஹினியில் காண்பிக்கப்பட்ட 'மண்டையன் தொலைக்காட்சி அளிக்கை பற்றிய கருத்தாடலொன்றை 13-06-98 மாலை 3க்கு வெள்ளவத்தை 58, தர்மராம வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள WERC யில் பூஜியம் கலைவட்டம் நடத்துகின்றது.

**அனுசரணை ஆதரவு:**
விபவி கலாசார மையம்

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன், இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற் இன், இல. 07, கெகுடிய இடம், சிறிமல் உயன இரத்மலானை. 09.06.1998

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்